நிலா காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



3

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம் வாசகர்களே...
நாம் என்னவோ நினைத்தோம் வந்தியத்தேவனை. ஆதித்த கரிகாலர் தேர்வு செய்து அவனிடம் ஓலை கொடுத்தனுப்பியது சரிதானா என்று? அவன் இந்த வேலைக்கு மிகச் சரியானவன் என்பதை நிரூபித்துவிட்டான் அல்லவா! கடம்பூர் கோட்டைக்குள் நுழைய அவன் செய்த யுக்தி, தஞ்சை கோட்டையை விட்டு தப்பி பழையாறை கோட்டைக்குள் அவன் நுழைய, கம்ச வேடம் பூண்டது, எல்லாமே சரிதான். ஆனால், இந்த ஆழ்வார்க்கடியானின் கண்ணில் அகப்பட்டுவிட்டான் பாருங்கள், அதுதான் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு வேளை அவன், பழுவேட்டரையரின் ஆட்களிடம் சிக்க வைத்துவிட்டால், பாதாள சிறைதான் வந்தியத்தேவனுக்கு. என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் வாருங்கள்.


செம்பியன் மாதேவியின் அரண்மனை
சபா மண்டபத்தில் நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் செம்பியன் மாதேவி வீற்றிருக்க, அவரை சந்திப்பதற்காக பல தேசங்களிலிருந்து சிற்பிகளும், ஓவியர்களும், சிவனடியார்களும் கூடவே ஆழ்வார்க்கடியானும் அவனுடைய அண்ணன் ஈசான சிவபட்டரும் வந்திருக்கிறார்கள்.
ஸ்தபதிகளே! அதை அருகில் கொண்டு வாருங்கள்.


ஒருவர், தான் புதிய முறையில் வடிவமைத்த கற்றளியை, பொம்மை வடிவில் செய்து கொண்டு வந்து தேவியிடம் காட்டுகிறார்.
தாயே! இந்த முறையில் கட்டுமானத்தை அமைத்தால், அத்திருத்தலங்கள் பல ஆண்டுகள் நிலைத்து நின்று தங்களது பெயரை சொல்லிக்கொண்டே இருக்கும்.


பட்டரே! இந்த ஆலயத்தின் கட்டமைப்புகள் எவ்வளவு சிறப்பாயிருக்கிறது பார்த்தீர்களா? தமிழகத்திலுள்ள அனைத்து முக்கிய ஸ்தலங்களிலும் இம்மாதிரி கட்டமைப்புகளாலான ஸ்தலங்களை அமைக்க வேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்திலும் பொங்குகிறது...
என்று கூறி தேவியின் முகம் சட்டென்று வாடியது.
ம்...
தாயே! தங்களின் விருப்பம் நிறைவேறுவதில் தடை என்ன? தேவார பதிகம் பாடல்பெற்ற ஸ்தலங்களில் எல்லாம் இம்மாதிரி கற்றளிகள் எழுப்பினால், அந்த அமைப்பை பார்த்தவுடன் இது "தேவார பதிகம் பாடல்பெற்ற ஸ்தலம்" என்பதை ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள்.


தாங்கள் கூறுவதும் சரியான யோசனைதான்.
இவ்வாறெல்லாம் கோயில்களுக்கு பணியாற்றுவதுதான் என் மனோரதமும் கூட, என் *நாயகர் மட்டும் இறையடி சேராமல் இன்னும் சிலகாலம் ஜீவித்திருந்தால் என் மனோரதங்களும் நிறைவேறி இருக்கும்! (என்று பெருமூச்சு விடுகிறார்)
* கணவர்
இப்போது மட்டும் என்ன குறைவு தாயே! நீங்கள் நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்ற இளவரசர்கள் இருவரும் சித்தமாயிருக்கிறார்கள், அப்படியிருக்கும்போது...
இருந்தாலும் என் மனதில் இப்போது அவ்வளவு உற்சாகமில்லை. ஏதேதோ கேள்விப்படுகிறேன். நான் செய்யும் கோயில் திருப்பணிகளால் அரசாங்கப் பணமெல்லாம் காலியாகிவிடுகின்றது என்று சிலர் குறை கூறுகின்றனராம்...


சிவனுக்கு இவ்வளவு ஆலயங்கள் எதற்கு என்று கேட்கிறார்களாம்.... மற்றவர்கள் கேட்பதை பற்றியும் எனக்கு கவலையில்லை, ஆனால் காஞ்சியில் இருக்கும் இளவரசர் கூட....
உடனே ஆழ்வார்க்கடியான் முன் வந்து.....
தாயே!!
அவ்வாறு கேட்பவர்களில் அடியேனும் ஒருவன்!
இந்த வைஷ்ணவன் காரணம் இல்லாமல் இவ்வாறு நம்மிடம் பேசமாட்டான். என்ன சொல்கிறான் என்று பார்ப்போம்...
என் வயிறு பற்றி எரிகிறது!
ஆழ்வார்க்கடியான் கூறியதை கேட்டு சபையிலிருந்த மற்றவர்களும் அதிர்ச்சியுற்றனர்.
திருமலைக்கு மூளை ஏதாவது குழம்பிவிட்டதா!?
இது என்ன விபரீதம்!


இம்மாதிரி அநியாயம் இந்த உலகில் வேறு உண்டோ?
மகாராணி!
என் சகோதரன் இப்படித்தான் ஏதாவது உளறுவான். திடீரென்று அவனுக்கு வெறி வந்துவிடும்.
திருமலை! சற்று அமைதியாக பேசு! இப்போது என்ன உனக்கு அநியாயம் நடந்து விட்டது?
அம்மா! இன்னும் என்ன அநியாயம் நடக்க வேண்டும். பேயாண்டியும், கையில் கபாலம் ஏந்திப் பிச்சையெடுத்து பிழைப்பவனுமாகிய சிவனுக்கு எத்தனை மாடக் கோயில்கள்? எத்தனை கற்றளிகள்?


இந்த உலகையெல்லாம் காக்கும் மஹா விஷ்ணுவுக்கு ஒரு திருக் -கோவில் கூட கிடையாதா?
தாயே!
இந்த உலகம் உய்ய ஆனந்த நடனமாடும் பெருமானுக்குதான் மாடக் கோயில்கள் வேண்டும்!
ஓயாமல் தூங்குகிற திருமாலுக்கு ஒரு சிறிய இடம் போதாதா?
அண்ணா!
ஓயாமல் தூங்கும் பெருமாள்தான் உலகளந்த பெருமாள்!
மகாபலியை பாதாளத்தில் அழுத்திய பெருமாள்!
அப்படிப்பட்ட உலகளந்த பெருமாள், எங்கள் சிவ பெருமான் திருப்பாதத்தை தரிசிக்க பாதாளம் வரையில் சென்றும் பயனளிக்கவில்லையே!


உங்கள் சிவன் அவ்வளவு பெரியவராய் இருந்தால் அவருக்கு கோயில் எதற்கு? அவர் கோயிலுக்குள் வரும்போது கோயில் அவரின் தலையிலே இடித்து, இடிந்து விழுந்துவிடுமே! (என்று நய்யாண்டி செய்கிறான்)
செம்பியன் மாதேவி ஆழ்வார்க்கடியான் கூறியதைக் கேட்டு சிரித்துக் கொண்டே,
உங்கள் சண்டையை நிறுத்துங்கள்!
திருமலை! நீ எந்த ஊர் விண்ணகரத்தை புதுப்பிக்க வேண்டும் என்கிறாய்?


அம்மா! தங்களுடைய மாமனார், பராந்தக சக்கரவர்த்தி -யின் பட்டப் பெயரைக்கொண்டு அமைக்கப்பட்ட ஏரியை காத்தருளும் வீரநாராயணப் பெருமாளின் கோயில் சுவர்கள் இடிந்து விழுந்து வருகின்றன.


கோயில் இடிந்தால், ஏரிக்கரையும் இடிந்து, பல நூறு ஊர்களும் பாழாகிவிடும். அந்த கோயிலுக்கு தான் திருப்பணி செய்ய வேண்டும்.


ஆழ்வார்க்கடியான் தன்னிடத்தில் தனிமையில் முக்கிய விஷயம் ஏதோ கூற விரும்புகிறான் என்பதை உணர்ந்த செம்பியன் மாதேவி....
ஆகட்டும் செய்வோம்! அதை பற்றி விவரமாக என்னிடம் சொல்லு. இவர்கள் எல்லோ -ரும் இப்போது போகட்டும்.
என்று செம்பியன் மாதேவி கூறியதும், அந்த குறிப்பை உணர்ந்து ஈசான சிவபட்டர் உள்பட அனைவரும் வெளியேறிச் செல்கின்றனர்.
சபையைவிட்டு அனைவரும் சென்ற பிறகு, செம்பியன் மாதேவி தன் குரலை தாழ்த்திக் கொண்டு,
திருமலை! நீ ஏதோ முக்கியமான விஷயம் கொண்டுவந்து இருக்கிறாய் என்று எண்ணுகிறேன். அதனால்தான் அப்படி குறுக்கிட்டு பேசினாய் அல்லவா?


ஆம் தாயே! முக்கியமான செய்திகள் பலவற்றை கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், காஞ்சியில் உள்ள இளவரசரைப் பற்றி தாங்கள் ஏதோ சொல்ல தொடங்கினீர்கள், அதை தடுப்பதற்காகவே நான் அவ்வாறு பேசினேன்.
சற்றுமுன் இங்கே இருந்தவர்களில் உண்மையானவர் யார்? ஒற்றர் யார்? என்று யாருக்கு தெரியும் தாயே!
செம்பியன் மாதேவி பெருமூச்சு விட்டு,
ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இரத்தப்பாசம் உள்ளவர்கள் ஒரு -வரையொருவர் சந்தேகிக்கும்படி ஆகிவிட்டது. (என்று வருத்தப்படுகிறார்)


திருமலை! ஆதித்த கரிகாலன் ஒரு காலத்தில் என்னிடம், தன் சொந்த தாயை காட்டிலும் நூறு மடங்கு அன்பும், மரியாதையும் கொண்டிருந்தான். அவன்கூட என் பேரில் ஐயுறும்படி ஆகி விட்டதே...
என் நாயகனுடன் சேர்ந்து நானும் இந்த மண்ணுலகை விட்டு போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்..... இங்கே செய்ய வேண்டிய பணிகளை என்னிடம் கொடுத்து விட்டல்லவா சென்று விட்டார்! என்ன துர்பாக்கியசாலி நான்!
அம்மா! தங்கள் பதி முக்காலமும் உணர்ந்த மகான்! தங்களை இங்கு இருக்கும்படி அவர் சொல்லிவிட்டு போனது இந்த நாடு செய்த பாக்கியம்.
நூறு ஆண்டுகளாக பல்கி பெருகிவரும் இந்த சோழப் பேரரசு, சகோதரச் சண்டையால் நாசமாகாமல் காப்பாற்றும் பொறுப்பு தங்களை சார்ந்தது. தங்களால் மட்டுமே அது முடியக் கூடியது.


எனக்கு அப்படி தோன்றவில்லை திருமலை... என் சொந்த மகனே நான் சொல்வதை கேட்காமல் போன பிறகு மற்றவர்களை நான் எப்படி கட்டுப்படுத்த முடியும்?
திருமலை! ஒற்றர்களை பற்றி சொன்னாயே, ஆதித்த கரிகாலன்தான் ஒற்றர்களை அனுப்பியிருப்பான் என்று நீ கருதுகிறாயா? என்மீது அவனுக்கு அவ்வளவு அவநம்பிக்கை வந்துவிட்டதா?
ஆம் தாயே! காஞ்சிபுரத்தில் ஒரு கோவில் மண்டபத்தில் அமர்ந்து அவர்கள் பேசியதை நான் ஒற்றுகேட்டேன்!
அவர்கள் என்றால் யார்?


இளவரசர் ஆதித்த கரிகாலர், திருக்கோவலூர் மலையமான் மற்றும் பல்லவன் பார்த்திபேந்திரன். இவர்கள் மூவரும் ஆவேசமாக பேசிக் கொண்டிருந்ததை, இருளடைந்த கற்கோயிலுக்குள்ளே மறைந்திருந்து கேட்டேன்!
அந்த இரண்டு பழுவேட்டரையர்களும், மதுராந்தகனும் அரசரை சிறைப்படுத்தி வைத்துள்ளதாகவும் அதற்கு நீங்கள் துணையாக இருப்பதாகவும், மலைய -மான் ஆவேசமாக கூறினார்.
மேலும், தஞ்சை மீது படையெடுத்துச் சென்று சக்கரவர்த்தியை விடுவித்து வருவோம் என்று பார்த்திபேந்திரன் தனது யோசனையை கூறினான்.


கரிகாலன் இதற்கு என்ன மறுமொழி கூறினான்?
சண்டையின்றி அரசரை காஞ்சிக்கு அழைத்துவர, கடைசி முயற்சியாக ஒரு தூதனை தஞ்சைக்கு அனுப்பலாம் என்று இளவரசர் தீர்மானித்தார்.
அந்த தூதன் யார் என்பதையும் நான் கண்டு கொண்டேன்! அவன் சாதாரணமானவன் அல்ல, தூதன் வேலையுடன் சேர்த்து ஒற்றன் வேலையும் பார்க்கக் கூடியவன்!


அவனிடம் நான் பேச்சு கொடுத்துப் பார்த்தேன். அவன், அவனைப் பற்றி ஒன்றுமே தெரியபடுத்தாமல் என்னிடம் இருந்து பல விஷயங்களை கிரஹிக்கப் பார்த்தான்.
நம் குடந்தை ஜோதிடரின் ஜாலமும் அவனிடம் பலிக்கவில்லை.....
பிறகு அவன் தலைநகருக்கு சென்று எப்படியோ சக்கரவர்த்தியிடம் ஓலையை கொடுத்து விட்டு, பழுவேட்டரையர்களின் ஆட்களிடம் சிக்காமல் தப்பித்தும் விட்டான்.
அப்படியென்றால் அவன் மிக சாமர்த்தியசாலிதான், சந்தேகமே இல்லை!
காஞ்சியிலிருந்து கிளம்பிய பிறகு நீ எங்கு சென்றாய்?
நேரே இங்கு வருவதற்காகப் புறப்பட்டேன். அப்போது கடம்பூர் சம்புவரையரின் மாளிகையில் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்யப் பட்டிருப்பது எனக்கு தெரிந்தது. அதற்கு பெரிய பழுவேட்டரையரும் வந்திருந்தார். உடன் பழுவூர் இளையராணி நந்தினியின் பல்லக்கும் இருந்தது.



எல்லாம் அவளுடைய செயல்தான்! இந்தச் சோழ நாட்டுக்கு இப்போது நேர்ந்திருக்கும் ஆபத்து அவளால் ஏற்பட்டதுதான்!
திருமலை! நீ அவளை சந்திக்க வேண்டியதுதானே?
முடியவில்லை தாயே!
மேலும் ஆதங்கத்தோடு,
தாங்கள் கட்டளையின் பேரில் அந்த பெண் பாம்பை எனது உடன்பிறந்த சகோதரியாகவே பாவித்து எத்தனை வருஷம் வளர்த்து வந்தேன்,
எத்தனையோ பிரபந்தங்களையும், பாசுரங்களையும் அவளுக்கு நான் கற்பித்தேன்! அதையெல்லாம் நினைத்து பார்த்தால் என் நெஞ்சம் கொதிக்கின்றது! பழுவூர் ராணியான பிறகு அவள் என்னைப் பார்க்கக் கூட மறுக்கிறாள்..


அதைப் பற்றி வருத்தப்பட்டு என்ன பயன்? நாம் நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றும் ஆக முடிகிறது.....
சரி, கடம்பூரில் என்ன நடந்தது? அதை நீ கூறு!
நந்தினியை எப்படியாவது சந்தித்து அவளை எச்சரிக்கை செய்வது என்ற உத்தேசத்துடன் கடம்பூருக்குச் சென்றேன்.
துணிந்து மாளிகையின் மதில் சுவர் ஏறி குதித்தேன். அப்போது தான் எனக்கு அந்த அதிசயமான மர்ம இரகசியம் தெரிந்தது.


அது என்ன மர்மம்?
மன்னிக்க வேண்டும் தாயே! அதை கூறவே தயக்கமாக இருக்கிறது.
தயங்காமல் கூறு திருமலை.
பெரிய பழுவேட்டரையர், தான் போகும் இடமெல்லாம் பல்லக்கில் அழைத்துச் செல்வது, நந்தினி என்று நாம் இத்தனை காலம் நினைத்தது தவறு! அதில் இருந்தது நந்தினி அல்ல!
தாங்களின் தவப்புதல்வன் மதுராந்தகன்!!
இதைக் கேட்டு செம்பியன் மாதேவி சிறிது நேரம் திகைத்து விட்டார்.


பல்லக்கில் இருந்தது மதுராந்தகன் எனும் உண்மை, செம்பியன் மாதேவிக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது.
கடவுளே! நான் செய்த குற்றத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையா?
ஐயோ! என் மகனே! உன்னை சிவஞானச்செல்வனாக வளர்க்க முயன்றேனே... அதன் பயனா இது? சோழ பெருந்தலத்திற்கு உன்னால் இந்த அபகீர்த்தி நேர வேண்டுமா?
திருமலை! பழையாறையை விட்டு புறப்படும் முன் மறுபடியும் என்னை பார்த்துவிட்டு போ! அதற்குள் குந்தவையிடம் பேசி இந்த பெரும் விபத்தை எப்படி தடுக்கலாம் என்று யோசித்துச் சொல்கிறேன்.


தாயே! இளவரசியிடம் கூட தாங்கள் அதைப் பற்றி பேசாமல் இருப்பதுதான் நல்லது.
ஏன்? அவளைப் பற்றியும் கூட ஐயப்படுகிறாயா என்ன?
அது இயற்கைதானே அம்மா! ஆதித்த கரிகாலரின் அருமை சகோதரி அல்லவா அவர்?
அதனால் என்ன? திருமலை! சூரியன் மேற்கில் உதயமாகி கிழக்கே அஸ்தமித்தது என்று நீ சொன்னாலும் நம்புவேன். ஆனால் குந்தவையின் பேரில் குற்றம் யார் சொன்னாலும் நம்பமாட்டேன். அவள் பிறந்த அன்றைக்கு அரண்மனை மருத்துவச்சி குழந்தையை எடுத்து வந்து என் கைகளில் கொடுத்தாள். அன்று முதல் அவளை நானே வளர்த்து வந்தேன்.


என் வயிற்றில் பிறந்த மகனைக் காட்டிலும் குந்தவையை நான் சீராட்டி, பாராட்டி வளர்த்து வருகிறேன். அவளும் என்னையே பெற்ற தாயாகவும் தந்தையாகவும் எண்ணி இன்று வரை என்னிடத்தில் அன்பும் மரியாதையும் செலுத்தி வருகிறாள்.
அம்மா! நான் ஒன்று கேட்கிறேன். குடந்தை ஜோதிடர் வீட்டுக்கு சென்று வந்ததை பற்றி குந்தவை தேவி தங்களிடம் ஏதேனும் சொன்னாரா?
இல்லை, அதனால் என்ன?


ஜோதிடர் வீட்டில் வாணர் குலத்து வாலிபன் ஒருவனை பார்த்தது பற்றியும் மீண்டும் அவ்வாலிபனை அரசிலாற்றங்கரையில் சந்தித்தது பற்றியும் இளையபிராட்டி தங்களிடம் ஏதாவது சொன்னாரா?
இல்லை... இப்படி கேட்பதில் உன் கருத்து என்ன?
தங்களிடம் சொல்ல கூடாத இரகசியம் ஒன்று இளவரசி வைத்திருக்கிறார் என்பதுதான்! நான் குறிப்பிட்ட அந்த வாலிபன்தான், ஆதித்த கரிகாலரின் தூதன்! ஒற்றன் என்று சொன்னாலும் தவறாகாது...


திருமலை! அதெல்லாம் எப்படியாவது இருக்கட்டும். குந்தவை என்னிடம் ஏதேனும் ஒன்று சொல்லவில்லை என்றால், அதற்கு தக்க காரணம் இருக்கும்.
அவளிடம் சந்தேகப்படுவதை காட்டிலும் என் பிராணனையே விட்டுவிடுவேன்!


ஐயோ! அப்படியொன்றும் நேர வேண்டாம், தங்களுடைய நம்பிக்கையே மெய்யாகட்டும்! இளவரசி என்னிடம் ஏதோ கேட்பதற்காக வரச்சொல்லிருக்கிறார். தாங்கள் சந்திக்க விரும்புவதாக நானே அவரிடம் தெரிவித்து விடுகிறேன். (என்று கூறிவிட்டு அங்கிருந்து விடைபெற்று செல்கிறான் ஆழ்வார்க்கடியான்)
பெரியராணியை சந்தித்து விட்டோம். அடுத்து இளைய பிராட்டி குந்தவையை சந்திக்க ஆழ்வார்க்கடியானும் நாமும் செல்வோம்.


ஈசானப்பட்டரும், ஆழ்வார்க்கடியானும் செம்பியன் மாதேவியின் முன் சமய சண்டை பிடித்ததைப் பார்த்திருப்பீர்கள். உண்மையில் அவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். இதைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படலாம்! இப்போது சைவர்களையும், வைணவர்களையும் நாம் பிரித்து பார்க்கிறோம். அக்காலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் சைவத்தையும் மற்றொருவர் வைணவத்தையும் பின்பற்றி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஈசானப்பட்டரும், ஆழ்வார்க்கடியானுமே சான்று.


இன்று கிருஷ்ண ஜெயந்தி என்பதால் பழையாறையில் அரண்மனையின் பின்பகுதியில் பிருந்தாவனத்து கோபிகா ஸ்திரிகளைப் போல இளவரசிகள் ஆடிப்பாடி கும்மி அடித்து மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஆனால், குந்தவையும் வானதியும் மட்டும் தனியே பிரிந்து ஒரு மரத்தில் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.


அப்போது அங்கு அருகில் புல்லாங்குழலின் இசை கேட்கிறது. புல்லாங்குழலின் இசை கேட்டு குந்தவைக்கு கண்ணனின் ஞாபகம் வருகிறது.
நல்ல கண்ணன் இந்த செந்தமிழ் நாட்டுக்கு தெய்வமாக வந்து வாய்த்தான்! வெண்ணெய் உண்டு வோங்குழல் ஊதி பெண்களுடன் காலங்கழித்துக் கொண்டிருந்தால் மற்ற காரியங்களெல்லாம் என்ன ஆவது?
வானதி...
வானதி...


என்னடி மௌனம் சாதிக்கிறாய்? நீயும் கண்ணனின் குழலில் மயங்கி விட்டாயா, என்ன?
அக்கா! என்ன கேட்டீர்கள்?
என்ன கேட்டேனா!! உன் கவனம் எங்கே சென்றிருக்கிறது...?
எங்கும் செல்லவில்லையே? உங்களிடம்தான் இருக்கிறது.
அடி கள்ளி, ஏனடி பொய் சொல் -லுகிறாய்? உண்மையில் உன் மனம் இவ்விடத்தில் இல்லவே இல்லை! எங்கே இருக்கிறது என்று நான் சொல்லட்டுமா?
தெரிந்தால் சொல்லுங்களேன்.


நன்றாகத் தெரியும், ஈழ நாட்டுப் போர்க்களத்துக்குப் போயிருக்கிறது. அங்கே என் தம்பி ஒரு கபடமற்ற பிள்ளை இருக்கிறானே, அவனை இன்னும் என்ன பொடி போட்டு மயக்கலாம் என்று உன்மனம் யோசித்துக் கொண்டிருக்கிறது.
நீங்கள் கூறியதில் ஒரு பாதி உண்மைதான். அக்கா! என் மனம் ஈழநாட்டுக்குத்தான் அடிக்கடி போய் விடுகிறது. ஆனால் அவரைப் பொடி போட்டு மயக்குவதைப் பற்றி யோசிக்கவில்லை, அவர் போர்க்களத்தில் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறாரோ?
அவருடைய திருமேனியில் எத்தனை காயம் பட்டிருக்கிறதோ? எனக்கு மட்டும் சிறகுகள் இருந்தால் இந்த விநாடியே இலங்கைக்கு பறந்து போய் விடுவேன்.
அங்கே பறந்து போய் என்னடி செய்வாய்? மேலும் அவனுக்கு உபத்திரவந்தானே செய்வாய்?


ஒரு நாளும் இல்லை அக்கா! அர்ச்சுனனுக்கு சுபத்திரையும், கிருஷ்ணருக்கு சத்தியபாமா -வும் ரதம் ஓட்டியது போல நானும் ஓட்டுவேன். அவர் பேரில் எய்யும் அம்புகளை என் மார்பில் நான் தாங்கிக் கொள்வேன்.
இதெல்லாம் நடவாத காரியங்கள் வானதி. சோழ குலத்து வீரர்கள் போர்க்களத்திற்கு பெண்களை அழைத்துப் போவதில்லை.
ஏன் அக்கா அப்படி?
அவர்களுக்கு போர்க்களத்தில் ஏற்படும் புண்களைப்பற்றி கவலையில்லை, அதை காட்டிலும் பெண்களைப் பற்றிதான் அதிக பயம்!!!
அது ஏன்? பெண்கள் அப்படி என்ன அவர்களை செய்து விடுவார்கள்?


ஒன்றும் செய்யமாட்டார்கள், ஆனால் உன்னைப் போன்ற பெண்கள் போர்க்களத்துக்கு போனால் எதிரிப்படை வீரர்கள் உங்களுடைய அழகை கண்டு மயங்கி சரணாகதி அடைந்துவிட்டால் என்ன செய்வது?
அக்கா! உங்கள் கற்பனா சக்திக்கு அளவே இல்லை. அப்படிக்கூட நடக்குமா என்ன?
ஏன் நடக்காது? சோதிடர் வீட்டிலும் அரசலாற்றங்கரையிலும் நாம் ஒரு வாலிபனைப் பார்த்தோமே, உனக்கு அவனை ஞாபகம் இருக்கிறதா?
இருக்கிறது அக்கா, நன்றாக இருக்கிறது...
அவன் நம்மையெல்லாம் கண்டதும் போதை கொண்டவன் போல, நம் எதிரே எப்படி மதிமயங்கி நின்றான் என்று பார்த்தாயல்லவா?


நம்மையெல்லாம் என்று தாங்கள் கூறுவது தான் ஒப்புக் கொள்வதற்கு இல்லை. தங்களை கண்டு அல்லவா அந்த வாலிபன் போதை கொண்டவன் போல் நின்றான்!
போடி வானதி! நீ நன்றாக வாய் பேச தெரிந்து கொண்டாய்.
அக்கா! நான் தங்களை ஒன்று கேட்பேன், தாங்கள் அதற்கு உண்மை சொல்ல வேண்டும். இப்போது தங்களுக்கு ஏன் அந்த வீர வாலிபனின் நினைவு வந்தது?
ஏன் வரக் கூடாதா? வந்தால் அதில் என்ன தவறு?



துடும்... துடும்...
சத்துரு நாட்டிலிருந்து வந்த ஒற்றன் ஒருவன் பொய் முத்திரையைக் காட்டி தஞ்சை கோட்டைக்குள் நுழைந்து உளவு அறிந்து கொண்டு ஓடி விட்டான்,
அவனது பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன். அவனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி கொடுக்கப்படும்.
அவனுக்கு அடைக்கலம் கொடுப்போருக்கு மரண தண்டனை விதிக்கப்படும்!
அம்மா! தாங்கள் அழைத்ததாக தங்களைக் காண ஒரு வைஷ்ணவர் வந்திருக்கிறார்.
ம், அவரை வரச்சொல்.


செம்பியன் மாதேவியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, குந்தவையின் மாளிகைக்கு வருகிறான் ஆழ்வார்க்கடியான்.
இளைய பிராட்டி குந்தவை ஏதற்காக நம்மை உடனே வரும்படி அழைத்தார்...!


அதோ வருகிறானே அந்த வைஷ்ணவன், மிக வில்லங்கமானவன்! வேண்டுமென்றே நம்மிடம் சிவன் பெரிய தெய்வமா அல்லது விஷ்ணு பெரிய தெய்வமா என்று கேட்டு வம்பிழுப்பான். பெரிய இடத்துல தொடர்பில் இருக்குறவன், அவன்கிட்ட எதுவும் பேசாத உள்ள விட்டுவிடு.


என்று ஆழ்வார்க்கடியானுக்கு வழிவிட்டு நிற்கிறார்கள்.
ம்... ஒரு வேளை கடம்பூரில் நடந்த சம்பவத்தைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகவா?


அல்லது.., ஒருவேளை அந்த வாலிபனைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக இருக்குமோ!
எதற்கும், அறிவில் சிறந்த இளவரசியிடம் பேசும்போது மிகவும் ஜாக்கிரதையாகவே பேசவேண்டும்!


ஆழ்வார்க்கடியான் வருவதை கண்ட குந்தவை,
திருமலை! என்ன விசேஷம்? எங்கே வந்தாய்?
விசேஷம் ஒன்றுமில்லை தாயே! வழக்கம் போல் தாங்கள் உலக நடப்பை குறித்து விசாரிப்பதற்கு வரச் சொன்னதாக வந்தேன். மன்னிக்க வேண்டும்...
என்று கூறிவிட்டு திரும்பி செல்கிறான்.


இல்லை இல்லை! கொஞ்சம் இரு, நான்தான் உன்னை வரும்படி சொன்னேன். அதை மறந்துவிட்டேன்.


தாயே! நானும் சொல்ல மறந்து விட்டேன்! பெரியபிராட்டி தங்களிடம் ஏதோ ஒரு முக்கிய செய்தி சொல்ல வேண்டுமாம். தங்களை வரும்படிச் சொன்னார்கள்.
ஆகட்டும். நானும் போகத்தான் எண்ணி -யிருக்கிறேன். நீ இந்த பிரயாணத்தில் எங்கெங்கே எல்லாம் சென்றிருந்தாய்? அதை முதலில் சொல்லு!
நீ சென்ற இடங்களில் மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்?
தென் குமரியிலிருந்து வடவேங்கடம் வரையில் போயிருந்தேன்.
(வடவேங்கடம் - திருப்பதி)
சோழ குலத்தின் பெருமையைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். இன்னும் சிலகாலத்தில் வடக்கே காங்கைநதி வரையிலும், மற்றும் ஹிமோத்கிரி வரையிலும் சோழ மஹாசாம்ராஜ்யம் பரவி வரும் என்று பேசிக் கொள்கிறார்கள்.
மேலும் என்ன சொல்கிறார்கள்?


பழுவேட்டரையர்களின் வீரப் பிரதாபங்களைப் பற்றியும் பாராட்டிப் பேசுகிறார்கள்.
என்று வேண்டுமென்றே கூறிவிட்டு குந்தவையை கூர்ந்து கவனிக்கிறான் ஆழ்வார்க்கடியான்.
இந்த வைஷ்ணவர் மிகவும் பொல்லாத -வர்! நம் வாயை அல்லவா பிடுங்கப் பார்க்கிறார்!
சோழ சாம்ராஜ்யம் இவ்வளவு உன்னத நிலைமையை அடைந்ததற்குக் காரணமே பழுவூர்ச் சிற்றரசர்களின்.....
போதும், பழுவேட்டரையர்களின் பிரதாபம்! இன்னும் வேறு என்ன சொல்கிறார்கள்?


தங்களுடைய சகோதரர்கள் இருவரையும் பற்றி ஆசையோடு பேசிக் கொள்கிறார்கள்.
இதையல்லவா நான் எதிர்பார்த்தேன்.
முக்கியமாக இளவரசர் அருள்மொழிவர்மர் மீது குடிமக்களுக்கிருக்கும் அன்பையும் ஆதரவையும் சொல்லி முடியாது!
அதில் ஒன்றும் வியப்பில்லைதானே. இன்னும் ஏதேனும் பேச்சு உண்டா?


சோழ சக்கரவர்த்தியின் திருக்குமாரிக்கு ஏன் இன்னும் திருமணம் ஆகவில்லை என்று பேசிக் கொள்கிறார்கள்.
என்னையும் கூட பலர் கேட்டார்கள்.
அதற்கு நீ என்ன சொன்னாய்?
எங்கள் இளைய பிராட்டியை மணந்து கொள்ளும் தகுதி வாய்ந்த அரச குமாரன் இன்னும் இந்தப் பூவுலகில் பிறக்கவில்லை என்று சொன்னேன்.
அழகாயிருக்கிறது நீ கூறுவது! இனிதான் அப்படிப்பட்டவன் பிறக்கவேண்டுமாக்கும்! இதற்குமேல் அவன் பிறந்து, வளர்ந்து, கல்யாண வயதை அடைவதற்குள் நான் கிழவி ஆகிவிடுவேன். என் விஷயம் இருக்-கட்டும். வேறு ஏதாவது பேச்சு உண்டா!


ஏன் இல்லை? சிவஞான யோகிசுவரராகப் போவதாய் சொல்லிக்கொண்டிருந்த நம் மதுராந்தகத்தேவர் திடீரென்று கல்யாணம் செய்து கொண்டதைப் பற்றி பலரும் ஆச்சரியப்படுகிறார்கள்.
ஆமாம், உன் அருமை சகோதரி ஆண்டாளைப் போலவே தானும் பக்த சிரோமணி ஆகப்போவதாய் சொல்லிக் கொண்டிருந்தாளே... அவள் எப்படி இருக்கிறாள்?
தாயே! அவளுக்கு என்ன குறை? பெரிய பழுவேட்டரையரின் அரண்ம -னையில் சர்வாதிகாரியாக ஆட்சி செலுத்தி வருகிறாள்.
பழுவேட்டரையரின் அரண்மனை யில் மட்டுந்தானா? இந்த சோழ சாம்ராஜ்யத்திற்கே அவள்தான் சர்வாதிகாரினி என்றல்லவா நான் கேள்விப்பட்டேன்!
அப்படியும் சிலர் பேசிக் கொள்கிறார்கள். தாயே! அவளை விட்டுத் தள்ளுங்கள். இந்த நல்ல நாளில் அவளுடைய பேச்சு எதற்கு?
துடும்...
துடும்...
திருமலை, அது என்ன பறையோசை கேட்கிறது?
இந்த கேள்விக்காக அல்லவா காத்துக் கொண்டிருந்தேன்.
குறிப்பு: அறிவிப்பு செய்வதற்காக வாசிக்கப்படும் இசைக் கருவித் பெயர் பறை.


யாரோ ஒற்றனாம்! தஞ்சை கோட்டையில் புகுந்து தப்பி விட்டானாம். அவனை பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பார்களாம்!
உனக்கு அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாதா....?
எனக்கு என்ன தெரியும்...


உண்மையாகவா?
ஆம் தாயே! ஆனால் என் மனதில் ஒரு சந்தேகம் இருக்கிறது...
என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்.
அதற்காகத்தானே வந்திருக்கிறேன்.



ஆழ்வார்க்கடியான் தயங்குகிறான் என்று எண்ணி,
நான் உன்னை காட்டிக் கொடுத்து விடுவேன் என்ற எண்ணம் இல்லையே?
கிருஷ்ணா..கிருஷ்ணா!!
அப்படிப்பட்ட எந்த ஒரு எண்ணமும் எனக்கு இல்லை. வீரநாராயணபுரத்தில் ஒரு வீரவாலிபனை நான் பார்த்தேன். அவன் தஞ்சாவூருக்கு போகிறதாகச் சொன்னான். ஆனால் எதற்காக என்று சொல்லவில்லை, மேலும் என்னை பல கேள்விகள் கேட்டான்...
அவன் எப்படியிருந்தான்?
பார்க்கப் பெரிய குலத்தில் பிறந்தவனை போல காணப் பட்டான். முகம் களையாய் இருந்தது. ஊக்கமும் வலிமையும் கொண்ட வாலிபனாக தெரிந்தான்!


உன்னிடம் ஏதோ கேள்வி கேட்டான் என்றாயே? என்ன கேள்வி கேட்டான்?
சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றி கேட்டான். அடுத்த படியாக பட்டத்துக்கு யார் வருவார்கள் என்று கேட்டான். இலங்கை சென்றிருக்கும் இளவரசரைப் பற்றியும் கேட்டான்.
பிற்பாடு குடந்தை ஜோதிடரிடமும் அதே கேள்விகளையே அவன் கேட்டதாக நான் அறிந்தேன்!
ஆஹா! குடந்தை ஜோதிடர் வீட்டுக்கு வந்திருந்தானா!
அவனாக இருப்பானோ?
ஆங்!! ஞாபகம் வருகிறது.
தாங்கள் ஜோதிடர் வீட்டிலிருக்கும்போது அவன் தடபுடல் செய்துகொண்டு உள்ளே வந்துவிட்டானாம். நல்லவேளையாகத் தங்களை அவன் தெரிந்து கொள்ளவில்லை.


நான் நினைத்தது சரியாகப் போயிற்று!
என்ன தாயே நினைத்தீர்கள்?
அந்த முரட்டு வாலிபனுக்கு சீக்கிரமே ஏதாவது ஆபத்து வரலாமென்று நினைத்தேன்...
நம் கணக்கு சரிதான்..!
(ஆழ்வார்க்கடியான் மனதில்)
அவன்தான் ஒற்றன் என்று சந்தேகிக்கிறேன். அவனை பிடிப்பதற்குத்தான் பழுவேட்டரையர்கள் பரிசு கொடுப்பதாக பறையடித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.
திருமலை எனக்கு ஓர் உதவி செய்வாயா?


அந்த வாலிபனை நீ எப்போதாவது பார்க்க நேர்ந்தால்....
கட்டளையிடுங்கள் தாயே!
பிடித்துக் கொடுத்து பரிசு பெற்றுக் கொள்ளட்டுமா?
வேண்டாம்.. வேண்டாம்!


அவனை என்னிடம் அழைத்து வா. அவனிடம் எனக்கு முக்கியமான காரியம் ஒன்று இருக்கிறது.
அதற்கு அவசியமே ஏற்படாது தாயே! அவனே தங்களை தேடிக் கொண்டு வந்து சேர்வான்.
நான் வருகிறேன் தாயே!
ம்.... நமக்கெல்லாம் ஒரு சந்தேகம் இவன் யாருக்கு ஒற்று வேலை செய்கிறான்!?
ம்... வந்த வேலை முடிந்தது.


ஆழ்வார்க்கடியான், தன் அண்ணன் ஈசான பட்டரைத் தேடி வடமேற்றளி என்னும் கோயிலுக்கு செல்கிறான். வடமேற்றளி சிவன் கோவில், கோயிலைச் சுற்றிலும் *முழைகள் (*சமணர்கள் தவம் செய்யும் இடம்) அமைந்துள்ளன.


அப்போது மேடையில் ஆடிய கூத்தாடிகள் அங்கு கோயிலுக்குள் செல்கிறார்கள்.
ஆஹா!! இவர்கள் எங்கே இங்கு வந்து சேர்ந்தார்கள்!?


கம்ச நாடகம் போட்ட கூத்தாடிகளை தொடர்ந்து ஆழ்வார்க்கடியானும் கோயிலுக்குள் வருகிறான்.
சிவன் கோயில இந்த வீரவைஷ்ணவனுக்கு என்ன வேலை?
அப்போது மேடையில் ஆடிய கூத்தாடிகள் அங்கு கோயிலுக்குள் இருக்கிறார்கள்.
தாளத்துக்கு அரை பங்கு.
முகவீணைக்கு இரண்டு பங்கு.
ஆட்டகாரனுக்கு ஒன்னேகால் பங்கு கொடுத்தே ஆகனும்பா!
அந்த கூத்தாடிகளுடன் வந்தியத்தேவனும் இருக்கிறானா என்று கூர்ந்து கவனிக்கிறான் ஆழ்வார்க்கடியான்.



கம்சன் வேடம் போட்டவன் நன்றாக ஆடினான்ல! ஆனால், பங்கு வாங்காமலே போயிட்டான்.
இந்த கூத்தாடிகள் எதற்காக இங்கே காத்திருக்கிறார்கள்!
அதற்குள் ஈசான பட்டர் ஆழ்வார்க்கடியானை பார்த்து,
திருமலையா!!
ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை தேடி வந்திருப்பதை உணர்ந்த ஈசான பட்டர்.
ஈஸ்வரா...! இவன் எப்படியோ அந்த தம்பி இருக்கும் இடத்தை கண்டுபிடித்து வந்துட்டானே!
இவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.
எப்படியாவது அவனை வெளியே துரத்த வேண்டியதுதான்...!
அந்த கம்சவேடம் பூண்டவனை மட்டும் காணவில்லையே!


திருமலை!
உனக்கு இங்கு என்ன வேலை?
அண்ணா! இது என்ன கேள்வி? தாங்களை பார்க்கத்தான் வந்தேன்.
முதலில் நீ கோயிலை விட்டு வெளியே போ!
திருமலை! நம்முடைய உறவெல்லாம் இனிமேல் கோயிலுக்கு வெளியே இருக்கட்டும்.
அண்ணா! என்ன இது?
நீ துரோகி! சிவ நிந்தனை செய்யும் பாவி! இந்த சிவாலயத்திற்குள் நீ அடியெடுத்து வைக்காதே.


ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?
நானும் எவ்வளவோ பொறுத்திருந்தேன்.
ஆனால் இன்றைக்கு நீ சபையில் மகாராணியின் முன்னால் பேசியதை என்னால் சகிக்க முடியவில்லை.
போ! வெளியே.
இந்த சிவாலயத்திற்குள் உன் நிழல்கூட நுழையக்கூடாது!


ஆழ்வார்க்கடியான் கோபமாக அண்ணனை பார்க்கிறான்.
இன்றைக்கு இவருக்கு என்ன வந்தது? பித்து பிடித்தவர் போல் நடந்து கொள்கிறாரே!
வீட்டுக்கு வேண்டுமானால் வந்து உன் பெரிய வயிற்றை நிரப்பிக் கொண்டு போ. ஆனால் கோயிலுக்-குள் அடி எடுத்து வைக்காதே!
அதையும் மீறி நீ இந்த சிவன் கோயிலுக்குள் நுழைந்தால் நான் சண்டேசுவர நாயனார் ஆகி விடுவேன்.
அண்ணா!
அதற்குள் ஈசான சிவபட்டர், படார் என்று கதவை மூடி உள்ளே தாள் போடுகிறார்.
ஏதோ விஷயம் இல்லாமல் அண்ணன் இவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்... ம்...


ஆழ்வார்க்கடியானின் அண்ணன் ஈசான சிவபட்டரின் வீடு.
ஏன்டா குழந்த இப்படி துரும்பா இளைச்சுட்ட...! நன்னா ஷாப்பிடு.
அண்ணி சப்பாடு பிரமாதம்.
அண்ணியின் உபசரிப்பில் நன்றாக சாப்பிட்டுவிட்டு திண்ணையில் படுத்து உறங்குகிறான் நம்ம ஆழ்வார்க்கடியான்.
ஈசான சிவபட்டர் அர்த்தஜாம பூஜையை முடித்து விட்டு வீட்டுக்கு வருகிறார். அங்கு தன் வீட்டு திண்ணையில் ஆழ்வார்க்கடியான் இருப்பதை கண்டு கோபமடைகிறார்,
இவன் இன்னும் போகாம, மோப்பம் பிடிச்சுண்டு இங்கேயே சுத்திண்டு இருக்கானா? இதோ வரேன்.



திருமலை! திருமலை!
ஆழ்வார்க்கடியான் ஆழ்ந்து தூங்குவது போல் பாசாங்கு செய்கிறான்.
கதவைப் படார் என்று சாத்தி விட்டு உள்ளே சென்ற ஈசான பட்டர் தன் மனைவியிடம் கோபப்படுகிறார்.
அவன் ஏன்டி இங்கே படுத்துண்டு இருக்கான்?
வந்தோமா, சாப்பிட்டோமா, போனோமானு இல்லாமல்...
ஜலத்தை எடுத்து அந்த திண்ணையில் கொட்ட வேண்டியதுதானே.
அண்ணனின் கோபக்குரலை கேட்டு ஆழ்வார்க்கடியான் ஒரு கண்ணை திறந்து பார்க்கிறான். மீண்டும் கண்ணை மூடிக் கொள்கிறான்


மறுநாள் காலை....
எப்போ புறப்படுற?
தாங்கள் கோபம் தணிந்த பிறகு புறப்படுவேன், அண்ணா!
இனி என்னை ஒருபோதும் "அண்ணா" என்று கூப்பிடாதே. இன்று முதல் நான் உன் தமையனும் அல்ல, நீ என் தம்பியும் அல்ல. நீ சிவதுவேஷி! நீ சண்டாளன்!
எதற்காக அவனை இப்படி எல்லாம் சபிக்கிறீர்கள்!
இத்தனை நாளும் சொல்லாததை அவன் இப்போது என்ன புதிதாகச் சொல்லி விட்டான். உங்களுக்குத்தான் சிவ பக்தி ரொம்ப அதிகமாக முற்றி விட்டது.


உனக்கு ஒன்றும் தெரியாது! இவன் கூறியது என் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியது போலிருந்தது.
இனிமேல் அப்படியெல்லாம் பேச மாட்டான் நான் புத்தி சொல்லித் திருத்தி விடுகிறேன். அவனிடம் நல்ல வார்த்தையாகச் சொன்னால் கேட்கிறான்.
நல்ல வார்த்தையும் ஆயிற்று, பொல்லாத வார்த்தையும் ஆயிற்று. இவனை உடனே இராமேசுவரத்துக்கு போகச் சொல்லு.
ஸ்ரீராமபிரான் தன் பாவத்தைப் போக்கிக் கொள்ள பூஜித்த சிவலிங்கத்தை இவனும் பூஜை செய்து விட்டு வரட்டும்.
தன் அண்ணன் கூறியதை கேட்டு ஆழ்வார்க்கடியான் கோபமாக தன் அண்ணனை பார்க்கிறான்.
ஏதோ பலமான விஷயம் இருக்கு இல்லைனா இப்படி தை, தைன்னு குதிக்க மாட்டார்.
அதுதான் இவனுக்குப் பிராயச்சித்தம். அப்படி செய்யும் வரையில் நான் இவன் முகத்திலேயே விழிக்க மாட்டேன்.


இராமேஸ்வரத்துக்குப் போகச் சொன்னால் போகப் போகிறான். அவனுடன் நாமும் போகலாம்.
இத்தனை நாள் ஆகியும் நமக்குத்தான் குழந்தை பாக்கியமே இல்லையே. பூர்வ ஜன்மத்தில், நாம் என்ன பாவம் செய்தோமோ என்னமோ?
திருமலை நீ என்ன சொல்கிறாய்? எல்லோருமாக இராமேசுவரத்துக்கு சென்று வருவோமா?
இவனை கெடுக்குறதே நீதான்.
என்று கூறிவிட்டு, ஈசான சிவபட்டர் அங்கிருந்து கோபமாக செல்கிறார்.
போட்ட போடுக்கு இனிமே நம்மை பின் தொடர்ந்து வரமாட்டான்.
ஈசான பட்டரை பின் தொடர்ந்து செல்கிறான் ஆழ்வார்க்கடியான்.

வடமேற்கற்றளியை சுற்றி பழைய சமணர்களின் முழைகள் காணப்படுகின்றன. அதில் ஏதோ ஒன்றில் வந்தியத்தேவனை பாதுகாப்பாக தங்க வைத்துள்ளார் ஈசான சிவபட்டர்.




தம்பி, கொஞ்சம் பொறு. யாராவது வருகிறார்களா என்று பார்க்கிறேன்.
யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திவிட்டு,
சரி வா, போகலாம்.
வேகமாக வா, யாராவது நம்மை பார்த்துவிடப் போகிறார்கள்.
ம்...!


ஈசானப்பட்டரும் அவரைப் பின் தொடர்ந்து வந்தியத்தேவனும் சமண முழையை விட்டு வெளியே வருகிறார்கள்.
அரசாங்கம் தேடும் குற்றவாளி அல்லவா இவன்! இவனை அழைத்துக்கொண்டு எங்கு செல்கிறார் அண்ணன். ஒருவேளை பிடித்துக் கொடுத்து ஆயிரம்பொன் பெற்றுக் கொள்ளவா?
தம்பி, நீ கொண்டு வந்த ஓலை பத்திரமாக உள்ளதல்லவா?
ஓகோ! இப்படி போகிறதா கதை.
இதற்காகத்தான் இந்த ஆர்பாட்டமா!


ஈசான சிவபட்டர், வந்தியத்தேவனை தன்னுடன் படகில் ஏற்றிக் கொண்டு எங்கேயோ அழைத்துச் செல்கிறார்.
அய்யா, இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?
எதற்காக இப்படி அவசரப்படுகிறீர்கள்?
நமது ஆழ்வார்க்கடியானும் அவர்களை ரகசியமாக பின் தொடர்கிறான். நீருக்கடியில் வெகுதூரம் நீந்தி அவர்களை பின் தொடர்ந்து செல்ல ஏதுவாக, தாமரை தண்டை ஒடித்து அதை வாயில் வைத்து சுவாசித்தவாறே அவர்களை பின் தொடர்கிறான்.


இறுதியாக ஒரு படித்துறை வருகிறது.
படகு கரை ஒதுங்குகிறது.
தம்பி, இறங்குவதற்கு தயாராகிக் கொள்.


ஒரு வழியாக வந்து சேர்ந்துவிட்டோம் போல் தெரிகிறது. இது எந்த இடம்?


தம்பி, பார்த்து கவனமாக இறங்கு, படித்துறையில் பாசி படிந்திருக்கும்.


படித்துறையின் அருகிலுள்ள பளிங்கு மண்டபத்தில், ஈசான சிவபட்டர் அழைத்து வருவதாக கூறிய கரிகாலரின் தூதுவன் வந்தியத்தேவனுக்காக காத்திருக்கிறாள் குந்தவை.


படகு கரைதட்டிய சத்தம் கேட்டு குந்தவை படித்துறையை நோக்கி பார்க்கிறாள்.
அப்போது குந்தவையின் கண்களும், வந்தியத்தேவனின் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்து கொள்கின்றன.
சோழநாட்டு இளவரசியை சந்திக்கப்போகிறோம் என்ற ஆர்வத்துடன், படித்துறையில் ஏறி வந்த வந்தியத்தேவன் இளையபிராட்டி குந்தவையை கண்டதும்.
இவர்தான் இளையபிராட்டி குந்தவையா!
இறந்த முதலையின் மீது வேலெறிந்த வீரன் என்று அல்லவா நம்மை பற்றி எண்ணி இருப்பார்...


இருவரும் ஒருவரையொருவர் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.
சோழ நாட்டின் இராஜகுமாரி என்றுகூட பாராமல், இப்படி வைத்த கண் வாங்காமல் பார்க்கிறானே இந்த தம்பி!
மணவாளன் எப்போது வருவான் என்று வானதி கேட்டபோது ஜோதிடர் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்றவுடன் வந்தவராயிற்றே இவர்!


அடுத்த நொடி இருவரும் கனவுலகில் சஞ்சரித்தார்கள்.
அந்த மாயவுலகில் கரைபுரண்டு ஓடும் இன்ப வெள்ளத்தில், காதல் எனும் படகேறி இருவரும் தங்களது பயணத்தை தொடங்கினார்கள்.
தேவி! நாம் இந்த ஜென்மத்தில்தான் முதன்முறையாக சந்திக்கின்றோமா?
ஏன் அப்படி கேட்கிறீர்கள்?
எனக்கு என்னமோ நாம் இருவரும் ஏழேழு ஜென்மமாக உறவாடி பழகி வந்தது போல ஒரு உணர்வு உண்டாகிறது...


உண்மையாகவா...!
ஆம் தேவி.....
எனக்கும் அப்படிதான் தோன்றுகிறது!
என் கண்ணே.......


அப்போது தொண்டையை கனைக்கிறார் ஈசானப்பட்டர்.
இருவரும் கனவுலகிலிருந்து வெளிவருகிறார்கள்.
துடும்
துடும்
இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்...... காஞ்சியி-லிருந்து வந்த ஒற்றன், கடம்பூர் சம்புவரையரின் மகன் கந்தமாறனை முதுகில் குத்திவிட்டு, தஞ்சை கோட்டை காவலையும் மீறி தப்பி ஓடிவிட்டான்.
துடும்
துடும்
துடும்


பார்க்க வாட்ட சாட்டமாகவும், ஆந்தையைப் போன்ற முழியையும் கொண்டிருப்பான். அவனை பிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி!
ஆஹா, நல்ல நேரம் பார்த்து இப்படி செய்கிறார்களே.....
குந்தவை வந்தியத்தேவனை பார்த்து
தாங்கள்தான் அந்த பிரகஸ்பதியா?
தேவி, நான் எந்த குற்றமும் செய்யவில்லை. தயைகூர்ந்து நான் சொல்வதை தாங்கள் நம்ப வேண்டும்.


தேவி, இதை பெற்றுக் கொள்ளுங்கள். இந்த ஓலையை தங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதே இளவரசர் ஆதித்த கரிகாலர் எனக்கு இட்ட கட்டளை.
இந்த ஓலையை உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பவன் என் நண்பன் வந்தியத்தேவன். அவனிடம் அந்தரங்கமான வேலை எதையும் நீ நம்பி ஒப்புவிக்கலாம். இப்படிக்கு ஆதித்த கரிகாலன்.
அய்யா, இவரிடம் அந்தரங்கமான விஷயம் பேச வேண்டும்.
இளவரசி கூறிய குறிப்பை உணர்ந்த சிவபட்டர்,
நல்லது தாயே! நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.


ஐயா பிரகஸ்பதி! வாருங்கள், சிறிது தூரம் படகில் சென்று வருவோம்.
சோழ நாட்டு இளவரசி குந்தவையுடன் படகில் பயணமா! என்ன என் அதிர்ஷ்டம்!!
படகு ஒரு தனிமையான இடத்தை நோக்கி செல்கிறது. படகில் குந்தவை, வந்தியத்தேவன் உடன் காது கேட்காத ஒரு படகோட்டி.
ஓலையை கொடுத்து விட்டீர்கள். இனி என்ன செய்வதாக உத்தேசம்?
தங்களிடம் ஓலையை கொடுத்த -துடன் என் வேலையும் முடிந்து விட்டது, இனி நான் ஊருக்கு திரும்ப வேண்டியதுதான்....
உமது வேலை இன்னும் முடியவில்லை, இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது.



என் வேலையும் இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கிறது.
தாங்கள் கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே...
உம்மிடம் அந்தரங்கமான வேலை எதையும் நம்பி ஒப்படைக்கலாம் என்று இளவரசர் ஓலையில் எழுதி இருக்கிறாரே... அதை பற்றி உங்களிடம் சொல்லவில்லையா?
இளவரசர் விருப்பத்தை நன்கு தெரிந்து கொண்டுதான் வந்தேன்,
ஆனால் இப்போது நாலாபுறத்திலும் பகைவர்கள் என்னை தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாங்கள் இடும் பணியை நான் எப்படி நிறைவேற்றுவது. என்னால் தாங்கள் காரியம் கெட்டுபோகக் கூடாதல்லவா?
யார்? யார் அந்த பகைவர்கள்?


பழுவேட்டரையர்கள் என்னை வேட்டையாடி பிடிக்க நாலாபுறமும் ஆட்களை ஏவி இருக்கிறார்கள். என் உயிர் நண்பன், அவனை நான் முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாக எண்ணிக்கொண்டிருக்கி-றான். ஆழ்வார்க்கடியான் எனும் வீர வைஷ்ணவ வேடதாரி ஒருவன், நான் செல்லும் இடமெல்லாம் என்னை பின் தொடர்ந்து கொண்டிருக்கிறான்..!!
பழுவூர் இளையராணி நந்தினிதேவி என்மீது ஒரு மந்திரவாதியை ஏவி விட்டிருக்கிறாள். எந்த நிமிடத்தில் யாரிடம் நான் அகப்பட்டுக் கொள் வேனோ எனக்கே தெரியாது!


ஐயா! பிரகஸ்பதி தாங்கள் காஞ்சியிலிருந்து புறப்பட்டு எத்தனை காலமாயிற்று?
சரியாக எட்டுநாள் ஆகிறது, தேவி.


அதற்குள் சோழநாட்டையே ஒரு பரபரப்புக் குள்ளாக்கி விட்டீர்கள்...! இவ்வளவு அசாத்தியமான காரியத்தை நீங்கள் எப்படி சாதித்தீர்கள்?
அது பெரிய கதை தேவி.
பாதகமில்லை, சொல்லலாம். அது தெரிந்தால்தான், தங்களுக்கு நான் இடவேண்டிய பணியை இடக்கூடும்.


ஆடி பதினெட்டு அன்று, ஆதித்த கரிகாலர் கொடுத்த ஓலையை எடுத்துக்கொண்டு
வீரநாராயண ஏரிக்கரை வழியாக வந்து கொண்டிருந்தேன்.
கரையெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. மக்கள்
குதுகலமாக விழாவை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.
அப்போது திடீரென்று ஒரே சலசலப்பு. என்னவென்று பார்த்தால், ஏழெட்டு படகுகள்
வீராண ஏரியில் வந்து கொண்டிருந்தன. அப்படகில் யார் வருகிறார்கள் என்று
விசாரித்தால், பெரிய பழுவேட்டரையர் வருவதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள்.
அந்த மாவீரரை பார்க்க வேண்டும் என்ற ஆவல் என் மனதில் தோற்றிக் கொண்டது.
அப்போது நல்ல வேளையாக ஆதித்த
கரிகாலர் கூறியது நினைவுக்கு வந்தது.
பெரிய பழுவேட்டரையர் கண்ணில் அகப்
-படாமல் அங்கிருந்து வந்துவிட்டேன்.


அன்றிரவு எங்கேயாவது தங்க வேண்டும் என்ற சூழ்நிலையில் எனது நண்பன் கந்தமாறனின் அழைப்பு நினைவுக்கு வந்தது. நேரே என் குதிரையை கடம்பூருக்குவிட்டேன்.
ஆனால், கடம்பூர் காவலர்கள் என்னை தடுத்து நிறுத்தினார்கள். என் தன்மானத்தை உரசிப் பார்த்தார்கள். ஒரு கட்டத்தில் என் உறைவாளை உருவிக்கொண்டு கடம்பூர் கோட்டைக்குள் சீறிப் பாய்ந்தேன். கடம்பூர் வீரர்கள் என்னை சுற்றி வளைத்தனர். என் வாள் சுழன்ற வேகத்தில் கடம்பூர் வீரர்கள் திணறினார்கள்.
அதற்குள் என் நண்பன் கந்தமாறன் வந்து சண்டையை நிறுத்தி என்னை சகல மரியாதைகளுடன் உள்ளே அழைத்துச் சென்றான்.
அன்றிரவு கடம்பூர் அரண்மனையில், இரவு விருந்துக்குப் பின் சூரசம்ஹாரமும், வள்ளி திருமணம் என்ற நாடகமும் நடைபெற்றது.
அப்போது திடீர் என்று ஒருவருக்கு சந்நதம் வந்துவிட்டது.
பூசாரி உடுக்கை அடித்து, உனக்கு என்ன வேண்டும் தாயே? என்று கேட்க
"அரசகுலத்து இரத்தம் வேண்டும்" என்றதுதான்... சபை அப்படியே நிசப்தம் ஆனது.



அப்போது பெரிய பழுவேட்டரையர் தொண்டையை கனைக்க நிசப்தம் விலகியது. அதன் பிறகு நான் படுக்கச் சென்றுவிட்டேன்.
நள்ளிரவில் பேச்சு குரல்கள் கேட்டது. இந்நேரத்தில் யார் பேசுகிறார்கள் என்று பார்த்தேன். ஒரு இருளடைந்த இடத்தில், பெரிய பழுவேட்டரையரின் தலைமையில், சிற்றரசர்களின் கூட்டம்.
அந்த கூட்டத்தின் நடுவில் ஒரு பல்லக்கு. என்னடா இது என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை.
அந்த கூட்டத்தின் முடிவில், அந்த பல்லக்கி லிருந்து ஒரு ஆண் வருவதைக் கண்டேன்.
மதுராந்தக தேவர் வாழ்க!
வருங்கால சக்கரவர்த்தி வாழ்க!
வருங்கால சக்கரவர்த்தி மதுராந்தக தேவருக்கு உடல், பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்து நியாயத்தை நிலை நாட்டுவோம்!
என்ற கோஷம் கேட்டு நான் அதிர்ந்து போனேன்.
அன்று நான் பழுவேட்டரையரிடம் அகப்படாமல் என் நண்பன் கந்தமாறன் காப்பாற்றினான்.


மறுநாள் காலை நேராக தஞ்சைக்கு புறப்பட்டேன். சின்ன பழுவேட்டரையரின் கட்டுக்காவலை மீறி தஞ்சை கோட்டைக்குள் எப்படி செல்வது என்ற யோசனை. அப்போது அந்த வழியாக ஒரு பல்லக்கு செல்வதை கண்டேன்,
அது முதல் நாள் இரவு மதுராந்தகன் வந்த பல்லக்கு என்று தெரிந்ததால், அவரை சந்தித்தால் ஏதாவது உபாயம் கிடைக்கும் என்று எண்ணி, எனது குதிரையை வேண்டுமென்றே பல்லக்-கில் கொண்டு போய் மோதினேன்.
அப்போது எனக்கு ஒரு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. பல்லக்கில் இருந்தது மதுராந்தகன் இல்லை, ஒரு பெண்!
அது பழுவூர் ராணிதானே?
ஆம் தேவி! அவள் என்னிடம் ஒரு முத்திரை மோதிரத்தை அளித்து தன்னை அரண்மனையில் சந்திக்கும்படி கூறிவிட்டு சென்றாள்.
அதை பயன்படுத்தி சக்கரவர்த்தியை சந்தித்து ஓலையையும் கொடுத்துவிட்டேன். அதற்குள் என் குட்டு வெளிப்பட்டுவிட்டது.
பழுவேட்டரையர்களின் ஆட்கள் என்னை துரத்த தொடங்கிவிட்டார்கள். எப்படியோ அவர்களிடம் இருந்து தப்ப எண்ணி இளையராணியின் வலையில் அகப்பட்டுக் கொண்டேன்.
அதற்குள் மந்திரவாதி ஒருவன் வந்தான்.


அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவளிடமிருந்து தப்பி ஒரு பாழடைந்த கட்டிடத்தில் வந்து சேர்ந்தேன். அந்த இருட்டறையில் பொற்குவியல்கள் குவிந்திருந்தன.
அதே வேளையில் மனிதர்களின் காலடி சத்தம், என்னவென்று பார்த்தால், ஒரு புறம் மதுராந்தகனும் கந்தமாறனும். மற்றொருபுறம் பழுவேட்டரையரும் உடன் பழுவூர் இளையராணி நந்தினி.
என் நண்பன் கந்தமாறனை பின் தொடர்ந்து தப்பிவிடலாம் என்று எண்ணி வந்தபோது, கந்தமாறனின் பின்னால் வந்த காவலன் அவனை கத்தியால் குத்திவிட்டான்.
காவலனை அடித்து என் நண்பனை காப்பாற்றி, கோட்டையை ஒட்டி வசிக்கும் ஒரு ஊமைப் பெண்ணின் வீட்டில் கொண்டு போய் சேர்த்தேன்.
அந்த வீட்டிலிருந்த, சாது பிள்ளை என்னை படுத்திய பாட்டை கேட்டால்...
என்ன அது?


ஒரு பொய் கூற மறுத்துவிட்டான்.
அப்படியென்றால் தாங்கள் சந்தித்த அந்த சாது பிள்ளை, சேந்தன் அமுதன் என்று சொல்லுங்கள்.
ஆமாம், சரியாக சொன்னீர்கள்.


ஒரு பக்கம் பழுவேட்டரையர்களின் ஆட்கள்,
ஒரு பக்கம் மந்திரவாதி... அப்பப்பா..!!
பின் எப்படி அவர்களிடம் இருந்து தப்பினீர்கள்?
கம்சன்தான் துணை!


தேவி! என்னை சுற்றி இத்தனை அபாயங்கள் இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன், என்னை நம்பி முக்கியமான வேலை எதுவும் ஒப்புவிக்க வேண்டாம்.
ஒன்றை ஒப்புக்கொண்ட பிறகு பின்வாங்குவதுதான் உங்கள் வானர் குலத்தின் மரபா?
ஒப்புக் கொண்டு பின் வாங்குவது வானர் குலத்து மரபு அன்று.
பின்னர் ஏன் தயக்கம்? வானர் குலத்-தில் பிறந்த வீரபுருஷன் கேவலம் ஒரு பெண்ணின் ஏவலைச் செய்வதா என்று தயக்கமா? அல்லது என்னை கண்டால் பிடிக்கவில்லையா?


ஆகா! இது என்ன கேள்வி? கடலுக்கு சந்திரனைப் பிடிக்காமல் போகுமா? வண்டுகளுக்கு மலர்களைத் தான் பிடிக்காமல் போகுமா? சோழநாட்டு இளவரசி கட்டளையிட்டால் சிரமேற்கொண்டு செய்ய பலர் இருக்க கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடலாமா?
என்ன, முடிவு எடுத்து விட்டீர்களா? திரும்ப காஞ்சிக்கு போவதென்று...
முன் வைத்த காலை பின் வைப்பதில்லை வாணர் குலத்தை சேர்ந்தவர்கள்.


அப்படியா...?
சந்தேகம் வேண்டாம் தேவி. தாங்கள் இடும் கட்டளையை சிரமேற்கொண்டு நிறைவேற்றி வைக்கிறேன்.
அப்படியென்றால் தாங்கள் காலம் தாழ்த்தாமல் இலங்கைக்கு சென்று இங்குள்ள நிலவரங்களை விளக்கி பத்திரமாக என் சகோதரன் அருள் மொழியை அழைத்து வரவேண்டும்.


என் அன்பு சகோதரா, நீ இந்த
ஓலையை கண்டதும் உடனே புறப்பட்டு
வரவும் விவரங்கள் இதை கொண்டுவருபவர்
கூறுவார். இவரை பூரணமாக நம்பலாம்.
ஆத்தி இலை இளவரசி குந்தவையின் முத்திரை.
தேவி! என் மனதுக்குகந்த பணியையே தருகிறீர்கள்! ஓலையை எடுத்துக்கொண்டு இப்போதே புறப்படுகிறேன்.


அவசரம் வேண்டாம். உங்கள் பயணத்துக்
கான தகுந்த ஏற்பாடுகளை செய்து அனுப்பி
வைக்கிறேன். என் சகோதரனை பத்திரமாக
தஞ்சைக்கு அழைத்து வரவேண்டியது
உம்முடைய பொறுப்பு, புரிகிறதா?


அவனுக்கென்ன, பயணத்திற்கான ஏற்பாடுகளை
செய்ய இளவரசி இருக்கிறார்கள், எனக்கு யார்
இருக்கா? நானேதான் ஓடியாக வேண்டும்.
இதோ வரேன்
குருவே.......!


ஆழ்வார்க்கடியான் வரும் வழியில் சமயச் சண்டை நடைபெறுகிறது.
சிவபெருமான்தான் பெரிய தெய்வம்.
இல்லையில்லை! விஷ்ணுதான் பெரிய தெய்வம்.
அவ்வழியாக ஆழ்வார்க்கடியான் சென்றதை கண்ட ஒரு வைஷ்ணவன்,
அதோ! அங்கே செல்கிறாரே அந்த வீர வைஷ்ணவரை அழைத்தால் போதும். இந்த சைவப் பட்டர்கள் எல்லாம் தெறித்து ஓடிவிடுவார்கள்.
அய்யா! வைஷ்ணவ சிகாமணியே... இங்கே உடனே வாருங்கள்.
உங்களால்தான் இந்த விவாதத்தை முடித்து வைக்க முடியும்.


அடடா.... இந்த நேரம் பார்த்துதான் இந்த அருமையான விவாதம் நடக்க வேண்டுமா? இப்படி வலிய வரும் சண்டையை விட்டுச் செல்லும்படி நேர்ந்துவிட்டதே...!
இல்லை ஓய்! என்னால் இப்போது வர முடியாது. நான் அவசர வேலையா போயிட்டிருக்கேன்.
அவாளை வந்து ஒரு கை பார்க்கிறேன்.
என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு நழுவிச் செல்கிறான் ஆழ்வார்க்கடியான்.
ஓய் நம்பி!
ஓய் முன்குடுமி! இப்படி வாரும்.
ஹா... ஹா...!
ஹா... ஹா...!
வழியில் எங்கும் அவன் சைவ, வைஷ்ணவ சண்டையில் இறங்கவில்லை. காரியத்துக்கு குந்தகம் வந்துவிடக் கூடாதென்று மனதை கட்டுப்படுத்திக் கொண்டான்.
ஹா... ஹா...!
ஹா... ஹா...!
ஆழ்வார்க்கடியான் தன் குருநாதரை நோக்கிச் செல்லட்டும். நாம் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் எங்கு இருக்கிறார்கள் என்று பார்ப்போம்.


கோடிக்கரை...
கோடிக்கரையிலிருந்து இலங்கை செல்ல வேண்டுமென்றால், தியாகவிடங்கரின் உதவியில்லாமல் செல்ல முடியாது.
அவர் நமக்கு உதவி செய்வார் என்பது என்ன நிச்சயம்.
நீ எதற்கு பயப்படுகிறாய். சோழ நாட்டு பொன் இருக்கும்போது நமக்கு என்ன கவலை! பணம் பத்தும் செய்யும் என்பது உனக்குத் தெரியாதா?


தியாகவிடங்கரின் மகளிடம் தியாகவிடங்கரை சந்திக்க வேண்டும் என்று ரவிதாசன் கேட்க, அதற்கு அவள் அவர்கள் இருவரையும் தியாகவிடங்கரிடம் அழைத்து வருகிறாள்.


ஐயா! நாங்கள் அவசரமாக இன்றே இலங்கை செல்ல வேண்டும்.
இப்போதைக்கு படகு ஏதும் இல்லையே!


உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும். அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
பணம் தங்களிடமே இருக்கட்டும். நான் பணத்திற்காக சொல்லவில்லை.
தியாகவிடங்கரின் மருமகள் ராக்கம்மாள் பணம் என்ற வார்த்தையைக் கேட்டதுதான்..
என்னங்க....
ஓ..
மனைவியின் குரல் கேட்டதுதான் தாமதம், சமையலறைக்கு செல்கிறான் தியாகவிடங்கரின் மகன் (முருகையன்). பின் என்ன நடந்திருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.
மனைவி கூப்பிட்டதும் இப்படி விழுந்தடிச்சு ஓடுகிறானே! இவனை என்னவென்று சொல்வது...
தியாகவிடங்கர் கோடிக்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்தின் தலைவர். சோழப் பேரரசின் கீழ் பணி புரிபவர் - நேர்மையானவர்.


படகோட்டி முருகையன் தன் மனைவியின் பணத்தாசைக்காக இலங்கைக்கு படகு செலுத்த சம்மதிக்கிறான்.
நான் அப்போதே கூறினேன் அல்லவா பணம் பாதாளம் வரை பாயும் என்று.
பணம் பாதாளம் வரை சென்று பாயுமா என்று தெரியாது. ஆனால், அந்த வீட்டு சமையல் அறை வரை பாய்ந்திருக்கிறது.
ஹோ..ஹோ..
ஹோ..ஹோ..
இவர்கள் இலங்கை செல்லட்டும். நாம் பழையாறை சென்று பார்ப்போம்.


பழையாறை அரண்மனை.
இளவரசி! தாங்கள் புறப்படுவதற்கு அம்பாரி தயாராக உள்ளது.
சரி புறப்படுவோம்.
அக்கா! நாம் இப்போது எங்கே போகிறோம்?
ஆதுரசாலைக்கு.


பழையாறை அரண்மனையிலிருந்து புறப்பட்டு குந்தவையும், வானதியும் யானை மேல் அம்பாரியில் அமர்ந்தபடி பழையாறை வீதிகளின் வழியாக வருகிறார்கள்.
சுந்தர சோழரின் தவப் புதல்வி! சோழ நாட்டின் இளவரசி இளைய பிராட்டி பராக்! பராக்..!


நம்ம இளவரசி மாதிரி வேற எந்த நாட்டு இளவரசிகளும் இருக்கமாட்டாங்க.
மக்களின் தேவையறிந்து செயலாற்றுவதில் நம்ம இளவரசி இளையபிராட்டி குந்தவையை மிஞ்ச இந்த வையகத்துல யாரும் இல்ல!


இளவரசி வாழ்க!
இளையபிராட்டி குந்தவை தேவி வாழ்க!
பழுவூர் இளையராணி மாதிரி நம்ம இளவரசி மூடு பல்லக்கில போறவங்க இல்ல. வெளிப்படையாகவே யானை மேல உட்கார்ந்து கம்பீரமாதான் போவாங்க!
இதோ, இளவரசி!


ஆதுரசாலை (வைத்தியசாலை)
பராந்தகர் ஆதுரசாலை
தாயே! வர வேண்டும், வர வேண்டும். (தலைமை வைத்தியர்)


பொதுமக்களை பார்த்து குந்தவை..
ஐயா! ஆதுரசாலை உங்களுக்கெல்லாம் உபயோகமாயிருக்கிறதா?


என்ன தாயே! இப்படி கேட்கிறீர்கள் தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடு மிகவும் உபயோகமாக உள்ளது.


வைத்தியர்கள் தினந்தோறும் வந்து நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கிறார்கள் அல்லவா?
சிறப்பான வைத்தியம் கிடைக்க வழி செய்தீர்கள் தாயே!


என்ன ஆச்சரியம்! மூன்று மாதமாக இருமலினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஒரு வாரம் வைத்தியரிடம் மருந்து வாங்கி சாப்பிட்டதில் முற்றிலுமாக குணமாகி விட்டது.
அம்மா! என் மகன் மரத்தின் மேல் ஏறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டான். வைத்தியர் கட்டுப் போட்டுப் பதினைந்து நாள் மருந்து கொடுத்திருக்கிறார். இப்போது வலி குறைந்திருக்கிறது. இன்னும் ஓரிரு நாளில் நடந்து விடுவான்.
தாயே! என் தாயாருக்கு கொஞ்சம் காலமாக கண் மங்கலடைந்து வருகிறது. ஒரு மாதம் இந்த ஆதுரசாலை வந்து மருந்து போட்டு வருகிறேன். இப்போது என் தாயாருக்கு நன்றாக கண் தெரிகிறதாம்.


பார்த்தாயா வானதி! நம் தமிழகத்தில் வாழ்ந்த முன்னோர்கள் எப்பேர்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.
இன்ன வியாதிக்கு இன்ன மூலிகையினால் தீர்க்கலாம் என்று அவர்கள் எப்படித்தான் கண்டுபிடித்தார்களோ!?
ஞானக்கண் கொண்டு பார்த்துதான் அவர்கள் இவ்வளவு அதிசயமான மருந்துகளை கண்டு பிடித்திருக்க வேண்டும்.


அக்கா, நாம் ஆதுரசாலைக்குள் சென்று பார்க்கலாமா?
தேவி, ஆதுரசாலைக்குள் தாங்கள் திருவடி பட நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!
ஐயா! பெரிய வார்த்தைகள் எல்லாம் எதற்கு? வாருங்கள் உள்ளே செல்வோம்.


தாயே, இது எலும்பு முறிவுக்கான சிறப்பு பிரிவு.
அப்படியா..!
அப்படியென்றால், இதை அண்டை நாட்டில் அல்லவா நிறுவியிருக்க வேண்டும்! அப்போதுதான் நமது வீரர்களால் அடிபட்டவர்களுக்கு உதவியாயிருக்கும்.


தேவி, இவர்தான் எலும்பு முறிவிற்கான நிபுணர்.
தாயே! வணக்கம்.
இவர் புற்று நோய்க்கான நிபுணர்.
வணக்கம் அம்மா!
இது மன அழுத்தத்தை போக்கும் வைத்தியம். மலைநாட்டு வைத்திய முறை.


அற்புதம் வைத்தியரே! நம் சோழ தேசமெங்கும் இம்மாதிரி வைத்திய சாலைகளை ஏற்படுத்த வேண்டும்.
நல்லது இளவரசி, அப்படியே செய்து விடுவோம்.
அதற்கு தேவையான ஏற்-பாடுகளை செய்யுங்கள்.
அய்யா... மூலிகை கொண்டு வர தகுந்த ஆள் தேவை என்று கேட்டீர்களே, நான் அனுப்பிய ஆள் வந்து விட்டாரா? எங்கே அவர்?
வந்துவிட்டார் தாயே, இதோ அழைக்கிறேன்.
மகனே.....


வைத்தியர் அழைத்தவுடன் வேறொரு அறையிலிருந்து வந்தியத்தேவனும் உடன் வைத்தியர் மகன் பினகாபாணியும் வருகிறார்கள்.
வந்தியத்தேவன் மாறுவேடம் போட்டு வருகிறான்.
வைத்தியர் மகனா இவன்! ஆளே ஒரு மார்க்கமாய் இருக்கிறானே?
இளவரசியின் எண்ணத்தை நிறைவேற்ற இவனை எதற்காக தந்தை நம்முடன் அனுப்புகிறார். நாம் மட்டும் போதாதா!


வந்தியத்தேவனை மாறுவேடத்தில் கண்டவுடன்....
ஆள் சரியான வேடதாரிதான்!
ஐயா! இதில் உம்முடைய மகன் யார்?
தாயே! இவன்தான் என் மகன் பினகாபாணி.
நல்லது!
வைத்தியர் மகன் குந்தவையும், வானதியையும் கண்டவுடன், மகிழ்ச்சியின் உச்சிக்குச் சென்று ஈ... என்று பல்லை காட்டுகிறான்.



தானே எல்லா ஏற்பாடுகளையும் செய்த குந்தவை, ஒன்றும் தெரியாதது போல்..
ஏனப்பா! நீங்கள்தானா சக்கரவர்த்தியின் உடல் நலத்திற்காக மூலிகை கொண்டு வருவதற்கு ஒப்புக் கொண்டவர்கள்?
ஆம் இளவரசி! நாங்கள்தான் இலங்கைக்குப் போக ஒப்புக் கொண்டவர்கள். ஒருவேளை அங்கு இளவரசரைப் பார்த்தாலும் பார்ப்பேன். அவருக்கு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா?
அய்யோ! இளவரசி என்ன அழகு!
பார்த்தால் அவசியம் இந்த செய்தியைச் சொல்லுவீர். கொடும்பாளூர் இளவரசி வானதிக்கு உடம்பு சரியாகவே இல்லை அடிக்கடி நினைவு இழந்து மூர்ச்சை போட்டு விழுகிறாள். இளவரசியை சுய பிரக்ஞையோடு பார்க்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வர வேண்டும் என்பதாக தெரிவிக்க வேண்டும்.
அக்கா போதும் பரிகாசம்.
அதை நான் பார்த்துக் கொள்கிறேன் இளவரசி...
ஐயா! அப்படியொன்றும் தாங்கள் சொல்லிவிட வேண்டாம். ரொம்பவும் தங்களை வேண்டிக் கொள்கிறேன்.


சரி பேசி நேரத்தைக் கழிக்க வேண்டாம். சென்று வெற்றியுடன் வாருங்கள்!
இளவரசி ஏன் நம்மை பார்க்காமல் அவனையே பார்த்து பேசுகிறார்!
தாங்கள் உத்தரவு.
இளையபிராட்டியின் அறிவு கூர்மையைப் பற்றி நாடெங்கும் கூறுவது உண்மைதான்.
ஐயா... நாங்கள் புறப்படுகிறோம்.
நல்லது தாயே! தாங்கள் அடிக்கடி இந்த வைத்திய சாலைக்கு வர வேண்டும்.
இளவரசி வானதி வந்தியத்தேவனுக்கு, இளவரசி குந்தவை தன்னை பற்றி கூறியதை மறக்காமல் கூறிவிடும்படி பார்வையினாலேயே உணர்த்துகிறார்.


இளவரசி குந்தவையின் உத்தரவை பெற்றுக் கொண்டு வந்தியத்தேவனும், பினகாபாணியும் புறப்படுகிறார்கள். குதிரை மின்னல் வேகத்தில் பாய்கிறது.
அக்கா.. நாம் புறப்படுவோமா?
ஆனால் குந்தவையிடமிருந்து எந்த ஒரு பதிலும் இல்லை, குதிரை சென்ற திசையையே கண்கொட்டாமல் பார்க்கிறார் இளவரசி குந்தவை.
அக்கா.... நாம் புறப்படலாமா?
ம்ம்ம்.....
எங்கே அக்கா? பழையாறை அரண்மனைக்கா? அல்லது கோடிக்கரைக்கா..?
போடி.... அதெல்லாம் ஒன்றுமில்லை.


வழியில் சோதனைச் சாவடி வருகிறது.
உனக்கு ஒன்று தெரியுமா? யாரோ ஒருத்தன் காஞ்சியிலிருந்து தலைநகர் தஞ்சைக்கு வந்தானாம்! கட்டுக் காவலையெல்லாம் மீறி கோட்டைக்குள்ள நுழைந்ததுமில்லாமல் சம்புவராயர் மகனை கத்தியில் குத்திவிட்டானாம். அவனைப் பிடித்து தருபவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதியாம்!
அப்படியா! அப்படியென்றால் யாரு வந்தாலும் விடக்கூடாது. சோதனை செய்து அனுப்பனும், புரியுதா?
குதிரையின் காலடிச் சத்தம் கேட்டு சுங்கச் சாவடியில் உள்ள காவலன் யார் வருகிறார்கள் என்று பார்க்கிறான்.
ஆமாம், நீ விரும்பும் அந்த பெண் நம்ம இளைய பிராட்டி அளவுக்கு அழகா இருப்பாங்களா?
கிட்டத்தட்ட நம்ம இளவரசி மாதிரியே இருப்பாள்.
இவனுக்கெல்லாம் அதிர்ஷ்டம் அடிக்கிறது.
இப்படி வந்தியத்தேவன் சொன்னதும் பினகாபாணியின் குரோதம் (பகை) பல மடங்கு அதிகமாகிறது.


சோதனைச் சாவடியில் காவல் கோபுரத்தின் மேலிருந்த காவலன் தூரத்தில் இவர்கள் வருவதைக் கண்டவுடன்.
ஏய்!
அதோ இரண்டு குதிரைகள் வருகின்றன, அவர்களை மடக்குங்கள்.
ஆங்... என்ன சொல்றிங்க..!
ஏய் செவிடா! சொல்றது கேட்கலையா? தடுப்பு கழியை இறக்கு....
எதிர் முனையிலிருந்த காவலன் கயிற்றை பிடித்து இழுக்க சாலையின் குறுக்கே ஒரு தடுப்பு கழி இறங்குகிறது.


வந்தியத்தேவன் தன் மனதில் இருக்கும் பெண், இளவரசி குந்தவைக்கு சமமான அழகுடையவள் என்பதை சொன்னவுடன் பொறாமையில் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறான் பினகாபாணி.
என்ன வைத்திய சிகாமணியே உம்முடைய அனுபவத்தைச் சொல்லுங்க!
ஏய்! நில்லுங்கப்பா!
சோதனைச் சாவடியில் தடுப்பு கழியை இறக்கியவுடன் வந்தியத்தேவன் சரியாக நின்று விடுகிறான்.
டகடக்.. டகடக்..
டக்.. டக்.. டக்..


கோபத்திலிருந்த பினகாபாணியினால் சட்டென்று நிற்க முடியவில்லை.
குறுக்குல கழிபோட்ட மடையன் யாரு?
ஆ...
ஆ...
திடீர் என்று தடுத்தபடியால் குதிரையை நிறுத்த முடியாமல் தடுப்புக் கழியை தாண்டி விழுகிறான் பினகாபாணி.
தொப்
அவனை பற்றி நினைச்சிட்டே வந்து கடைசில நாம விழுந்துட்டோமே!


பினகாபாணியின் உடம்பெல்லாம் மண்ணாகிவிடுகிறது. கோபத்துடன் அதை தட்டி விட்டுக் கொண்டே...
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...
யார் நீ?
நான், நான் வைத்தியன்.
எதற்காக எங்களை தடுத்தீர்கள்?
உங்களைப் பார்த்தால் வைத்தியர்கள் போல் தெரியவில்லையே?


அவன் ஏதாவது உளறிக் கொட்டினால்
நாம் அல்லவா அகப்படுவோம்!
பதட்டத்தில் இளையபிராட்டி குந்தவை
கொடுத்த ஓலையை தேடுகிறான்.
அந்த ஓலையை தேடி எடுத்து காவலர்களிடம்
கொடுக்கிறான்.
இதோ, இதை
பாருங்கள்.
அதைப் படித்த காவலன்
தலைமைக் காவலனிடம்,
இவர்கள் பழையாறையில் உள்ள ஆதுர
சாலையிலிருந்து அரசு அனுமதி பெற்று
வருகிறார்கள்.
சரி அவங்களை
உள்ளே விடு.
இதற்கு பதில் சொல்லுங்கள்....
எதற்காக குற்றவாளியை
தடுப்பது போல்
எங்களை
தடுத்தீர்கள்?


காஞ்சியிலிருந்து வந்த ஒற்றன் ஒருவன் சம்புவரையர் மகன் முதுகில் குத்தி விட்டு தப்பிவிட்டானாம்!
அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதியாம்!!
சரி, சரி செல்லுங்கள். ஏதாவது துப்பு கிடைத்தால் கூறுங்கள் பரிசைப் பங்கு போட்டுக் கொள்ளலாம்.
அப்பா! நல்ல வேளை என் வாளுக்கு அவர்கள் வேலை கொடுக்கவில்லை.
காவலன் தடுப்பு கழியை உயர்த்துகிறான்.
இவன் முழியே சரியில்லையே!?
சோதனை சாவடியை விட்டு இருவரும் விரைந்து செல்கின்றனர்.


உன்னுடைய முன்னோர்கள் வைத்தியர்களா?
ஏன் கேட்கிறாய்?
உன்னை என்னோடு மூலிகை எடுக்க என் தந்தை அனுப்பி இருக்காரே, உன்னைப் பார்த்தால் வைத்தியர் வம்ச வழியில் வந்தவனாக தெரியவில்லையே..!
உன்னைப் பார்த்தாலும்தான் அப்படி ஏதும் தெரியவில்லை!
சரி, உனக்கு சஞ்சீவி மூலிகை எப்படி இருக்கும் என்று தெரியுமா?
எனக்கு தெரியாமல் போகுமா? என் பாட்டன்தான் சஞ்சீவி மலையையே இலங்கைக்கு கொண்டு வந்தார்.


இருக்கும்...
இருக்கும்...!
அதோ, கலங்கரை விளக்கம். நாம் கோடிக்கரை வந்துவிட்டோம்.
அதன் அருகில் ஏதோ கோயில் போலத் தெரிகிறது. அது என்ன கோயில்?
அதுதான் குழகர் கோயில்.
அங்கு செல்ல சாலை ஏதும் இருப்பதாக தெரியவில்லையே.


ஆமாம். சாலையேதும் அதற்கு கிடையாது, காட்டு பாதையில்தான் போக வேண்டும்.
வேறு வழியில்லை சென்றுதானே ஆக வேண்டும்.
என்று கூறிக் கொண்டே செல்கின்றனர். சிறிது தூரம் சென்றபின்....
என்னது வழி ஒன்றும் தெரியவில்லையே! கிழக்கு எது மேற்கு எது என ஏதும் தெரியவில்லை!
நாம் இப்போது எங்கிருக்கிறோம்?!


இப்போது நாம் என்ன செய்வது? இருட்டிவிட்டால் காட்டில் வழி தேடி செல்வது சிரமம் ஆகிவிடும்.
பொழுதோடு கோடிக்கரை கலங்கரை விளக்கத்துக்கு சென்றால் அல்லவா தியாகவிடங்கரிடம் உதவி கேட்டு இலங்கை செல்ல முடியும்.
வந்தியத்தேவனின் குதிரை எதையோ கண்டு மிரளுகிறது.
அப்போது பயங்கரமான தோற்றத்துடன் காட்டுவாசி இலைமறைவிலிருந்து எட்டிப் பார்க்கிறான்.
பினாகபாணி இங்கே பார்! யாரோ நம்மை செடி மறைவிலிருந்து எட்டிப் பார்க்கிறார்கள். இவர்களை கேட்டால் வழி கூறி விடுவார்கள்.



இன்னும் பல காட்டுவாசிகள் புதரிலிருந்து எழுகிறார்கள். அதைக் கண்டு பிஙகாபாணி பயப்படுகிறான்.
இவர்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்?
அய்யோ! முதலில் நாம் இங்கிருந்து போய் விடுவோம்.
அவர்கள் ஆபத்தானவர்கள், காட்டுவாசிகள். நாகரிகம் அற்றவர்கள்.
வைத்தியரே! அது உமது கற்பனை...
அவர்களை நாகரிகம் அற்றவர்கள் என்று சொல்லாதே! ஆசை அற்றவர்கள் என்று கூறு.
அங்கிருந்த காட்டுவாசிகள் இவர்களை நெருங்கி வருகிறார்கள்.
ஏய் ஜஒம்பா!
ஏய் ஜம்பா!


காட்டுவாசிகள் கூட்டமாக அவர்களை சுற்றி வளைக்கின்றனர்.
ஜும்பா ஹே! ஜும்பா....
ஜும்பா ஹே! ஜும்பா....
இந்த கிழவன் வேற நம்மல உற்று பார்க்கிறான்!
என் உடம்பிலே சதை அதிகம் இருக்குன்னு பார்க்கிறானா?
இவர் எதற்காக இப்படி இருவரையும் மாறி மாறி பார்க்கிறார்.


அந்த முதியவர் அவர்களின் கூட்டத்தோடு ஏதோ கலந்து பேசுகிறார்.
அதன் பின் நான்கு பேர் வந்து வந்தியத்தேவனை தூக்கிச் செல்கிறார்கள்.
நம்மை எதற்காக தூக்கிச் செல்கிறார்கள்!
அப்பா! எப்படியோ நாம தப்பிச்சோம்..
நால்வர் வந்தியத்தேவனை சுமந்து கொண்டிருக்க, மற்றவர்கள் அவர்களைச் சுற்றி ஆடிப்பாடுகிறார்கள்.


இவர்கள் கொண்டாடுவதைப் பார்த்தால் ஒருவேளை நம்மை பலியிடப் போகிறார்களா? ஆகா!
ஹா.. ஹா..
அந்த கூட்டத்திலிருந்த முதியவர் இவன் தலையில் இலைகளிலான கிரீடத்தை வைக்கிறார்.
அட! நம்ம பூர்வீக ராஜ்யம் கிடைக்குமென்று பார்த்தா.. நம்மை காட்டுக்கு ராஜாவா ஆகிட்டாங்களே..!
அட, இவனுக்கு வந்த வாழ்வ பார்த்தியா!
இதைக் கண்ட பினகாபாணிக்கு பொறாமை தோன்றுகிறது.


ஏய்! ஜூம்பா....
ஏய்! ஜம்பா....
என்று கூறி வந்தியத்தேவனை வழி அனுப்புகிறார்கள்.
அவர்களிடம் வழி கேட்டாயா?
வழி கேட்டேன்.
அவர்கள் வழி சொன்னார்களா?
சொன்னார்கள்....
சரி, அப்படியென்றால் நாம் எந்த பக்கமாக செல்ல வேண்டும்.
சொன்னார்கள். ஆனால், எனக்குத்தான் அவர்கள் கூறியது ஒன்றும் புரியவில்லை.
இவர்கள் தேடிக் கொண்டு வரட்டும் நாம் கோடிக்கரை செல்வோம்...


கடல் அலைகளின் மேல் ஆனந்த நடனம் ஆடி வருவது யார்?
அட ஒரு பெண்! ஒரு வேளை இவள்தான் சமுத்திர குமாரியோ?
இருக்கலாம். இல்லையென்றால் கடல் அலை மேல் இவ்வளவு லாவகமாக வர முடியுமா!


கடலில் ஆனந்த நடனம் ஆடியவள், தன் கட்டுமரத்தை கரையில் வந்து நிறுத்துகிறாள்.


அப்போது குழகர் கோயிலில் சேமங்கலம் அடிக்கும் ஓசை கேட்கிறது...
டாங் டாங்
நாம் இப்போது வீட்டுக்கு சென்று என்ன செய்யப் போகிறோம். குழகரை சந்தித்து நிறைய நாட்கள் ஆகிவிட்டது. ஆகையால் முதலில் *குழகரை சந்தித்து பிரசாதம் பெற்றுக் கொண்டு பின் வீட்டுக்கு செல்வோம்.
*குழகர் என்பது சிவனுடைய மற்றொரு பெயர்.


இப்படி முடிவு செய்து கொண்டு கோயில்
இருக்கும் திசையை நோக்கி நடந்தாள்.
இம்முறை பட்டரை புதிய தேவாரப் பாடல் பாடச் சொல்லி கேட்க வேண்டும்.
வழியில் மான் கூட்டம் தாவி ஓடுவதைக் கண்டு....


மான்களே, நீங்கள் மட்டும் தான் தாவி, தாவி ஓடுவீர்களா! நான் கூடதான் தாவி, தாவி ஓடுவேன்.
என்று அவளும் தாவி, தாவி ஓடினாள்.......


ம் ம..ம்...மே...ம்ம
ஒரு மான் குட்டி மட்டும் தவறி ஒரு புதை சேற்றில் சிக்கிக் கொண்டது.
அது அந்த புதைகுழியை விட்டு வெளிவர முடியாமல் தவித்தது. பெரிய மான்கள் செய்வது அறியாது அந்த புதைகுழியை சுற்றி நின்று தவித்தன....
அந்த குட்டி மானின் அலறல் ஒலி கேட்டு அவள் திரும்பிப் பார்க்கிறாள்...
மே...
மே...
உடனே வந்து அந்த மான் குட்டியை காப்பாற்றுகிறாள்.


தன் குட்டி காப்பாற்றப்பட்ட சந்தோஷத்தில் தாய் மானும், குட்டி மானும் அவளுக்கு தங்கள் மொழியிலேயே நன்றி தெரிவித்துவிட்டு மகிழ்ச்சியாக ஓடுகின்றன.
ஒரு உயிரைக் காப்பாற்றிய சந்தோஷத்தில் அவள் அங்கிருந்த கோயிலை நோக்கிச் செல்கிறாள்.


வாம்மா! கொஞ்ச நாளா உன்னை இந்த பக்கமே பார்க்க முடியல?
தாங்கள் புதிது, புதிதாக தேவராப் பாடல் பாடுவதாக இருந்தால் தினந்தோறும் இங்கு வருவேன்.
அப்படியா!
சரி, பிரசாதத்தைப் பெற்றுக் கொள்.
அம்மா கொஞ்சம் காத்திருக்கிறாயா? இதோ நானும் சந்நிதியை பூட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்.
தட்டில் தேங்காய் மூடி, ஒரு தொன்னையில் பிரசாதம், வாழைப்பழம் கொஞ்சம், பூ இருக்கிறது. அதிலிருக்கும் பூவை எடுத்து தலையில் சூட்டிக் கொள்கிறாள். பிறகு அரை மூடி தேங்காய் எடுத்துக் கொள்கிறாள்.


ஐயா! எனக்கு அவசரம் ஒன்றுமில்லை. மெதுவாக கோயில் கைங்கரியங்களை முடித்துக் கொண்டு வாருங்கள்.
என்று கூறிவிட்டு அவள் மரக்கிளை ஒன்றை பிடித்து பிரகாரத்தின் மதில் சுவரின் மேல் தாவி ஏறினாள்.


மதில் மேலிருக்கும் நந்தி சிலையின் மேல் சாய்ந்து கொண்டு தேங்காய் மூடியை பல்லினால் கடித்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்...
அப்போது அவளை நோக்கி இரண்டு பேர் குதிரையில் வருகிறார்கள்.
வந்தியத்தேவன் மதில் மேல் இருக்கும் பெண்ணை பார்த்துச் சிரிக்கிறான்.
அவள் வந்தியத்தேவனை பார்த்ததும்....


இளவரசன் அருள்மொழிவர்மரின் முகம் நினைவுக்கு வருகிறது.
அந்த கம்பீர முகம் கொண்ட இளவரசன் அருள்மொழிவர்மன் எங்கே? இவனுடைய முகம் எங்கே?....
பார்க்கப் போனால் இவன் முகம் ஆந்தை மாதிரி அல்லவா இருக்கு!


ஏய்! பெண்ணே.... (என்று வந்தியத்தேவன் அழைத்ததும்)
அவள் தேங்காய் மூடியை தூக்கி வீசி விட்டு...
மதில் சுவற்றின் மேலிருந்து குதித்து ஓடுகிறாள்...
யார் இவன்? ஏன் நம்மை அழைக்கிறான்!
நில்!


ஏன் நம்மை கண்டு இப்படி ஓடுகிறாள்? என்று எண்ணியவன் தானும் குதிரையிலிருந்து குதித்து அவளை பின் தொடர்ந்து ஓடுகிறான்...
அவள் தாவி, தாவி மானைப் போல் ஓடுகிறாள்...
பெண்ணே! ஓடாதே நில்.


ஒரு சமயம் அவன் கண்ணுக்கு தெரிந்தாள் மறுகணத்தில் மறைந்தாள்.
எங்கே போனாள்! இப்போது தானே அவளை பார்த்தேன்.
ஆ! அதோ ஓடுகிறாள்...
இவள் மானா அல்லது மாரீசனா...? அடிக்கடி மறைந்து விடுகிறாளே...
என்று நினைத்து அந்த பெண்ணை விடாமல் பின் தொடர்கிறான் வந்தியத்தேவன்.


அதற்கு மேல் அவனால் ஓட முடியவில்லை, மூச்சு வாங்குகிறது.
ஒரு மரத்தின் கிளையை பிடித்தபடி மூச்சு வாங்குகிறான்.
அம்மம்மா! என்ன விரைவாக ஓடுகிறாள். போதும்பா சாமி...
அட! போயும், போயும் ஒரு பெண்ணிடம் நாம் தோற்றுவிடுவதா? அப்போது நம் வானர் குலத்தின் பெருமைதான் என்னாவது!?
என்று எண்ணி மீண்டும் அவளை துரத்துகிறான்.
கடல் வந்துவிட்டது. இனி அவள் என்னிடத்தில் இருந்து தப்ப முடியாது!



ஒரு வேளை கடலில் குதித்து மறைந்து விடுவாளோ! (என்று எண்ணியபடி அந்த பெண்ணை துரத்திச் செல்கிறான்.)
அப்போது அவன் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அவன் கால் புதைச் சேற்றில் புதைந்து விடுகிறது.
ஆஆஆ...
அவன் குனிந்து தன் காலை பார்க்கிறான்..
அடடா! என்ன இது...
அய்யோ, நான் கொஞ்சம் கொஞ்சமாக புதைந்து கொண்டிருக்கிறேனே! ஒரு வேளை இதுதான் புதை குழியோ?
என்று எண்ணிக் கொண்டிருக்கையில் கால் புதைச் சேற்றுக்குள் தொடை வரையில் புதைந்து விடுகிறது.


காலை எடுக்க முயற்சிக்கிறான், அவனால் முடியவில்லை.
இந்த இடம் நம்மை இப்படி ஏமாற்றிவிட்டதே! பார்ப்பதற்கு கட்டான் தரையைப் போல் அல்லவா காட்சி அளித்தது.
வந்தியத்தேவன் எவ்வளவு முயன்றும் முடியாமல் போனவுடன்...
அய்யோ! இப்படியா முடிய வேண்டும் என் வாழ்வு?
யானைகளையும், குதிரைகளையும் விழுங்கி ஏப்பம் விடுமே இந்த புதை சேறு. பாவம் என்ன செய்வான் வந்தியத்தேவன்..!
காப்பாற்ற யாரையாவது அழைக்கலாமா!
அபயகுரல் எழுப்பினால் நம் குலப்பெருமை என்னாவது?
வேறு வழியில்லை இந்நேரத்தில் நம் குலப்பெருமையை மறந்துவிட வேண்டியதுதான்.


அய்யோ! என்னை யாராவது காப்பாற்றுங்கள்... யாராவது காப்பாற்றுங்கள்...!
பூங்குழலி என்னை காப்பாற்று......
பூங்குழலி என்னை காப்பாற்று... என்று கூறியதை கேட்டு,
இவனுக்கு எப்படி நம் பேர் தெரியும்?!
என்று யோசித்து நின்று, அவனை திரும்பிப் பார்க்கிறாள்.


என்னைக் காப்பாற்று...!
உன் காதலன் சேந்தன் அழுதனிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.
இவன் யார்? இவனுக்கு எப்படி சேந்தன் அழுதனை தெரியும்! எதற்காக இங்கு வந்திருக்கிறான்?
என்று மனதில் எண்ணிக் கொண்டே அவனை நோக்கி தாவி ஓடி வருகிறாள்....


வந்து நின்று அவனை பார்க்கிறாள்.
பார்த்தால் நல்லவனாகதான் தோன்றுகிறான்.
உனக்கு எப்படி சேந்தன் அமுதனை தெரியும்?
அதை பிறகு கூறுகிறேன். முதலில் என்னை காப்பாற்று.
வந்தியத்தேவனின் கைப்பிடித்து இழுத்து அவனை காப்பாற்றுகிறாள்.
இந்த பெண்ணின் கைகளில்தான் எத்தனை வலிமை! சேந்தன் அமுதனின் பாடு திண்டாட்டம்தான்.


சின்ன பழுவேட்டரையரின் இரும்பு கைகளைவிட இவள் கை உறுதியாக இருக்கின்றனவே!
நீ நிற்பதைப் பார்த்தால் பெரியதாக என்னைக் காப்பாற்றிவிட்டதாக எண்ணுகிறாய் என்று தோன்றுகிறது.
பின் எதற்காக அப்படி ஐயோ, ஐயோ! என்று அலறினாய்?


உயிருக்காக நான் பயப்படவில்லை, சேற்றுக்குத்தான் பயந்தேன். (என்று சமாளிக்கிறான்)
பூங்குழலி அவனை பார்த்து புன்முறுவல் செய்துவிட்டு...
துப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறாய்! ம்..
அதோ கடல் இருக்கிறது. போய் சேற்றை முதலில் கழுவி சுத்தம் செய்து கொள்.
கடலை நோக்கி நடந்து கொண்டே....
என்னை கண்டதும் எதற்காக அப்படி விழுந்தடித்து ஓடினாய்? என்னை பயங்கர பேய், பிசாசு என்று எண்ணிவிட்டாயா!


பேய், பிசாசு என்று எண்ணவில்லை. ஆந்தை என்று எண்ணினேன்.
உன் மூஞ்சி ஆந்தை மாதிரியே இருக்கிறது.
என்று கூறி சிரித்தாள்.
ஹா..ஹா..ஹா..
உன்னுடைய தூங்கு முகத்துக்கு என்னுடைய ஆந்தை முகம் குறைந்து போய்விட்டதாக்கும்.


என்ன சொன்னாய்? (முறைத்து கை ஓங்கினாள்.)
ஹா..ஹா..ஹா..
என்னைக் கண்டு ஏதற்காக அப்படி ஓடினாய் என்று கேட்டேன்.
நீ ஏதற்காக அப்படி என்னை துரத்திக் கொண்டு வந்தாய்?
கலங்கரை விளக்கத்துக்கு வழி கேட்பதற்காக உன்னை துரத்தி வந்தேன்.
அதோ தெரிகிறதே விளக்கு. என்னை வழி கேட்பானேன்.
கலங்கரை விளக்கத்தை சுட்டி காட்டுகிறாள்.


காட்டுக்குள் புகுந்த பிறகு எங்கிருக்கிறோம் என்பதே எங்களுக்கு தெரியவில்லை.
ஆமாம்! நீ எதற்காக என்னைக் கண்டு ஓடினாய் என்று கூறவில்லையே.
ஆண் பிள்ளைகள் மிகப் பொல்லாதவர்கள்.
சேந்தன் அமுதன் கூடவா?
யாரைச் சொன்னாய்?


உன் காதலன் சேந்தன் அமுதன் கூடவா என்றேன்?
என் காதலன் சேந்தன் அமுதன் என்று உனக்கு யார் கூறியது?
வேறு யார் சொல்வார்கள்? சேந்தன் அமுதன்தான் சொன்னான்.
உன் பெயர் பூங்குழலி தானே!
என்று சந்தேகத்துடன் கேட்டான்.


ஆமாம்!
பூங்குழலிதான்.
சேந்தன் அமுதன் என்னை பற்றி
இன்னும் என்ன சொன்னான்?
என்று மிரட்டும் பாவனையில் கேட்கிறாள்.
நீ அவனுடைய மாமன் மகள் என்று
சொன்னான். உன்னை போன்ற அழகி
தேவலோகத்திலே கூடக் கிடையாது
என்று சொன்னான்.
தேவலோகத்துக்கு
அவன் நேரிலே போய்
பார்த்திருக்கிறான்
போலிருக்கிறது.


சேந்தன் அமுதன் உன்னுடைய காதலன் இல்லையா? நீ அவனை மணந்து கொள்ளப் போவதில்லையா?
எதற்காக கேட்கிறாய்?
அந்த இடத்துக்கு நான் விண்ணப்பம் போடலாம் என்று பார்க்கிறேன்.
இந்த வேடிக்கைப் பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம். ஜாக்கிரதை!


(தயங்கி பயந்து சிரித்தபடி கேட்கிறான்)
ஏன்?
அப்போது எதிர் திசையில் பினாகபாணி இவர்களைத் தேடி அங்கு வருகிறான். அதை பார்த்த வந்தியத்தேவன்...
அய்யோ! குதிரை புதை சேற்றில் மாட்டிக் கொண்டு விடப்போகிறது.
அதற்காக தாங்கள் கவலைப்படத் தேவையில்லை. குதிரைகளுக்கு மனிதர்களை விட விவேகம் அதிகம்.
அப்படியா?


இவ்வாறு பேசிக் கொண்டே மூவரும் கலங்கரை விளக்கம் வந்து சேருகிறார்கள்.


கலங்கரை விளக்கத்தின் அருகில் தியாகவிடங்கர் வீடு
இருக்கிறது. தியாகவிடங்கர் திண்ணையில்
அமர்ந்திருக்கிறார். அங்கு மூவரும் வருகிறார்கள். பூங்குழலி
இருவரையும் அவரிடம் அறிமுகம் செய்கிறாள்.


ஏன் அப்பா! இந்த பெண் சொல்வது உண்மைதானா?
தாங்கள் இருவரும் சக்கரவர்த்திக்கு மூலிகை சேகரிப்பதற்காக வந்து இருக்கிறீர்களா?
ஆம் ஐயா!
என்று சொல்லி வந்தியத்தேவன் தன்னிடம் உள்ள ஓலை ஒன்றை எடுத்துப் பெரியவரிடம் கொடுக்கிறான்.
இதோ பாருங்கள்...
அந்த ஓலையை கலங்கரை விளக்கின் வெளிச்சத்தில் படிக்கிறார் தியாகவிடங்கர்.
தன் மனைவியிடம் தியாகவிடங்கர்...
குந்தவை பிராட்டிதான் ஓலை கொடுத்து அனுப்பிருக்கிறார். இவர்களுக்கும் சேர்த்தே உணவு தயாராகட்டும்.

கோடிக்கரையின் கடல் வெகு தொலைவுக்கு ஆழம் குறைந்து காணப்படுவதால் கடலில் வரும் கப்பல் தரை தட்டாமல் இருப்பதற்காக கலங்கரை விளக்கத்தை நிர்மாணித்து அதில் இரவு முழுவதும் நெருப்பு மூட்டி, கடலில் வரும் மாலுமிகளுக்கு எச்சரிக்கை செய்து வந்தனர். சுந்தர சோழரின் ஆட்சி காலத்தில் தியாகவிடங்க கரையரை கலங்கரை விளக்கத்தின் தலைமை காப்பாளராக நியமித்து இருந்தனர். அவருக்கு துணையாக சில குடும்பங்களை அங்கே அமர்த்தியிருந்தனர். அவருக்கு தெரியாமல் கோடிக்கரை கடலினுள் யாரும் செல்ல முடியாது.

வந்தியத்தேவன் அன்றிரவு, இரவு போஜனம் முடித்தான். தியாகவிடங்கரை தனிமையில் சந்தித்து, தான் இலங்கைக்கு போக உதவுமாறு கேட்கிறான்.






அது, அது வந்து... அதை நான் எப்படிச் சொல்வது?
நீ ஏன் இலங்கைக்கு அவசரமாக போக விரும்புகிறாய் என்று இப்போது எனக்கு தெரிகிறது.
ஐயா! தாங்கள் நினைப்பது சரியல்ல. என் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் நான் இலங்கைக்கு போகவில்லை...


அங்கேயுள்ள ஒருவருக்கு மிக முக்கியமான ஓலை ஒன்று கொண்டு போகிறேன். தாங்கள் வேண்டுமானால் அதை பார்க்கலாம்.
என்று தன்னிடமுள்ள ஓலை ஒன்றை எடுத்து கரையரிடம் நீட்டுகிறான்.
தேவையில்லை! இளைய பிராட்டி உன்னைப் பற்றி எழுதியிருப்பதே எனக்கு போதும்.
ஆனால், இச்சமயம் நீ கேட்கும் உதவி என்னால் செய்ய முடியவில்லையே!
இன்னொரு படகு இருப்பதாகச் சொன்னீர்களே?


படகு இருக்கிறது. தள்ளுவதற்குத்தான் ஆள் இல்லை!
நீயும் உன்னுடைய சினேகிதனும் தள்ளிக் கொண்டு போவதாயிருந்தால் தருகிறேன்.
எனக்கு படகு ஓட்டத் தெரியாது. என்னுடன் வந்தவனை நான் அழைத்துப் போவதற்கும் இல்லை. எனக்கு ஏதாவது ஒரு வழி சொல்லி நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்.


ஒரு வழி இருக்கிறது. ஆனால் அது எளிதில் நடக்க கூடியதன்று!
ஐயா! என்ன செய்ய வேண்டும். சொன்னால் கட்டாயம் செய்கிறேன்.
இந்த பகுதியிலேயே பூங்குழலியைப் போல் சாமர்த்தியமாகப் படகு தள்ளத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை! இலங்கைக்கு எத்தனையோ தடவை போய் வந்திருக்கிறாள். அவளிடம் நான் சொல்லுகிறேன், நீயும் கேட்டுப் பார்.


இப்போதே கூப்பிடுங்களேன்! கேட்டுப் பார்க்கலாம்.
வேண்டாம், மிக்க பிடிவாதக்காரி. இப்போது உடனே கேட்டு முடியாது என்று சொல்லி விட்டால், அப்புறம் அவளுடைய மனதை மாற்ற முடியாது.
நாளைக்கு நானே நல்ல சமயம் நோக்கி அவளிடம் சொல்கிறேன். நீயும் தனியே பார்த்துக் கேள்.


என்று கூறிவிட்டு தன் பணியை கவனிப்பதற்கு கலங்கரை விளக்கை நோக்கி செல்கிறார், தியாகவிடங்கர்.


வந்தியத்தேவன் சென்று தியாகவிடங்கரின் வீட்டு திண்ணையில் படுத்து உறங்குகிறான்.


டக்.
கதவு திறக்கும் சத்தம் கேட்டு கண் விழிக்கிறான் வந்தியத்தேவன்.
இந்நேரத்தில் யார் கதவை திறக்கிறார்கள்?
கதவை திறந்து யார் வருகிறார் என்று திருப்பி பார்க்கிறான்.
இந்நேரத்தில் இவள் எங்கு செல்கிறாள்?
அவளை பின் தொடர்ந்து சென்றால், ஏதாவது ஆபத்து வரும் சமயத்தில் அவளைக் காப்பாற்றி! அவளிடம் இலங்கை செல்ல உதவி பெறலாம்.
நல்ல யோசனை!



இரவில் பூங்குழலியை பின் தொடர்ந்து வருகிறான் வந்தியத்தேவன்...
ஆஹா! எங்கேயாவது புதை சேறு இருந்து விடப்போகிறது.
என்று பயந்தபடி அவளைப் பின் தொடர்ந்து செல்கிறான்.
ஊ... ஊ... ஊ... ஊ...
மிகவும் ஆபத்தான பாதையில் செல்கிறான்.
இந்த பெண் சரியான பித்துகுளியாக இருக்கிறாளே! இந்த அர்த்த ராத்திரியில் இந்த காட்டில் என்ன வேலை? யாரை சந்திக்க செல்கிறாள்?
காதலனை சந்திக்க இதுவா நேரம்!?


பட படவென்று வௌவால்கள் தனது இறக்கையை அடித்து பறக்கிறது.
அந்த மரத்தின் மேல் தெரியும் கரிய உருவம் என்ன!
அங்கே என்ன சலசலப்பு?


அவள் எங்கு சென்றாள் என்றே தெரியவில்லையே? என்ன அறிவீனம்!


அப்போது தூரத்தில் பாட்டு சத்தம் கேட்கிறது.
"அலை கடலும் ஓய்ந்திருக்க அகக்கடல்தான் பொங்குவதேன்? நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகந்தான் விம்முவதேன்?"
வந்தியத்தேவன் குரல் கேட்ட திசையை நோக்கினான். அதே திசையில் முன்னேறி சென்றான்.
சேந்தன் அமுதன் கூறியது சரிதான்! அவள் குரலில்தான் என்ன இனிமை!
ஆனால், எதற்காக சோக கீதம் பாடுகிறாள்?



வந்தியத்தேவன் அவள் அருகில் மெதுவாக செல்ல....
வந்து விட்டாயா! திண்ணையில் கும்பகர்ணனை போல் தூங்கினாயே?
வீட்டின் கதவு திறக்கும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். அதற்குள் நீ விறு விறு என்று வந்துவிட்டாய்!
எதற்காக என்னை தொடர்ந்து வந்தாய்?
நல்ல கேள்வி! நீதானே வரச் சொன்னாய்?


ஏதற்காக வரச் சொன்னேன்? என்று நினைவு இருக்கிறதா!
நினைவு இல்லாமல் என்ன? உன் காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாய்!
எங்கே உன் காதலர்களை காட்டு பார்க்கலாம்...
என்று கூறி சமாளித்தான்....
ஹா..ஹா..
என் காதலர்களை பார்க்க வேண்டுமா?!
அதோ! உனக்குப் பின்னால் திரும்பிப் பார்.
ஆ.. என்ன இது ஒரே நெருப்பு பிழம்பாக அல்லவா இருக்கிறது!

வந்தியத்தேவன் திரும்பி பார்க்கிறான், பார்த்து அதிர்ச்சி அடைகிறான். அங்கு திடீர், திடீர் என்று தீ பிழம்புகள் தோன்றுகின்றன. அது பயங்கரமான பூதத்தைப் போல் காட்சி அளிக்கிறது. வந்தியத்தேவனுக்கு அதைக் கண்டவுடன் பயத்தில் வயிற்றிலிருந்து குடல்கள் மேலெழும்பி அவன் தொண்டையை அடைத்தன! வந்தியத்தேவனின் ரோமங்கள் சிலிர்த்தன.




பார்த்தாயா என் காதலர்களை?
ஆ...
ஹா..ஹா..
இவர்களா உன் காதலர்கள்!?


இந்த கொள்ளிவாய் பிசாசுகள்தான் என் காதலர்கள்!
இந்த பெண்ணுக்கு நன்றாகப் பித்துப் பிடித்திருக்கிறது. இந்தப் பெண்ணின் உதவியைக் கொண்டு இலங்கை போவது நடவாத காரியம்.


கந்தகம் கலந்த பூமிப் பிரதேசங்களில் தண்ணீர் வெகுகாலம் தேங்கி நின்று சதுப்பு நிலமானால், அத்தகைய இடங்களில் இரவில் இம்மாதிரி தோற்றங்கள் ஏற்படும் என்பார்கள். பூமிக்குள்ளேயிருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும், அப்போது நெருப்புப் பிழம்பு வருவது போலிருக்கும். இதை சாதாரண மக்கள் கொள்ளி வாய் பிசாசு என்பார்கள். இதைதான் இவள் கொள்ளிவாய் பிசாசு என்று நினைத்து கொண்டிருக்கிறாள்.


ஆனால், இதையெல்லாம் இச்சமயம் இந்தப் பிரம்மை பிடித்த பெண்ணிடம் சொல்லி பயனில்லை.


பெண்ணே! உன் காதலர்கள் எங்கும் போய்விட மாட்டார்கள். இங்கேதான் இருப்பார்கள். வா, வீட்டுக்குப் போவோம்.
அப்போது பூங்குழலி திடீரென்று அழுகிறாள்...!
இது என்ன தொல்லை! இந்த பித்துக்குளிப் பெண் எதற்காக அழுகிறாள்?!
சரி, அழாதே! வா போகலாம்....
சரி, உன் இஷ்டம்! வரவில்லையென்றால், இங்கேயே இரு. நான் போகிறேன். எனக்கு தூக்கம் வருகிறது.
அவன் சொல்வதை ஏதும் காதில் போட்டுக் கொள்ளாமல், அவள் மேலும் அழுது கொண்டே இருந்தாள்.


அவன் கோபித்துக் கொண்டு செல்வதைக் கண்ட பூங்குழலி...
அழுகையை சட்டென்று நிறுத்தி விட்டு, வந்தியத்தேவனுக்கு முன்னால் நாலே பாய்ச்சலில் மேட்டிலிருந்து கீழ் இறங்கி ஓடி வந்தாள்.
பூங்குழலி ஓடாதே! இரு நானும் வரேன்.
என்று கூறியபடி அவளைப் பின் தொடர்ந்து ஓடிவருகிறான்.


இருவரும் கலங்கரை விளக்கை நோக்கி பேசிக் கொண்டே நடந்தார்கள். அப்போது பூங்குழலி...
சக்கரவர்த்தி ஒரு வேளை இறந்து விட்டால் அடுத்து யார் பட்டத்துக்கு வருவார்கள்?
அடுத்து யார் பட்டத்துக்கு வந்தால் நமக்கு என்ன கவலை?
நீயும் நானும் இந்த இராஜ்யத்தின் பிரஜைகள் அல்லவா? சுந்தரசோழர் திடீர் என்று இறந்து போனால் என்ன ஆகும்?
வேறென்ன நடக்கும்? நாட்டில் குழப்பம் உண்டாகும்!
இதுதான் சரியான சந்தர்ப்பம், இலங்கை செல்ல இவள் உதவியைக் கேட்க!
ஆனால், அந்த குழப்பத்தை தடுப்பது உன்னிடம்தான் உள்ளது. சக்கரவர்த்திக்கு மூலிகை கொண்டு வர நீதான் உதவ வேண்டும்.
நான் எதற்காக உதவ வேண்டும்?


அதுவும் சரிதான்! நீ எதற்காக எனக்கு உதவ வேண்டும்? இலங்கை செல்ல அனுமன் பாலம் அமைத்தது போல் நானே பாலம் அமைத்து, செல்கிறேன்.
ஹா... ஹா...!
அவள் முடியாது என்று கூறிவிட்டாள் அவள் மனதை எளிதில் மாற்ற முடியாது என்று தியாகவிடங்க கரையர் கூறியது வந்தியத்தேவனுக்கு நினைவுக்கு வந்ததால் மேற்கொண்டு எதுவும் அவளிடம் பேசாமல் விட்டுவிடுகிறான். அதற்குள் பூங்குழலியின் வீடும் வந்து விடுகிறது.


அவள் எதற்காக அழுகிறாள்? என்று வந்தியத்தேவனுக்கு புரியவில்லை, ஏன் நமக்கும் கூட புரியவில்லை! பெண் மனதின் ஆழத்தை யார் அறிவார்கள்?


வந்தியத்தேவன் வெளியில் உள்ள திண்ணையில் படுத்துத் தூங்குகிறான். பூங்குழலி உள்ளே சென்று படுத்துக் கொள்கிறாள்.



தியாகவிடங்கரின் வீட்டு திண்ணையில் இரவு நன்றாக தூங்கி காலையில் சூரிய உதயத்தில்....
சூரிய வெளிச்சம் முகத்தில் பட எழுந்திருக்கிறான்.
அதற்குள் பொழுது விடிந்துவிட்டதா!
ராக்கம்மா ஒரு கிண்ணத்தில் பழைய சோறு பரிமாறுகிறாள். உடன் பச்சை மிளகாயை தொட்டு கொள்வதற்கு தருகிறாள்.
பழைய சாதமும், பச்சை மிளகாவும் அற்புதம்...!
ஆள் பார்க்க சாதாரணமாக இருக்கிறான். ஆனால் ஒரு படி சாதத்தை தனியாக சாப்பிடுகிறானே!
பூங்குழலி எங்கு சென்றிருப்பாள்! (என்று யோசிக்கிறான்)
ராத்திரி அந்த கொள்ளிவாய் பிசாசுகளுடன் அலைந்தாள்! காலையில் அதற்குள் எங்கு போய்விட்டாள்?
பழுவேட்டரையர்கள் நம்மை தேடி இங்கு வருவதற்குள் இங்கிருந்து சென்றுவிட வேண்டும்.



சிறிது அலைந்த பின், குழகர் கோயிலுக்கு சென்றிருக்கலாம் என்று யூகித்து...
கோயிலுக்கு வர அங்கு தியாக-விடங்கர் இருக்கிறார்.
பூங்குழலியை பார்த்தீர்களா?
அவள் எங்கேயாவது காட்டில் மான்களின் பின்னாடி அலைந்து கொண்டிருப்பாள். அல்லது கடற்கரை பகுதியில் எங்கேயாவது திரிந்து கொண்டிருப்பாள். அவளைத் தேடிப் பிடித்து உதவி செய்யும் படி கேட்டுப்பார்.
தம்பி! அவளிடம் ஜாக்கிரதையாக இரு. அவளிடம் தப்பர்த்தம் செய்து கொள்ளும் படியாக ஏதும் பேசி விடாதே! உடனே அவள் பத்திரகாளியாக மாறி விடுவாள்.
ஐயா! நான் அப்படிப்பட்டவன் இல்லை.
எதற்கும் உன் ஜாக்கிரதைக்குச் சொன்னேன்.
என்று கூறி அனுப்புகிறார்.


காட்டில் அலைந்து தேடுகிறான். எங்கு தேடியும் பூங்குழலியை காணவில்லை!
சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு அலுத்துப் போய்விட்டது.
எங்கு போய் தொலைந்தாள்! இந்த காட்டில் எங்கு போய் தேடுவது? எப்படியும் மதியம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவாள், அப்போது பார்த்து கொள்ளலாம்.
கடல்... இந்த பக்கத்தில் கடலில் ஆழம் அதிகம் இல்லையென்று அவள் கூறினாளே!
களைப்பு தீர சிறிது நேரம் நீராடலாம்..!
கடலில் இறங்க... இடுப்பில் உள்ள கத்தி, ஓலை, இடுப்புத் துணி, மேல் சட்டை அத்தனையும் கழற்றி கரையில் வைக்கிறான்.


கடலில் வெகு தூரம் நடந்து செல்கிறான்.
இடுப்பளவு தண்ணீர் மட்டும் இருக்கிறது. கடலில் ரசித்து குளிக்கிறான்.
இதே போல கடல் முழுவதும் ஆழமில்லாமல் இருந்தால் நாம் யாருடைய உதவியையும் நாட வேண்டியதில்லை.
ம்... இறைவன் படைப்பு அப்படி! நாம் என்ன செய்வது?
அடடே! எவ்வளவு தூரம் வந்து விட்டோம்.
திடீர் என்று கடல் பொங்கினால்...?
எதற்கும் நாம் கரைக்கு திரும்புவது நல்லது!
என்று நினைக்க, அப்போது அவன் எதிரில் பூங்குழலி ஓடி வருகிறாள்.


பூங்குழலியை கண்ட வந்தியத்தேவன்...
இதோ வந்துட்டாளே!
அவளிடம் நயமான வார்த்தைகள் பேசி, எப்படியாவது இலங்கைக்கு அழைத்துச் செல்லும்படி இப்போதே கேட்டுவிட வேண்டியதுதான்.
பூங்குழலி அவன் சற்றும் எதிர்பாராத வகையில் சட்டென்று அவனது உடைமைகளை எடுத்துக் கொண்டு ஓடுகிறாள்.
அட! இந்த பெண்ணுக்கு என்ன ஆயிற்று? எனது ஆடைகளை எடுத்துக் கொண்டு எதற்காக ஓடுகிறாள்?
அய்யோ! அதில் இளவரசி இளவரசருக்கு கொடுத்தனுப்பிய ஓலை...
பூங்குழலி நில்!
பூங்குழலி ஓடாதே! நான் சொல்வதைக் கேள்.
என்று கூறிக் கொண்டே அவளை பின் தொடர்ந்து ஓடுகிறான்.


ஒரு கட்டத்தில் மரத்தடியில் களைப்படைந்து...
காரியம் குட்டிச்சுவராகி விட்டது. நம்மைப் போன்ற மெளடீகன் உலகிலேயே வேறு யாரும் இருக்க முடியாது!
இந்த பித்து பிடித்த பெண் இப்படி செய்து விட்டாளே! அவளை இந்த காட்டில் எங்கே போய் தேடுவேன்?
அப்போது திடீரென்று மேலிருந்து அவனுடைய கத்தி, மேல் சட்டை, இடுப்புத் துணி அனைத்தும் அவன் அருகில் வந்து விழுகிறது.
அட! இது நம்முடையதுதான்.
உன்னுடைய பொருட்கள், பணம் பத்திரமாக உள்ளதா? என்று சரி பார்த்துக் கொள்.
என்ன எல்லாம் சரியாக இருக்கின்றனவா?
உன்னைப் போன்ற மந்தியை நான் பார்த்ததேயில்லை!
என்று கோபப்படுகிறான்.


நான் கூட உன்னைப் போன்ற ஆந்தையைப் பார்த்தில்லை!
அம்மம்மா! என்ன முழி முழித்தாய்?
எதற்காக என்னை இப்படி அலைக்கழித்தாய்? உனக்கு பணம் வேண்டுமென்றால்...
சீச்சீ! உன் பணம் யாருக்கு வேண்டும்?
அப்படியென்றால், எதற்காக இதை தூக்கிக் கொண்டு ஓடினாய்?
அப்படி நான் செய்யாவிட்டால், நீ காட்டுக்குள் வந்திருக்க மாட்டாய். மதியம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு சென்றிருப்பாய்...!
அவள் கூறுவது உண்மைதான்!


போனால் என்ன?
கொஞ்சம் இந்த மரத்தில் ஏறிப் பார் தெரியும்!
உடனே மரத்தில் ஏறிப் பார்க்கிறான். அங்கு தியாகவிடங்கரின் வீட்டின் முன் பத்து பதினைந்துக்கும் மேற்பட்ட பழுவேட்டரையரின் ஆட்கள் குதிரையில் வந்திருக்கிறார்கள். அவனைப் பிடிப்பதற்கு தயாராக திண்ணையில் அமர்ந்தபடி காத்திருக்கிறார்கள்.
ஆஹா! அதற்குள் நம்மை பின் தொடர்ந்து இங்கும் வந்து விட்டார்களா? இந்த பழுவேட்டரையரின் ஆட்கள்.
இந்த பெண் நம்மை பெரும் ஆபத்திலிருந்து அல்லவா காப்பாற்றி இருக்கிறாள்!


என்ன... உன்னைத் தேடி யார் வந்திருக்கிறார்கள்? உங்கள் உறவினர்களா! (என்று எகத்தாளம் செய்தாள்.)
மரத்திலிருந்து இறங்கியபடி...
என்னை பேராபத்திலிருந்து காப்பாற்றினாய்... உனக்கு மிக்க நன்றி!
வெறும் பொய்! ஆண் பிள்ளைகளுக்கு நன்றி கூட உண்டா?
எல்லா ஆண் பிள்ளைகளையும் போல் என்னையும் எண்ணி விடாதே!


இல்லை... இல்லை! நீ ஒரு தனி ரகம்தான்.
ஆமாம்! நான் உன்னை ஒன்று கேட்கிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று ஏன் எண்ணினாய்?
அசுரகளைக் கண்டால் எனக்கு எப்போதும் கொஞ்சம் பரிதாபம் உண்டு.
என்னை பார்த்தால் ஒரு மாவீரன் போல் தோன்றவில்லை?
தோன்றவில்லை?
சந்தோஷம்!
ஆமாம்! அந்த வீரர்கள் என்னைத் தேடித்தான் வந்திருக்கிறார்கள் என்பதை எப்படி அறிந்தாய்?


உன்னைப் பார்த்தால் தெரியவில்லையா? நீ தப்பி ஓடி ஒளிந்து கொள்ள வந்திருப்பவன் என்று, உன் முழியே சொல்கிறதே!
நேற்றே நான் ஊகித்துவிட்டேன்.
இன்றைக்கு காலையில் உன் நண்பன் உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டான்.
அவன் என்னை பற்றி என்ன கூறினான்?


சக்கரவர்த்திக்கு மூலிகை தேட வேண்டும். இப்பகுதியில் எங்கு மூலிகைச் செடிகள் இருக்கும் என்பது எனக்கு தெரியாது.
உனக்கு தெரியுமே, நீ என்னுடன் வந்து வழி காட்டேன் என்று கேட்டான்.
நானும் அழைத்துச் சென்று மூலிகைச் செடி இருக்கும் பகுதியைக் காட்டினேன்.
ஆனால், அவன் மூலிகைத் தேடுவதில் ஆர்வம் காட்டவில்லை. திரும்பி திரும்பி என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.
அட இந்த பெண் கோடிக்கரை காட்டிலே வாழ்கிறவளாக இருந்தாலும் இளவரசிகளுக்கு இணையான அழகுடன் இருக்கிறாளே!
அப்போது அங்கு ஒரு மான் குட்டி வந்தது.


ஏய்! கொஞ்சம் நில். நான் உன்னை கொஞ்சி விட்டு அனுப்பி விடுகிறேன்.
அவன் மூலிகை தேடாமல் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.
அப்போது என்னை பார்த்து கூறினான்....
பூங்குழலி அந்த மானை இப்படி கொஞ்சுகிறாயே! அந்த மான் என்ன உன்னைவிட அழகா?


அவன் நோக்கத்தை புரிந்து கொண்ட நான்...
ஐயா! முதலில் வந்த வேலையை பாருங்கள். அங்கே போய் பாருங்கள் நீங்கள் தேடி வந்த மூலிகை இருக்கிறதா என்று.
அப்படி முகத்தில் அடித்தாற் போல் அவனிடம் கூறியும், அவனிடம் எந்த மாற்றமும் இல்லை. எனக்கு தெளிவாகப் புரிந்துவிட்டது, அவன் மூலிகை தேட என்னுடன் வரவில்லை என்று.
அங்கிருந்து தயங்கி தயங்கி வேறிடத்திற்குச் சென்று மூலிகை தேடுகிறான். ஆனால், அவன் மனம் அதில் ஈடுபடவில்லை என்பது அவனது செயலில் தெரிந்தது.
அப்போது ஒரு வேடிக்கையான விஷயம் செய்தான்.
ஒரு காட்டுப் பூவை பறிச்சி எடுத்துக் கொண்டு....


என்னை நோக்கி ஓடி வந்தான்.
என்னடா இது வம்பா போச்சே!
என்று நினைப்பதற்குள்... என் கிட்ட வந்து...
பூங்குழலி நான் உனக்காக என்ன கொண்டு வந்திருக்கேன் என்று சொல்லு பார்ப்போம்.
நான் அதற்கு,
உன் கையில் இருப்பது எனக்கு எப்படித் தெரியும்?
இந்த மலரைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாய் இருக்கிறது! ஆனாலும் எனக்கு என்னமோ....
என்று பல்லை இளித்தான்.


ஐயா! தாங்களின் எண்ணம் எனக்கு புரிந்துவிட்டது.
ஆனால், தாங்களின் நண்பர் தாங்களை முந்திக் கொண்டாரே....! (என்றேன்)
அவன் என் நண்பன் கிடையாது. என்னுடன் மூலிகை பறிக்க துணைக்கு வந்தவன். நான் இட்ட வேலையைச் செய்யக் கூடியவன்
நண்பரா? எனக்கு அப்படி யாரும் இல்லையே!
என்று கூறிவிட்டு, இன்னும் என்னை நெருங்கி வந்து...
நான், உனக்கு ரகசியம் ஒன்று சொல்லட்டுமா? அவன் அரசாங்கத்தால் தேடப்படும் குற்றவாளி. அவன் முழியை பார்த்தாலே உனக்கு தெரிந்திருக்குமே?! (என்றான்)
இப்படி சட்டென்று துரோகியாக மாறிவிட்டானே! (என்று பார்த்தேன்)
ஆமாம், நான் சொல்வதைக் கேள். அவனை நம்பி உன் வாழ்க்கையை தொலைத்துவிடாதே.
என்னை கல்யாணம் செய்து கொண்டால், நான் உனக்கு பல மூலிகைகள் செய்து கொடுத்து உன் இளமை மாறாமல் பார்த்துக் கொள்கிறேன். என்ன சொல்கிறாய்..? (என்று கேட்டான்)
ஐயா! தாங்கள் இப்படி அவசரப்படுகிறீர்களே? பெரியவர்களை கேட்க வேண்டாமா?
ஐயா என்று அழைக்காதே. நாதா என்று என்னை அழை. நாம், பழந்தமிழர் மரபுபடி களவு திருமணம் செய்து கொள்வோம். என்ன சொல்கிறாய்?


அப்போது பல குதிரைகள் காலடிச் சத்தம் கேட்கவே...
குதிரைகள் குளம்படி சத்தம் கேட்கிறது. என்னவென்று பார்.
அவன் உடனே அருகிலிருக்கும் மரத்தில் ஏறி பார்த்தான். (அங்கு பத்துக்கும் மேற்பட்ட குதிரைகள் வந்தன.)
பார்த்தாயா? நான் சொன்னது சரியாகப் போயிற்று. அவனைப் பிடிப்பதற்காக பழுவேட்டரையர்களின் ஆட்கள் வந்திருக்கிறார்கள்.
என்று கூறினான்.
அப்படியானால், அவனுடன் வந்த உன்னையும்தான் பிடிப்பார்கள். (என்றேன்)
அப்படியா? (என்றான்)


அவன் ஏதோ யோசித்தான்.
நான் அவனிடம்....
நீ ஓடி எங்கேயாவது
ஒளிந்து கொள்.
(என்றேன்)
அவன் என்ன நினைத்தான் என்று தெரியவில்லை.
குதிரைகள் வரும் திசை நோக்கி ஓடினான்.



குதிரையில் வருபவர்களை வழி மறித்து...
நீங்கள் யார்? (என்றான்)
நாங்கள் வேட்டைக்காரர்கள். (என்றார்கள்)
நீங்கள் என்ன வேட்டையாட வந்திருக்கிறீர்கள் என்று எனக்கு தெரியும். (என்றான்)
காவலர்கள் அவர்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டார்கள்.


நீங்கள் காஞ்சி வாலிபனைத்தானே தேடி வந்திருக்கிறீர்கள்? அவன் இருக்குமிடத்தை நான் உங்களுக்கு காட்டுகிறேன்.
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...
தானாக வலையில் வந்து விழுபவனைக் கண்டால் யாருக்குத்தான் சிரிப்பு வராது.
உங்களுக்கு கிடைக்கும் பரிசில் எனக்கும் ஒரு பங்கு தர வேண்டும்.
....ம்! ஆகட்டும்.


இதுதான் தியாகவிடங்கர் வீடு. நானும் அவனும் இந்த வீட்டில்தான் தங்கி இருக்கிறோம். மதிய சாப்பாட்டுக்கு நிச்சயமாக இங்கு வருவான். (என்று உன்னை பற்றி முழு விவரமும் அவர்களிடம் கூறிவிட்டான்)
அதை பார்த்ததும் பிடித்த ஓட்டம்தான், உன்னை எப்படியாவது அவர்களிடமிருந்து காப்பாற்றி விட வேண்டும் என்று கோடிக்கரைக் காடெங்கும் தேடி கடைசியாக உன்னை கண்டுபிடித்தேன்.


இவளிடம் பூரண நம்பிக்கை வைத்தேயாக வேண்டும்.


பெண்ணே! நீ செய்த உதவியை நான் உயிர் அளவும் மறக்க மாட்டேன். அதே போல மிச்ச உதவியையும் நீதான் செய்ய வேண்டும்!


நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?


இலங்கைக்கு மிக முக்கியமான காரியமாக நான் உடனே போய் தீர வேண்டும். அதற்கு நீதான் படகு வலித்து வந்து இலங்கையில் என்னைச் சேர்ப்பிக்க வேண்டும். என்ன சொல்கிறாய்?
பதில் ஏதும் கூறாமல் செல்கிறாள் பூங்குழலி.
நான் தப்பு காரியம் எதுவும் செய்யக் கூடியவன் அல்ல என்று உனக்கு நம்பிக்கை ஏற்படுகிறதா?
சரி! நான் உனக்கு உதவி செய்தால் அதற்கு எனக்கு என்ன பிரதி உபகாரம் செய்வாய்?
என்னால் உனக்கு ஆகக் கூடிய பிரதி உதவி ஏதேனும் இருந்தால் சொல். நிச்சயம் செய்கிறேன்!


இது சத்தியமான வார்த்தைதானா?
சத்தியம்! சத்தியம்!!
அப்படியானால் சமயம் வரும் போது சொல்கிறேன்.
சரி, என்னுடன் வா! இந்தக் காட்டில் ஓரிடத்துக்கு நான் உன்னை அழைத்துப் போகிறேன். நான் சொல்லும் இடத்தில் இருட்டும் வரை நீ இருக்க வேண்டும்.
ஆனால், பட்டினியாகத்தான் இருக்க வேண்டும். வேறு வழியில்லை.


அதை பற்றி கவலை இல்லை.
என்று வந்தியத்தேவன் கூற அவனை ஒரு மறைவான மண்டபத்திற்கு அழைத்துச் செல்கிறாள்.
ஒரு பள்ளத்தில் இறங்கி மரக்கிளையை தள்ளிக் கொண்டே...
இந்த இடம் என்னையும் என் பெரிய அத்தையையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இப்படி ஒரு இடம் இருப்பதே தெரியாது.
இருட்டிய பிறகு நான் வந்து ஒரு சத்தம் செய்வேன்! தக்கூ, தக்கூ என்று.. அப்போதுதான் நீ இவ்விடத்திலிருந்து வெளியே வர வேண்டும்.
அந்த மண்டபத்திலிருக்கும் தண்ணீர் பானையை திறந்து தண்ணீர் இருப்பதை உறுதி செய்து கொள்கிறாள்.
இந்த தண்ணிய குடிச்சு இன்றைய பொழுத ஓட்டு... நான் வரும் போது உனக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வரேன்.


இன்று பகலெல்லாம் இங்கேயே இரு! வேறு ஏந்த சத்தம் வந்தாலும் நீ வெளியில் தலை காட்ட வேண்டாம்.
அப்போது ஒரு மிருகத்தின் காலடி தடயத்தை பார்க்கிறான். (ஒரு சிறுத்தையின் காலடி ரத்தக் கறை)
அது ஒன்றுமில்லை இந்த மண்டபத்தில் ஒரு சிறுத்தை குடியிருந்தது.
அது இப்போதும் வருமா?
இப்போது அது இல்லை. அது என்மீது பாய வந்த போது இதனால் அடித்து கொன்று விட்டேன்!
என்று ஒரு மீனின் முள்ளை எடுத்துக் காண்பிக்கிறாள்.


இந்த பெண், பித்து பிடித்தவள் என்றல்லவா நினைத்தேன்! இவள் சாதாரணப் பெண் அல்ல.
நான் கூறியது நினைவிருக்கிறது அல்லவா!
என்று கூறி அங்கிருந்து புறப்படுகிறாள்.
உன் குரலுக்காக காத்திருப்பேன்!
என்று கூறிவிட்டு அவள் கூறியபடி மறைந்த மண்டபத்திற்குள் சென்று விடுகிறான். அங்கிருக்கும் கொடிகளைக் கொண்டு தொங்கும் படுக்கை செய்து படுத்துக் கொண்டான். (பூச்சி, பாம்பு போன்ற ஜீவராசிகளிடமிருந்து தன்னை காத்துக் கொள்ள ஏதுவாக.)
வந்தியத்தேவன் அன்று பகல் முழுவதும் பூங்குழலியின் குக்கூ என்ற குரல் எப்போது வரும் என்று காத்திருக்கிறான்.


அந்த புதரைச் சுற்றி குதிரைகள் ஓடுகின்றன.
சோதனைச் சாவடியில சொன்னதப் பார்த்தா, எப்படியும் கோடிக்கரைக்கு வந்திருப்பாங்கன்னு தோணுது! இருட்றதுக்குள்ள அவர்களைத் தேடிப் பிடிச்சாகனும்.
மறைந்த மண்டபத்தில் இருக்கும் வந்தியத்தேவனின் காதில் குதிரைகள் ஓடும் சத்தம் கேட்கிறது.
நம்மை தேடித்தான் ஆட்கள் வந்திருக்கிறார்கள். நல்ல வேளை இந்த இடத்தை யாரும் கண்டுபிடிக்க முடியாது!
டகடக்.....
டகடக.....
நம்மிடம் இவளுக்கு இவ்வளவு சிரத்தை ஏற்பட்டதன் காரணம் என்ன?
என் முகத்தில் ஓடும் ராஜகளையா! அப்படி இருக்க வாய்ப்பில்லை. அதான் அவள் ஆந்தை முகம் என்று சொல்லிவிட்டாளே. வேறு என்ன காரணமாக இருக்கும்? ம்.....
என்று மறைந்த மண்டபத்தில் இருந்தபடி வந்தியத்தேவன் யோசிக்கிறான்.


பழுவூர் ஆட்களிடம் பிடிபடாமல் தப்புவிப்பதற்கு பெரும் பாடுபட்டாளே! எதற்காக இலங்கைக்கு படகு வலித்துக் கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்காளே! இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்குமா? நம்மிடம் இவள் என்ன பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கிறாள்?
வந்தியத்தேவா! நீ ஒன்று மட்டும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நீ உன்னை வெகு கெட்டிக்காரன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்? ஆனால் நாகரிகமறியாத இந்த பெண் உன்னை தோற்கடித்துவிட்டாள்.
ம்ஹூம்... வாணர் குலத்து வீரனையாவது தோற்கடிப்பதாவது! நான் ஒரு போதும் தோற்கமாட்டேன்.
இப்படி மறைந்த மண்டபத்தில் இருந்தபடி எண்ணிக் கொண்டிருக்கிறான்.


பொழுது சாய்ந்து இன்னும் அவள் வந்த பாடில்லை.


இப்போது நாம் என்ன செய்வது? எவ்வளவு நேரம்தான் இந்த பாழடைந்த மண்டபத்திலேயே இருப்பது?


ஆகா! நன்றாக இருட்டி விட்டது.
எங்கே இன்னும் அவள் வரவில்லை?
நாலாபுறமும் இருள் சூழ்ந்தது. வந்தியத்தேவன் வேறு வழியின்றி மறைந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்து, ஒரு மேட்டிலிருந்து பார்க்கிறான்.
அவள் வருவாளா? இல்லை, ஒரு வேளை பழுவேட்டரையரின் ஆட்களிடம் அவள் அகப்பட்டிருப்பாளோ?


நாம் எவ்வளவு எச்சரித்தோம் அதைக் கேளாமல் மண்டபத்தை விட்டு வெளியே வந்துவிட்டானே!
துக்கூ....
இது அவளின் குரலா? இல்லை உண்மையான குயிலின் குரலா?
இல்லை இது அவளின் குரலேதான்!
துக்கூ....
நல்ல வேளையாக இந்த பெண் கூறியபடி வந்துவிட்டாள்!
பூங்குழலி....!
சத்தம் செய்யாமல் என்னுடன் வா!


அத்தனை முறை உன்னிடம் நான் சொன்னேன். மண்டபத்தை விட்டு வெளியே வர வேண்டாம் என்று!
சொன்னாய்....!


அதற்குள் வந்தியத்தேவன் படகை பார்த்து ஆர்வமுடன் ஓடுகிறான் பூங்குழலியை முந்திக் கொண்டு...


ஓடிச் சென்று படகை கடலுக்குள் தள்ளுகிறான். ஆனால் படகு சிறிதும் நகர்ந்தபாடில்லை. (நம் வந்தியத்தேவனுக்குத்தான் ஆர்வக் கோளாறு என்று நமக்கு தெரியுமே !)
ம்ம்...
வந்தியத்தேவன் தன் முழு பலத்தையும் பயன்படுத்தி படகை தள்ளுகிறான். ஆனால், படகு இம்மியும் நகர்ந்தபாடில்லை.


அவனின் செய்கைகள் பூங்குழலிக்கு நகைப்பை உண்டாக்குகிறது.
ஆ ஆ...
அட படகு சற்றும் நகர்ந்தபாடில்லையே
ம்ம்...
நீ கொஞ்சம் சும்மாயிரு... நான் பார்த்துக் கொள்கிறேன்.
அட இந்த பெண் என்னைப் பற்றி என்னதான் நினைத்து கொண்டிருக்கிறாள்?


அடடா! இந்த யோசனை நமக்கு வராமல் போய்விட்டதே!
விரைந்து வா..!
இதோ வந்துவிட்டேன்...
நீ அப்படியே படகில் படுத்துக் கொள். சற்று தூரம் சென்றதும் எழுந்து அமர்ந்து கொள்ளலாம்.


ஆகா! அற்புதமான இரவு நேரத்தில் பூங்குழலியுடன் ஒரு பயணம்...
பூங்குழலி எவ்வளவு ஆழமான கடலாக இருந்தாலும் நீ நீந்துவாயா?
கடல் என்றால் ஆழமாகத்தானே இருக்கும்! நீந்த தெரிந்த பின் குறைந்த ஆழம், அதிக ஆழம் என்று என்ன இருக்கிறது?
ஆங்.... அதுவும் சரிதான்!


ஆமாம், பாய் மரத்தை கட்ட வேண்டாமா?
பாய்மரம் கட்டினால் கரையில் உள்ளவர்களுக்கு எளிதாக தெரிந்துவிடும். துரத்தி வந்து ஒரு வேளை நம்மை பிடித்து விடுவார்கள்.
அப்படியா! அதற்காக நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். ஒரு வேளை அவர்கள் வந்தால் நான் ஒரு கை பார்த்து விடுகிறேன்.


அதுமட்டுமில்லை! இப்பேது எதிர் காற்று வீசுகிறது பாய்மரம் விரித்தால் படகு கரையை நோக்கித்தான் செல்லும். நடுநிசிக்கு மேல் விரித்துக் கொள்ளலாம்.
உனக்கு இதெல்லாம் நன்றாய் தெரிந்திருக்கிறது.
என்னுடைய இன்னொரு பெயர் என்ன தெரியுமா...?
சமுத்திர குமாரி!


சமுத்திர குமாரியா! இது என்ன விசித்திரமான பெயர்?
ஏன் இளவரசர் அருள்மொழிவர்மரை பொன்னியின் செல்வன் என்று அழைப்பதில்லையா? அது போலத்தான்.
ஓ... அப்படியா!
மிகவும் தன்னம்பிக்கை -யான பெண்!


இன்னும் எவ்வளவு நேரமாகும் இலங்கை போய் சேர...
இரண்டு பேராகத் துடுப்பு வலித்தால் பொழுது விடியும் சமயம் போய்ச் சேரலாம்.
அப்படியென்றால் நானும் துடுப்பு வலிக்கிறேன்.
இது என்ன பெரிய விஷயம்! நினைத்தால் முடியாதது எதுவும் இல்லை.


அவன் துடுப்பு போட, போட முன்னேறிச் செல்லாமல் ஒரே இடத்தில் சுழல்கிறது படகு.
என்ன இது படகு நகராமல் ஒரே இடத்தில் சுழல்கிறது!?
நீ கொஞ்சம் சும்மாயிரு.
அவன் துடுப்பு போடுவதை நிறுத்திக் கொள்ள, பூங்குழலி துடுப்பு போடுகிறாள். படகு முன்னேறி நகர்ந்து செல்கிறது.


என்ன இது? நீ துடுப்பு வலித்தால் படகு செல்கிறது! நான் துடுப்பு வலித்தால், அதே இடத்தில் அசையாமல் நிற்கிறது!
அது அப்படித்தான்!
ஓ! நீ சமுத்திர குமாரி அல்லவா, அதான்...
ஆமாம்! இந்த கட்டை என்னத்திற்கு?
படகு அதிகம் ஆடாமல் இருப்பதற்கு.
இதற்கு மேலும் ஆடுமா என்ன? இப்போதே வேண்டிய ஆட்டம் ஆடுகிறதே!
இது ஒரு ஆட்டமா? ஐப்பசி, கார்த்திகையில் வாடைக் காற்று அடிக்கும் போது அல்லவா பார்க்க வேண்டும்!


எப்பேர்பட்ட பலத்த காற்று அடித்தாலும் படகு கவிழாமல் இந்த கட்டை காப்பாற்றிவிடும் என்று சொல்லு!
அப்படிச் சொல்லுவதற்கு இல்லை. சுழல்காற்று அடித்தால் பெரிய, பெரிய மரக்கலங்கள் எல்லாம் சுக்கு நூறாகிவிடும். அப்படியென்றால் இந்த சிறிய படகு எம்மாத்திரம்!
அவள் கூறியதைக் கேட்டு வந்தியத்தேவனுக்கு பயம் வந்துவிட்டது. அவன் கரைக்கே திரும்பிவிடலாம் என்று எண்ணி...


பெண்ணே! எனக்கு தலை சுற்றுகிறது. என்னை கரையில் கொண்டு போய்விடு. தலை சுற்றுகிறது! படகை கரைக்கு விடு...
என்ன உளறுகிறாய்? பேசாமலிரு, மயக்கம் இருந்தால் அப்படியே படுத்துக்கொள்.


ஆகா! இவள் ஏதோ திட்டத்தோடு தான் நம்மை அழைத்துச் செல்ல சம்மதித்திருக்கிறாள். ஒரு வேளை நம்மை கடலில் மூழ்கடித்து விட திட்டம் போட்டிருக்கலாம்.
படகை கரைக்கு திருப்புகிறாயா? இல்லையா?
இல்லையென்றால் கடலில் குதித்துவிடுவேன்!
தாராளமாய் குதி! ஆனால் குதிப்பதற்கு முன்னால் பொன்னியின் செல்வனுக்கு நீ எடுத்து போகும் ஓலையை என்னிடம் கொடுத்துவிடு.
அதெல்லாம் உன்னிடம் கொடுக்க முடியாது. நீ படகை திருப்பா-விட்டால் என்ன நான் குதித்துவிடுகிறேன்.


இவள் சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொள்ள நான் ஒன்றும் ஏமாளியில்லை..!
கோடிக்கரை பகுதியில் கடல் ஆழம் குறைவு என்று அவன் கேள்விப்பட்டதை வைத்தும், அன்று காலை அவன் கடலில் இறங்கி நீராடியதை வைத்தும் ஒரு முடிவுக்கு வந்து கடலில் குதித்துவிடுகிறான்.
அவன் எதிர்பார்த்தது போல் இல்லை...
ஆ! என்ன இது இவ்வளவு ஆழமாக இருக்கிறது?


ஏந்த பக்கம் கரை இருக்கிது என்று கூட தெரியலையே?
வந்தியத்தேவன் ஒரு அலைக்கும் மற்றொரு அலைக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டதால், படகு எங்கிருக்கிறது கரை ஏந்த பக்கம் இருக்கிறது என்றும் தெரியவில்லை.
ஒரு வேளை நாம் புறப்பட்டதை யாராவது கண்டிருந்தால்?
வேண்டுமென்றால் அவனே வந்து ஏறிக்கொள்ளட்டும். இதில் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை!
ஈழத்திற்கு அழைத்து செல்கிறாயா? என்று கேட்க வேண்டியது. பிறகு வேண்டாம் கரைக்கு படகை விடு என்று கூற வேண்டியது! நான் என்ன அவன் வைத்த ஆளா?
ஒரு வேளை.... அவன் கூறியபடி கரைக்கு திரும்பினால் கையும் களவுமாக பழுவேட்டரையர்களிடம் சிக்க வேண்டும்.
காப்பாற்று!
காப்பாற்று!!
ஐய்யோ! இந்த மூடனுக்கு நீந்த தெரியாது போலிருக்கிறதே? சற்று தாமதித்தாலும் அவன் கடலில் மூழ்கி இறந்துவிடுவான். அதன் பின் இந்த இரவில் அவனை தேடி கண்டுபிடிப்பதும் இயலாத காரியம்.


ஒரு பெரிய அலை அவனை மூழ்கடிக்க செய்து விடுகிறது.
அய்யோ! இத்தோடு என் கதை முடிந்தது.
எங்கே அவன்?
ஒரு யோசனை செய்தாள்! படகில் இருந்த கயிற்றின் ஒரு முனையை படகிலும், மறுமுனையை தன் இடுப்பிலும் கட்டிக் கொண்டாள்.


சிறிதும் தாமதம் செய்யாமல் கடலில் பாய்கிறாள்.
இந்த இருட்டில் எப்படி அவனைத் தேடுவது?
அவனை பார்த்து விட்டாள் பூங்குழலி
இப்போது இவன் கிட்ட நாம் போனால் நம்மையும் கட்டிப்பிடித்து நீரில் மூழ்கடித்துவிடுவான்...!
அய்யோ! இவனை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும். ஒரு வேளை இவன் மூழ்கி இறந்துவிட்டால் அதன் பழி நம் மேல் அல்லவா விழும்.


அப்போது பூங்குழலி அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டாள்.
நாம் நினைத்தது சரிதான். இந்த கொலைகாரி பாவியை நம்பி நாம் ஏமாந்துவிட்டோமே!
முகத்தில் விழுந்த குத்தில் மயங்கி விடுகிறான்.
தனி ஒரு பெண்ணாக வந்தியத்தேவனை காப்பாற்றி படகில் ஏற்றுகிறாள்.
இனி ஒரு முறை இப்படிப் பட்டவனை படகில் ஏற்றக் கூடாது. கொஞ்ச நேரத்தில் என்ன பாடு படுத்திவிட்டான்!


மயங்கிய நிலையில் வந்தியத்தேவன் இருக்க...
சிறிது நேரத்துக்கு பின் காற்று சாதகமான திசையை நோக்கி வீச பாய்மரம் கட்டுகிறாள் பூங்குழலி.
மயக்கம் தீர்ந்து கண் விழித்த வந்தியத்தேவன், தான் உயிரோடு இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறான்.
இந்த பெண் மீது நாம் சந்தேகம் கொண்டது எவ்வளவு பெரிய தவறு!


தனி ஒரு பெண்ணாக என்னை கடலிலிருந்து காப்பாற்றி படகில் ஏற்றி இருக்காளே! உண்மையிலேயே இவள் சமுத்திர குமாரிதான்.


இவளிடம் நாம் எப்படி முகம் கொடுத்துப் பேசுவது! வேறு வழியில்லை, *உப்பு தின்னவன் தண்ணி குடிச்சிதானே ஆகனும்.
*பழமொழி


சமுத்திர குமாரி! என்னை அழைத்தால் நான் பாய்மரம் விரிப்பதற்கு உதவி செய்ய மாட்டேனா?
நீ சும்மா இருந்தாலே போதும். அதுவே நீ எனக்கு செய்யும் பெரும் உதவி.


பூங்குழலி! ஏன் ஒரே தாகமாயிருக்கிறது!
உப்புத்தண்ணீர் குடித்திருக்கிறாய் அல்லவா? பின் தாகமெடுக்காமல் என்ன செய்யும்?
வாணர் குலத்தில் பிறந்த உனக்கு இந்த அவமானம் தேவையா? (என்று தன்னைத் தானே நொந்து கொண்டான்.)
உனக்காக சாப்பாடு கூட கொண்டு வந்தேன். நீ செய்த வேலையில் அதுவும் கடலில் விழுந்துவிட்டது. (என்று கூறி, சுரக்குடுவையை அவனிடம் நீட்டுகிறாள்)
அவன் செய்த செயலை எண்ணி தலை குனிந்திருக்கிறான் வந்தியத்தேவன்.
இந்தா, இதைக் குடி!


ஆபத்துக்கு பாவம் இல்லை என்று எண்ணி பூங்குழலி கொடுத்த நீரை வாங்கி மொடக் மொடக் என்று குடிக்கிறான்.
இவள் நம் மீது கோபமாக இருக்கிறாளா? இருக்காதா! நாம் செய்த வேலைக்கு, நம்மை காப்பாற்றியதும் இல்லாமல் தவித்த வாய்க்கு தண்ணீரும் கொடுத்தாளே. இந்த பெண்ணை போய் நாம் சந்தேகப்பட்டோமே!
பழங்காலங்களில் பயணத்திற்கு தேவையான தண்ணீரை சுரக்குடுவையில் கொண்டு செல்வார்கள்.
ஆமாம், இப்போது நேரம் என்ன இருக்கும்?
சப்த ரிஷி மண்டலத்தைப் பார்!


என்று பூங்குழலி கூறியதும் வட திசையை பார்க்கிறான். அப்போது சப்த ரிஷிகள் இடம் பெயர்ந்திருப்பதை காண்கிறான். ஆனால், துருவ நட்சத்திரம் மட்டும் இடத்தை விட்டு அசையாமல் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைகிறான்.


இந்த துருவ நட்சத்திரம் காலம் காலமாக கடலில் பயணிப்போருக்கு நிலைத்து நின்று திசையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இதை யாருக்கோ உதாரணமாக சொன்னார்களே!?
ஆங்! அந்த ஜோதிடர் இளவரசர் அருள்மொழிவர்மரை அல்லவா துருவ நட்சத்திரத்துக்கு இணையாக கூறினார். உண்மையிலேயே அவரை நாம் சந்திக்கும் பேறு கிடைக்கப் போகிறதா?
என்ன வீரரே! நேரம் என்னவென்று தெரிந்ததா?
அது தெரிந்தால் நான் ஏன் உன்னைக் கேட்கப் போகிறேன்?


மூன்றாம் ஜாமத்தில் பாதி நடக்கிறது.
இந்த பெண்ணுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே!
பொழுது விடிய நாம் நாகத்தீவுக்கு போய்விடுவோம்.
நாகத்தீவா?
ஆமாம்! இலங்கையின் வடக்கு பகுதி ஓரத்தில் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நாகத்தீவு.
அங்கு எதற்கு நாம் போகிறோம்? அங்குதான் இளவரசர் அருள்மொழிவர்மர் இருக்கிறாரா?


இளவரசர் எங்கிருக்கிறார் என்றெல்லாம் எனக்கு தெரியாது!
பின் எதற்காக நாகத்தீவுக்கு நாம் போகிறோம்?
நான் உன்னை அங்கு இறக்கிவிட்டால் மறுபடியும் நீ கடலை கடக்காமல் கரை வழியாகவே, நீ இலங்கை தீவை அடைந்து விடலாம்.
என்னை இறக்கி விட்ட பிறகு நீ என்ன செய்வாய்?
என்னை பற்றி உனக்கு என்ன கவலை?
எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறாய், உன்னிடம் நான் நன்றி செலுத்த வேண்டாமா? அது மட்டும் இல்லாது என்னிடம் ஏதோ பிரதி உபகாரம் கேட்கப் போவதாக சொன்னாயே? அதனால் கேட்டேன்.


அந்த எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டு விட்டேன். நீ நன்றி இல்லாதவன்.
ஆமாம்! நான் உன்னை இலங்கையில் இறக்கிவிட்ட பிறகு நீ என்ன செய்வாய்?
என்ன செய்வேன்? நேரே இளவரசர் அருள்மொழியை சென்று சந்திப்பேன். அவரிடம்...
அது சரி! இளவரசர் இருக்குமிடத்தை எப்படி கண்டுபிடிப்பாய்? அதை கூறு.
இந்த கடலை கடப்பதற்கு எனக்கு உதவி செய்த கடவுள் அதற்கும் உதவி செய்வார்?


அப்படியா! உனக்கு கடவுள்தான் உதவி புரிந்தாரா?
ஆங்! இந்த கடலில் எனக்கு படகு தள்ளுவதற்காக உன்னை அனுப்பி வைத்தார் அல்லவா?
நான் உனக்காக படகு தள்ள வரவில்லை. உனக்கு உதவி செய்யும்படி கடவுள் கனவில் என்னிடம் சொல்லி அனுப்பவுமில்லை.
பின் எதற்காக நேற்று பழுவேட்டரையரின் ஆட்களிடமிருந்து என்னை தப்புவித்தாய்? எதற்காக இப்போது படகு தள்ளிக் கொண்டு வருகிறாய்?
அதை பற்றி நீ கேட்க வேண்டாம். அது என் சொந்த விஷயம்.
இவளிடம் ஏதோ மர்மம் இருக்கிறது?
அது நமக்கெதற்கு.


சரி! நீயே கூறு. இளவரசர் அருள்மொழிவர்மர் இருக்குமிடத்தை எப்படி கண்டுபிடிப்பது என்று?
சூரியன் இருக்குமிடத்தை கண்டுபிடிப்பது என்ன கஷ்டம்?
சூரியனை மேகங்கள் மறைத்திருக்கலாம். அல்லது கடலுக்கடியில் சென்றிருக்கலாம்.
இந்த சூரியனை எந்த மேகமும் கடலும் மறைத்துவிட முடியாது. பொன்னியின் செல்வரை மறைக்க முயலும் மேகமும் கடலும் ஒளி பெறும்!


இளவரசரை பற்றி பேசும் போது இவளது முகம் என்ன மலர்ச்சி அடைகிறது! இளவரசர் பொன்னியின் செல்வரிடம் அப்படி என்ன வசீகர சக்தி இருக்குமோ? தெரியவில்லை.
அப்படியென்றால் இலங்கையில் இளவரசரை கண்டுபிடிப்பது கஷ்டமில்லை என்கிறாய்?
சோழ சைன்யம் எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போனால் போகிறது?


அது எப்படி? இலங்கையில் பாதி அளவு சோழ சைன்யம் பரவி இருக்கிறது என்று கேள்விப்பட்டேனே! இளவரசர் இருக்குமிடம் நிச்சயமாகத் தெரிந்தால் வீண் அலைச்சல் அலையாமல் அவர் இருக்குமிடத்துக்கு நேரே போய்விடலாம்.
அதற்கு ஒரு வழி இருக்கிறது.
வழி இருக்கும் என்று நம்பிதான் உன்னை கேட்டேன்.
நாகத்தீவு பக்கத்தில் பூதத்தீவு என்று ஒன்றிருக்கிறது.
பூதத் தீவா? பெயரை கேட்கவே பயங்கரமாக இருக்கிறதே!


ஆமாம்! அங்கு ஒரு பூதம் இருக்கிறது. அதைக் கேட்டால் இளவரசர் எங்கிருப்பார் என்று தெரிந்து கொள்ளலாம்.
அந்த பூதத்திடம் என்னையும் அழைத்துக் கொண்டு போவாயா?
அதுதான் முடியாது. கரையில் படகைப் பார்த்துக் கொண்டு காத்திருப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்தால்தான், நான் போய் விசாரித்துக் கொண்டு வருவேன்.
சரி! அப்படியே ஆகட்டும்.


பூதத் தீவை படகு நெருங்குகிறது. பொழுதும் விழுந்துவிட்டது.
ஆகா! இது என்ன சொர்க்கலோகமா? இல்லை வேறேதும் உலகமா?
இது சொர்க்கம் அல்ல! இது பூலோகம்தான். இலங்கை வந்தடைந்து விட்டோம்.
நான் கூறியது நினைவிருக்கட்டும். என்னை பின் தொடர்ந்து தீவுக்குள் நீ வரக்கூடாது.
பெண்ணே! வாணர் குலத்தைச் சேர்ந்தவன் வாக்கு தவற மாட்டான்.


ஆகா! என்ன அருமையான காலைப் பொழுது.
கடற்கரையின் குளிர்ந்த காற்று அவனுக்கு மேலும் உற்சாகத்தை அளிக்கிறது.
வந்தியத்தேவனை படகுக்கு காவலிருக்கும்படி செய்து விட்டு, பூதத்தை தேடி பூதத் தீவுக்குள் செல்கிறாள் பூங்குழலி....


வள்ளிக் கிழங்கு அவிக்கும் மணம் வருவதைப் பார்த்தால் நிச்சயம் அத்தை இந்த குகையில்தான், இருக்க வேண்டும்.
தடாலடியாக உள்ளே சென்றால் வருவது யார் என்று தெரியாமல் அத்தை அங்கிருந்து ஓடி விடக்கூடும். அதனால் குகையில் மெல்ல உள்ளே சென்று பார்க்க வேண்டும்.
நாம் நினைத்தது போல் அத்தை இங்கேதான் இருக்கிறாள்.
அப்படி என்னதான் ஓவியத்தில் இருக்கிறதோ? எந்நேரமும் ஓவியம் வரைந்தபடியே இருக்கிறாளே!
பூங்குழலியைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்து உள்ளே வரும்படி அழைக்கிறாள்.
அத்தையின் அழகிற்கும், அவளின் அறிவுக்கும், அவளுக்கு மட்டும் பேச முடிந்திருந்தால் இந்நேரம் ஏதாவது ஒரு ராஜ்யத்திற்கு ராணியாக இருந்திருப்பாள்.


பூங்குழலியை எதற்காக வந்தாய் என்பது போல் அந்தப் பெண் பார்க்க...
அத்தையிடம் தன் சுவீகாரப் புத்திரன் எங்கிருப்பார் என்பதை எப்படி கேட்பது?
எப்பவும் போல் நயன பாஷையில் கேட்டுவிட வேண்டியதுதான்.
பூங்குழலி ஏதோ கேட்க வந்திருக்கிறாள், என்பதை புரிந்து கொண்டு என்ன வேண்டும் என்று கண்ணாலேயே கேட்கிறாள்.
ம்..?
...ம்ம்ம்


?
அத்தைக்கு இன்னும் நாம் கேட்பது புரியவில்லை போலிருக்கிறது.
ஆங்! இது பொன்னியின் செல்வரின் ஓவியம். இதை காட்டி கேட்டால் போகிறது.
ஓவியத்தை கண்டதும் பூங்குழலியின் மனம், முதல் முதலாக தன் தந்தையுடன் இளவரசர் பொன்னியின் செல்வரை கண்ட அந்த சம்பவம் அவள் நினைவுக்கு வருகிறது.
ஓ! இவள்தான் தாங்கள் கூறிய அந்த சமுத்திர குமாரியா?



வந்தியத்தேவன், பூங்குழலியின் வருகைக்காக படகில் காத்துக் கொண்டிருக்கிறான்.
இளவரசர் மாதோட்டத்தில் இருந்ததாகவும், ஒரு வேளை சிம்மகிரிக்கு சென்றிருக்கலாம் என்று அத்தை கூறுகிறாள்.
இவனை மாதோட்டத்தில் கொண்டு போய் விட்டு விடலாம். அதன் பின் அவன் சாமர்த்தியம்.
பூங்குழலி படகில் தாவி குதித்து...
எழுந்திரு! பகலிலே கும்பகர்ணனைப் போல் தூக்கமா?


இலங்கை வந்து விட்டோம் அல்லவா! அதுதான் கும்பகர்ணனின் தூக்கம் என்னைத் தொற்றிக் கொண்டது.
பூங்குழலி அவனின் மறுமொழி கேட்டு புன்முறுவல் செய்கிறாள்.
ஆமாம்! பூதத்தை பார்த்தாயா? இளவரசர் எங்கிருப்பதாக பூதம் சொல்லியது?
இளவரசர் மாதோட்டத்தில் இருக்கலாம் என்று பூதம் சொல்கிறது.


மாதோட்டம் இங்கிருந்து எவ்வளவு தூரம்?
அது என்ன ஐந்து காத தூரம் இருக்கும்!
மாதோட்டம் நெருங்கி வரும் சமயம்...
சமுத்திரகுமாரி....!
கூப்பிட்டாயா?


நீ, எனக்கு மட்டும் உதவி புரியவில்லை. சோழ சாம்ராஜ்யத்துக்கே உதவி புரிந்திருக்கிறாய்!
இதற்கு பதிலாக நான் ஏதாவது செய்யாவிட்டால், என் மனம் நிம்மதி அடையாது.
இதையெல்லாம் நீ உண்மையாகச் சொல்கிறாயா?
சமுத்திர ராஜன் மீது சத்தியமாச் சொல்கிறேன்!


அப்படியா! சரி நீ பொன்னியின் செல்வரைக் கண்டால், சமுத்திர குமாரியை ஞாபகம் இருக்கிறதா என்று கேள்.
வந்தியத்தேவன் பூங்குழலியை ஆச்சரியத்துடன் பார்க்கிறான்.
ஆனால் அவள் அதை பொருட்படுத்தாமல்..
ஞாபகம் இருக்கிறது என்று அவர் சொன்னால்! அவள்தான் எனக்கு படகு வலித்துக் கொண்டு வந்து இலங்கையில் இறக்கிவிட்டாள் என்று கூறு.


இவ்வளவுதானா? நீ ஏதோ பெரியதாக கேட்கப் போகிறாய் என்று நினைத்தேன்!
பூங்குழலி நீ அவ்வளவு உயரத்தில் பறக்க நினைக்கிறாய்...!
சரி, நீ இளவரசரிடம் என்ன சொல்வாய்?
நடந்தது நடந்த படி சொல்லுவேன்.
இளவரசே! சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா? ஞாபகம் இல்லாவிட்டால் இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அவள் இல்லையென்றால், (பூங்குழலி குறுக்கிட்டு...)


ஐயா! நீங்களாக புனைந்து ஏதும் கூற வேண்டாம். உள்ளது உள்ள படி கூறினால் அது போதும்.
முதலில் நான் கூறுவதைக் கேள்.
அவள்தான் என்னை பழுவேட்டரையரின் கொலைகார ஆட்களிடம் சிக்காமல் காப்பாற்றினாள்! அவள்தான் தன்னந்தனியாக படகு தள்ளிக் கொண்டு வந்து என்னை இலங்கையில் சேர்த்தாள்..!
சமுத்திர குமாரியின் உதவி இல்லாவிட்டால் நான் உயிருடன் வந்து உம்மை பார்த்திருக்க முடியாது. இந்த ஓலையும் உங்களுக்கு கிடைத்திராது! என்று சொல்லுவேன்.


இதுவரை சொன்னது சரிதான்! இதையெல்லாம் நான் அவரிடம் சொல்ல சொன்னதாகச் சொல்லிவிடாதே.
சேச்சே! என்னை முழு பைத்தியம் என்று நினைத்தாயா?
கரையில் இருக்கும் வரையில் அப்படி நான் நினைக்கவில்லை. ஆனால், நீ கடலில் குதித்தாய் பார் அப்போது நினைத்தேன்.
இனி இவகிட்ட பேசும் போது ஜாக்கிரதையா பேசனும்.
ஹா..ஹா..
ஹா..ஹா..
கொள்ளிவாய் பிசாசை தன் காதலர்கள் என்றாள். ஆனால், இவள் மனதில் இளவரசர் அல்லவா இருக்கிறார்! சோழநாட்டு மக்கள் அனைவர் மனதிலும் அவர் இருக்கும் போது இவள் மட்டும் என்ன விதிவிலக்கா!?
இவர்கள் மாதோட்டம் செல்லட்டும். நாம் முதன் மந்திரியை சந்தித்துவிட்டு வருவோம்...


எந்தவொரு புண்ணிய ஸ்தலத்திற்கு செல்ல வேண்டுமென்றாலும் அதற்கு கடவுளின் ஆசி அவசியம். நாம் எல்லோருக்கும் அத்தகைய பிராப்தம் கிடைத்திருக்கிறது. வாருங்கள்! புண்ணிய ஸ்தலமான இராமேஸ்வர தீவுக்கு செல்வோம்....


புண்ணிய ஸ்தலமான இராமேஸ்வரக் கடலில் நீராடினால் முற்பிறவி பாவங்களும் போகும் என்பது நமது முன்னோர்களின் நம்பிக்கை!
யாருடா இவன்? பார்க்கவே நல்ல வேடிக்கையா இருக்கான்.
நல்லா பார்த்துக் கொள்ளட்டுமே! இவர்களால் என்னை என்ன செஞ்சிட முடியும்?
கரைக்கு வரட்டும் இந்த வைஷ்ணவனின் முன் குடுமியை அறுத்து வைஷ்ணவ அடையாளத்தை அழித்து புண்ணிய தீர்த்தத்தில் நாலு முக்கு போட்டு அனுப்ப வேண்டும்.


நம்மவாள எல்லாம் வரச் சொல்லு. இந்த வைஷ்ணவன் கொஞ்சம் திமிரா இருக்கான். நாம யாருன்னு அவனுக்கு காமிச்சிடலாம்!
இராமேஸ்வரத்திற்கும் நாம் வந்ததற்கான அடையாளமா ஏதாவது செஞ்சிட்டுதான் போகனும். குருநாதர் வருவதற்குள் சின்னதா ஒரு சம்பவம் செஞ்சுட வேண்டியதுதான்.


குருநாதரை சந்திக்கிறதுக்கு முன்னாடி இந்த மண்டூகங்களுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்.


அப்பனே! வா வா... இராம தீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், ஆஞ்சநேய தீர்த்தம், சுக்ரீவ தீர்த்தம் இப்படி அறுபத்து நாலு தீர்த்தங்கள் இருக்கின்றன. நீ என்னுடன் முதலில் ஆஞ்சநேய தீர்த்தத்துக்கு வா.
வைஷ்ணவா! சின்ன தோஷத்துக்கு சரியான சங்கல்பம் பண்ணி வைக்கிறேன். இராமபிரானின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிய ஸ்தலம் இது.
இராமர் இராவணனைக் கொன்ற பாவத்தை போக்கிக் கொள்வதற்காக சமுத்திர மணலை லிங்கமாக பிடித்து பூஜித்த இடத்துக்கு உன்னை நேராக அழைத்துப் போகிறேன், வா என்னோடு.
நிறுத்துங்கள்! உங்கள் அடித்தப் பேச்சை. முதலில் நீங்கள் சொன்ன தீர்த்தங்களினால் உங்களுடைய நாவை அலம்பி உங்கள் பாவத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்.
ஓஹோ! இராமன், லக்ஷ்மணன் என்று சொன்னதனால் எங்களுக்கு பாவம் வந்திருக்கும் என்கிறாயா? அப்படி ஒன்றுமில்லை. இந்த க்ஷேத்திரத்து பெயரே இராமேஸ்வரம் தான். இராமர் சிவபெருமானை பூஜை செய்து பாவத்தை போக்கிக் கொண்ட இடம். அத்துடன் இராமர் என்ற பெயரில் இருந்த தோஷம் போய்விட்டது.


ஓ! அஞ்ஞான சிரோன்மணிகளே!! ஏன் இப்படி தலைக்குத் தலை உளறுகிறீர்கள். இந்த ஸ்தல பெயரின் அர்த்தம் இன்னதென்பதையே நீங்கள் தெரிந்து கொண்டபாடில்லை!
நீதான் சொல்லேன் பார்ப்போம்!
பிரம்மாவினுடைய ஒரு தலையை பறித்ததினால் சிவனுக்கு பிரம்மஹர்த்தி தோஷம் பிடித்துவிட்டது. திருமாலின் பூரண அவதாரமாகிய இராமபிரானின் பாதம் பட்டு புனிதமான இந்த இடத்துக்கு சிவன் வந்து அந்த பிரம்மஹர்த்தி தோஷத்தைப் போக்கிக் கொண்டார். இராமரை ஈசுவரன் பூஜித்த இடமாதலால் இராமேசுவரம் என்ற பெயர் ஏற்பட்டது. தெரிந்து கொண்டீர்களா? மூட சிகாமணிகளே!


யாரடா அவன் எங்களை மூட சிகாமணிகள் என்று சொல்வது? அடே தடியா! நீ என்ன தலையில் கொம்பு முளைத்தவனா? இவனுடைய சிகையை ஆணி வேரோடு களைத் தெரியச் சொல்லலாம்.
இதற்கு நாவிதனை கூப்பிடுவானேன்? நாமே அந்தக் கைங்கர்யம் செய்து விடலாமே! நல்ல கூர்மையான கத்தியாகக் கொண்டு வாருங்கள்.


கொஞ்சம் பொறுங்கள், இன்னும் ஒரு விஷயம் பாக்கியிருக்கிறது. ஒரு காலத்தில் என் தலை முழுவதும் சிகை அடர்த்தியாக இருந்தது! ஒரு சைவனுடைய மண்டையை உடைத்துவிட்டு என் சிகையிலிருந்து ஒரு ரோமத்தை வாங்கி விடுவதென்று விரதம் எடுத்துக் கொண்டேன். அதன்படி முக்காலே, அரைக்கால் வாசி சிகை தீர்ந்துவிட்டது. இந்த ஊரில் என் முழுவிரதத்தை நிறைவேற்றி கடலில் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். எங்கே! ஒவ்வொருவராக உங்களுடைய மண்டையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.
அட! இந்த வைஷ்ணவன் என்ன துடுக்காகப் பேசுகிறான்.
அடே! எங்கள் எல்லாருடைய மண்டையையும் உடைத்து விடுவாயா? உன்னால் முடியுமா?


என்ன அந்த வைஷ்ணவனை பேசவிட்டு பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்...? அவன் மண்டையில ஒரு ரோமம் கூட இருக்கக் கூடாது.
என்றதும் அவனை சைவப் பட்டர்கள் தாக்க நெருங்குகிறார்கள். உடனே ஆழ்வார்க்கடியான் அவன் தடியை திருமாலின் சக்கரம் போல் சுழற்றுகிறான். (அப்போது)
விடாதே அடிங்கடா!
அவனை விடாதே பிடி...!
திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர சோழ பராந்தகரின் மகாமன்ய முதன் மந்திரி... அநிருத்தப் பிரமாதிராஜன்! வருகிறார்... பராக்..! பராக்...!!
திருமலை...!


ஆழ்வார்க்கடியான், குருநாதரின் குரல் கேட்டதும் தடியை சுழற்றுவதை நிறுத்திவிட்டு அநிருத்தரை நோக்கி வருகிறான். அவனை பின் தொடர்ந்து அங்கிருந்த சைவப் பட்டர்களும் வருகின்றனர். (கோபத்துடன்)
அங்கே என்ன ஆர்ப்பாட்டம்?
பிரம்மாதி ராஜரே! இந்த வைஷ்ணவன் எங்கள் மண்டையை உடைத்து விடுவானாம்! அவனை தக்கபடி தண்டிக்க வேண்டும்.


இவனை நான் பார்த்துக் கொள்கிறேன் நீங்கள் போகலாம்.
இவனுக்கு தண்டனையை நாங்கள்தான் கொடுப்போம்!
அவனைப் பிடியுங்கள். முதலில் அவன் முன் குடுமியை சிரைத்து, இவனுடைய ஊர்த்துவ சின்னங்களை அழித்து, புண்ணிய தீர்த்தத்தில் முழுக்காட்டி அனுப்புவோம்.
அப்படியா சங்கதி...?
துணிவிருந்தால் என்கிட்டே வாருங்கள் பார்ப்போம்.
(என்று கூறியபடி தடி எடுத்து சுழற்றத் தொடங்கிவிட்டான்.)


திருமலை...!
ஆணையிடுங்கள், இவர்கள் அனைவரின் மண்டையையும் உடைத்துவிட்டு வந்துவிடுகிறேன்.
நான் சொல்கிறேன் நீங்கள் போங்கள். இவனைத் தண்டிக்க உங்களால் ஆகாது! அவன் பெரிய முரடன். அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்.
.....ம்ம்ம்


காவலர்கள் ஆழ்வார்க்கடியானை துண்டு கட்டாக தூக்கி படகில் ஏற்றுகிறார்கள்...


திருமலை, நான் வருவதற்குள் அங்கே ஒரு கலவரத்தையே பண்ணிட்ட...!
குருவே! தங்களைப் போல் என்னால் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள முடியாது.
இங்கே வந்து எந்த ஆர்பாட்டமும் செஞ்சுடாதே. உன்கிட்ட நிறைய கேட்க வேண்டி இருக்கு. அதுக்கு முன்னாடி எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு, அத பார்த்துட்டு வந்துடுறேன்.
படகு அருகில் இருக்கும் வேறொரு தீவிற்கு செல்கிறது.


சோழ நாட்டின் முதன் மந்திரி அநிருத்தப் பிரமராயருக்கு எங்களின் வணக்கம்!
கீழ்கடல் நாடுகளுடன் உங்கள் கப்பல் வாணிபம் இப்போது எப்படி இருக்கிறது?

சுந்தர சோழ சக்கரவர்த்தி ஆளுகையில் ஒரு குறையும் இல்லை.


கடல் கொள்ளையர்களால் தொல்லை ஒன்றும் இல்லையே?
சென்ற ஆண்டில், மானக்கவாரத் தீவுக்கு அருகில் இருந்த கடற் கொள்ளைக்காரர்களை நம் சோழக் கப்பற் படை அழித்த பிறகு கடலில் கொள்ளையர் பயமே கிடையாது.
நல்லது! நான் கொடுத்தனுப்பிய ஓலை சம்பந்தமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?
தங்கள் கட்டளைப்படி, இலங்கை சைன்யத்துக்கு அனுப்ப ஆயிரம் மூட்டை அரிசியும், ஐந்நூறு மூட்டை சோளமும், நூறு மூட்டை துவரம் பருப்பும் தயாராக கொண்டு வந்திருக்கிறோம்.
உங்கள் கப்பல்களிலேயே ஏற்றி இலங்கைக்கு அனுப்ப முடியுமா?
அப்படியே செய்து விடுகிறோம்.


செம்பியன் மாதேவியின் ஆலய திருப்பணிக்கு எங்களால் இயன்றது.
இலங்கை யுத்தம் எப்போது முடியும்? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.
ஆ! அது யாருக்குத் தெரியும்? உங்களுடைய வர்த்தக சபைக்கு சோதிடன் இருக்கிறான் அல்லவா? அவனைக் கேட்டு எனக்கும் சொல்லுங்கள்!
எங்கள் சோதிடன் சொல்வதையெல்லாம் எங்களாலேயே நம்ப முடியவில்லை.
அப்படி என்ன சொல்லுகிறான்?
இளவரசர் அருள்மொழிவர்மர் போகுமிடமெல்லாம் வெற்றிதான் என்று சொல்லுகிறான். அவருடைய ஆட்சியில் சோழர் கப்பற் படை கடல் கடந்து பல தேசங்களுக்குக்கெல்லாம் சென்று வெற்றி கொள்ளுமாம். தூர தூர தேசங்களில் சோழ நாட்டின் புலிக் கொடி பறக்கும் என்கிறான்.


அப்படியானால் உங்கள் பாடு கொண்டாட்டம்தான்!
ஆம், எங்கள் கடல் வர்த்தகம் மேலும் செழித்து ஓங்கும் என்று சொல்லியிருக்கிறான்.
மிகவும் சந்தோஷம்! ஸ்ரீரங்க நாதருடைய அருள் இருந்தால் அப்படியே நடக்கும்.
தெரிஞ்ச கைக்கோளப் படையின் சேனாதிபதிகள் எனக்காக காத்திருக்கிறார்கள். நீங்கள் புறப்படுங்கள்.
சக்கரவர்த்தியிடம் மறக்காமல் எங்கள் நன்றியை தெரிவித்து விடுங்கள்.


ஒரு பழமையான மண்டபத்தில் அநிருத்தப் பிரமராயர் கொலு வீற்றிருக்கிறார்.
தெரிஞ்ச கைக்கோளப் படை சேனாதிபதிகள் காத்திருக்கிறார்கள். தங்களை பார்க்க விரும்புகிறார்கள்.
அவர்களை வரச் சொல்...



சோழ நாட்டின் முதல் மந்திரிக்கு எங்களின் வணக்கம்!
வாருங்கள்.. வாருங்கள்...! வந்து அமருங்கள்.
உங்களுடைய கோரிக்கை என்ன?
எங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம். இளவரசர் அருள்மொழிவர்மரின் தலைமையின் கீழ் யுத்தம் செய்ய விரும்புகிறோம்.
ஆகட்டும். தஞ்சைக்கு நான் போனதும் சக்கரவர்த்தியின் சம்மதம் கேட்டுவிட்டு உங்களுக்கு அறிவிக்கிறேன்.
பிரம்மராஜரே! அதற்குள்ளேயே இலங்கை யுத்தம் முடிந்து விட்டால்?


அந்த பயம் உங்களுக்கு வேண்டாம். இலங்கை யுத்தம் இப்போதைக்கு முடியாது.
ஈழத்துச் சேனாவீரர்கள் அவ்வளவு பொல்லாதவர்களா? எங்களை அங்கே அனுப்பி வையுங்கள் அவர்களை ஒரு கை பார்க்கிறோம்!
ஒரு கை என்ன? நீங்கள் மூன்று கையும் பார்ப்பீர்கள். தெரிஞ்ச கைக்கோளரின் படை யுத்த களத்தில் புகுந்து விட்டால் பகைவர்களின் பாடு அவ்வளவு தான். ஆனால் பகை வீரர்களை முதலில் கண்ணால் பார்த்தால்தானே அவர்களை நீங்கள் ஒரு கை பார்க்க முடியும்.


மகா மந்திரி! எங்களை இலங்கைக்கு அனுப்பி பாருங்கள். மகிந்தனும் அவனுடைய வீரர்களும் காடு மலைகளிலே ஒளிந்திருக்கட்டும் அல்லது மேக மண்டலத்தில் ஒளிந்திருக்கட்டும், அவர்களை கண்டுபிடித்து வந்து இளவரசரின் காலடியில் விழ வைக்கிறோம். அப்படிச் செய்யாவிட்டால் தெரிஞ்ச கைக்கோளர் படை என்ற பெயரை மாற்றி வேளாளரின் அடிமை படை என்று பட்டயத்தைப் பெற்று கொள்கிறோம்.


நல்லது இப்படிபட்ட வீரர்கள் இருப்பதினால்தான் சோழ அரசு மென்மேலும் பரவி வருகிறது. மேலும், பாண்டிய குலத்து புராதன மணிமகுடத்தையும், வீர வாளையும் கொண்டு செல்லாமல் யுத்தம் முடிவுக்கு வராது. அது மட்டும் இல்லாமல் இலங்கை வெற்றிக்கு பிறகு தூர தேசமெங்கும் படையெடுத்து செல்லும் திட்டம் உள்ளது. ஆகையால் தாங்கள் மகிழ்ச்சியாக காத்திருங்கள். நல்ல செய்தியை உங்களுக்கு சொல்லி அனுப்புகிறேன்.
நல்லது! நாங்கள் புறப்படுகிறோம்.


ஆகா! ஆழ்வார்க்கடியான் எதற்காக இவ்வளவு பீடிகை போடுகிறான்? அவன் கொஞ்சம் விவகாரமான ஆளுதான். என்ன செய்கிறான் என்று பார்ப்போம்.
திருமலை போதும் விஷயத்தை கூறு.
குருதேவராகிய தாங்களே சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக இருந்தால், சீடனாகிய நான் என்ன செய்ய முடியும்?


திருமலை! நான் சிவன் கோயிலுக்குப் போய் தரிசனம் செய்தது பற்றித்தானே சொல்லுகிறாய்?
நம்மாழ்வாரின் அருள் வாக்கைச் சற்று ஞாபகப்படுத்திக்கொள். நீ மறந்திருந்தால் நானே நினைவூட்டுகிறேன்.
"இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும் வலிந்து வாது செய்வீர்களும் மற்று நுந் தெய்வமுமாகி நின்றானே!" *
*கவிதை
ஆகா! சடகோபரின் அருள்வாக்கே! வாக்கு! இலிங்கத்தை வழிபடுவோரைச் சமணரோடும் சாக்கியரோடும் கொண்டு போய் தள்ளினார் பாருங்கள்!
அப்பனே! உன் குதர்க்க புத்தி உன்னை விட்டு எப்போது நீங்குமோ, தெரியவில்லை. நம் சடகோபர் மேலும் சொல்லியிருப்பதைக் கேள்.


"நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய்
நெடுவானாய்ச்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய்
அயனாய்"
"முனியே நான்முகனே முக்கண்ணப்பா!
என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே
என் கள்வா!
தனியே ஆருயிரே என்தலை மிசையாய்
வந்திட்டு"
கேட்டாயா திருமலை,
முக்கண்ணப்பா! என்று
நம் சடகோபர் கூவி
அழைத்து சிவனை தம்
தலை மீது வரும்படி
பிரார்த்தித்திருக்கிறார்!
நீயோ சிவன் கோயிலுக்கு
நான் போனது பற்றி
ஆட்சேபிக்கிறாய்..!
குருதேவரே! நம்மாழ்வாரின்
பாசுரங்கள் அனைத்தையும்
கல்லாமையினால் வீண்
சண்டைகளில் காலங்
கழித்து விட்டேன். மன்னிக்க
வேண்டும்.


தாங்கள் எனக்கு ஒரு வரம் கொடுக்க வேண்டும்!
என்ன வரம் வேண்டும்? வேண்டியதைக் கேள்!
தாங்கள் எனக்கு இந்த அரசாங்க வேலையிலிருந்து விடுதலை தர வேண்டும்.
ஏன்?
சடகோபரின் ஆயிரம் பாடல்களையும் சேகரித்து, ஊர் ஊராகச் சென்று பாட விரும்புகிறேன்.


ஆழ்வார் பாசுரங்களைச் சேகரிப்பதற்கும், பரப்புவதற்கும் மகான்கள் அவதரிப்பார்கள்! திருமலை! நீ ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். பகவான், அவரவர்களுக்கு இட்ட பணியை செய்ய வேண்டும். நீயும் நானும் இராஜ்ய சேவையை நமது கடமையாகக் கொண்டவர்கள்.
சோழச் சக்கரவர்த்தியின் சேவையில் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வதாக நாம் சபதம் செய்திருப்பதை மறந்தாயா?
தாங்கள் இவ்வாறு கூறுகிறீர்கள். தங்களைப் பற்றி சில இடங்களில் பேசிக் கொள்வதைக் கேட்டால்...
அப்படி என்ன பேசிக் கொள்கிறார்கள்?


தங்களுக்குச் சக்கரவர்த்தி பத்து வேலி நிலம் மானியம் கொடுத்திருப்பதால் தாங்கள் வைஷ்ணவ சம்பிரதாயத்தை விட்டுவிட்டதாகச் சிலர் சொல்கிறார்கள். குல தர்மத்தைப் புறக்கணித்துக் கப்பல் பிரயாணம் செய்வதாகவும் கூறுகிறார்கள்.
அந்த பொறாமைக்காரர்கள் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம். நாம் கிணற்றுத் தவளையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களை விடு, நான் எதற்காக கடல் கடந்து இங்கு வந்திருக்கிறேன் என்று உனக்கு தெரியும் அல்லவா?
மாதோட்டத்திற்கு போவதற்காக இராமேஸ்வரம் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.
உன்னுடைய யூகம் சரிதான். இளவரசர் அருள்மொழியை சந்திப்பதற்காக..


இளவரசர் அருள்மொழியை சந்தித்தீர்களா?
உனக்கும் அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் தோற்றிக் கொண்டதா? ஆஹா, ஆஹா! அவரிடம் அப்படி என்னதான் மாய மந்திரம் இருக்கிறதோ...?
குருவே! இலங்கையில் போர் எப்படி சென்று கொண்டிருக்கிறது.
அருள்மொழிவர்மர் படையெடுத்து வருகிறார் என்று தெரிந்ததுமே, இலங்கை மன்னனுக்கு துணையாக இருந்த, சேர மன்னனும், பாண்டிய மன்னனும், இலங்கை மன்னன் மகிந்தனை விட்டு சோழ படையுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள். அதை அறிந்த மகிந்தன் ரோஹணை நாட்டில் உள்ள மலைக்குகையில் சென்று ஒளிந்து கொண்டான்.


அப்படியென்றால் படையெடுத்துச் சென்ற நமது வீரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?
முந்தைய போர்களினால் அநுராதபுர நகரமே நாசமாகி விட்டது. இளவரசரின் கட்டளையின் பேரில் இடிந்த புத்த விஹாரங்களையும் மற்றும் கோயில்களையும் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அழகாய்த்தானிருக்கிறது! சைவம், வைஷ்ணவம் இரண்டையும் கைவிட்டு, இளவரசர் சாக்கிய மதத்தில் சேர்ந்து விடுவாரா என்ன?
நம்மை போன்றவர்கள் நம்முடைய மதமே பெரிது என்று சண்டையிட்டு கொள்ளலாம். ஆனால், ஒரு நாட்டை ஆளும் அரசர் தம்முடைய பிரஜைகள் அனுசரிக்கும் சமயங்கள் எல்லாவற்றையும் ஆதரிக்க வேண்டும்.
திருமலை! இளவரசர் அருள்மொழியால் சோழப் பேரரசு மகோன்னத நிலையை அடையப் போகிறது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்கள். அதைப் போல் இளவரசர் அருள்மொழியின் ஒவ்வொரு அசைவும் அதை எனக்கு உணர்த்துகிறது.


குருவே! தாங்கள் ஏதேதோ ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அங்கே இராஜ்யத்தின் அஸ்திவாரத்தை தகர்த்தெறியப் பார்க்கிறார்கள்.
என்று தான் பார்த்ததையும், தான் கேட்டதையும் ஒன்றுவிடாமல் தன் குருநாதரிடம் கூறிவிடுகிறான்.


அதைக் கேட்ட அநிருத்த பிரம்மராயர்...
நீ கூறுவதையெல்லாம் பார்த்தால் இளவரசர் அருள்மொழி சோழ நாட்டுக்கு தற்போது திரும்புவது அவ்வளவு நல்லது அல்ல!
அருள்மொழியை தடுத்து நிறுத்த வேண்டும். நீ உடனே இலங்கைக்கு புறப்படு.


என்று கூறி உடனே ஒரு படகு ஏற்பாடு செய்து ஆழ்வார்க்கடியானை இலங்கைக்கு அனுப்புகிறார் முதல் மந்திரி அநிருத்த பிரம்மராயர்.


பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளும், நந்தினியும் என்னதான் திட்டம் போட்டாலும், அதை முறியடிக்கும் ஆற்றலும், அறிவும் நம் இளைய பிராட்டிக்கு இல்லாமல் போய்விடுமா என்ன? நந்தினியின் திட்டங்களை முறியடிக்க வேண்டுமானால், தான் நந்தினியின் அருகில் இருப்பதுதான் சரி என்று எண்ணி குந்தவை, வானதியை உடன் அழைத்துக் கொண்டு தலைநகரான தஞ்சையை நோக்கி வருகிறாள்.
அக்கா! இப்போ ஏதற்காக திடீர் என்று தஞ்சைக்கு செல்கிறோம். அங்கு ஏதாவது விசேஷமா?
அந்த காஞ்சியிலிருந்து வந்த வாலிபன் சொன்னதையெல்லாம் கேட்டாய் அல்லவா? அதன் பின்னும் நாம் எப்படி இங்கே ஓடையில் ஓடம் விட்டுக் கொண்டும், நந்தவனத்தில் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்க முடியும்?


அதுவும் சரிதான்! பழையாறையிலிருந்து சதா சக்கரவர்த்தியை பற்றியே நினைப்பதைவிட, அதற்கு தஞ்சைக்குச் சென்று சக்கரவர்த்தியுடனே நாம் இருந்துவிடலாம்.
ஆனால், ஒன்று...
அங்கு சென்றால், பழுவேட்டரையர்களின் கட்டுப்பாட்டுக்கு நாம் உட்பட்டுத்தான் தீர வேண்டும். நம் இஷ்டம் போல் கோட்டைக்குள் வருவதும், போவதும் இயலாத காரியம்.
தாங்களுக்கும்! அவர்கள் கட்டுப்பாடு விதிப்பார்களா என்ன?


கோட்டையை பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடம் அல்லவா விடப்பட்டிருக்கிறது. அதற்கு நானாக இருந்தாலும் கட்டுப்பட்டுத்தானே ஆக வேண்டும். அதையெல்லாம் கூட என்னால் சகித்துக் கொள்ள முடியும்.
ஆனால், இந்த பழுவூர் இளையராணியின் செருக்கும், அகம்பாவத்தையும் நினைத்துதான் நான் தஞ்சை செல்ல தயங்கினேன். ஆனால், இனியும் என்னால் பொறுத்திருக்க முடியாது. அவளின் தூண்டுதலினால் சோழ நாட்டின் சிம்மாசனத்திற்காக பழுவேட்டரையர்களே சூழ்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.
அக்கா! இளவரசர்கள் இருவரும் தஞ்சைக்கு வந்துவிட்டால் அனைத்து சூழ்ச்சிகளையும் நாம் எளிதாக முறியடித்து விடலாம் அல்லவா?


நீ கூறுவது போல் அவர்கள் இருவரும் இங்கு வந்துவிட்டால் இவர்களின் சூழ்ச்சியெல்லாம் தவிடு பொடியாகிவிடும்.
அதற்குள் இவர்களுடைய வஞ்சனையும், துராசையையும் எந்த வரையில் போகும் என்று யார் கண்டது?
இவர்களுக்கு யோசனை தெரியாவிட்டாலும் அந்த ராட்சஸி நந்தினி சொல்லிக் கொடுப்பாள்.
.....ஆமாம், இவர்கள் மதுராந்தகரை எதற்கு பதவியில் அமர்த்தப் பார்க்கிறார்கள்?


தர்ம முறைக்காகவா.....? இல்லவே இல்லை.
மதுராந்தகருக்கு பட்டம் கட்டினால் அவனை பொம்மை போல் பயன்படுத்தி எல்லா காரியங்களையும் நடத்தி கொள்ளலாம் அல்லவா! அதற்காகத்தான்.
அப்புறம் நந்தினி வைப்பதுதான் சோழ சாம்ராஜ்யத்தில் சட்டமாகிவிடும்.
புறாக்கள் வானத்தில் பறந்து செல்வதை கண்ட வானதி...
அக்கா! தாங்கள் அனுப்பிய அந்த காஞ்சி வாலிபர் இந்நேரம் இலங்கை சென்றிருப்பார் அல்லவா?


அந்த வாலிபனை பற்றி இன்னும் ஒரு செய்தியும் வரவில்லை. அவன் கோடிக்கரை பக்கம் சென்றிருக்கிறான் என்று அறிந்து அவனைப் பிடித்து வர பழுவேட்டரையர்கள் ஆட்கள் அனுப்பியிருப்பதாக கேள்விப்பட்டேன்.
எனக்கு என்னவோ அந்த வாலிபர் இவர்களிடமெல்லாம் அகப்படுவார் என்று தோன்றவில்லை!
அப்படியே அவர்கள் அவனைப் பிடித்தாலும், அவனை ஒன்றும் செய்து விட முடியாது. கரிகாலர் அனுப்பிய தூதன் அல்லவா அவன்! ஏதாவது குற்றம் சாட்டிதான் தண்டிக்க முடியும்.
ஓகோ! அதற்காகத்தான் சம்புவரையர் மகன் கந்தமாறனை முதுகில் குத்தி கொல்ல முயன்றதாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அது பொய் என்பதை நிரூபித்தாக வேண்டும்.
முன்னதாக நாம் கந்தமாறனுடன் பேசி அவனிடம் இருந்து உண்மையை அறிந்து கொள்வது நல்லது.


அக்கா... அக்கா...! அவரை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை அனுப்பியிருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா?
ஆமாம்....
வேறு ஏதோ சிந்தனையில் குந்தவை.....


மிகுந்த உற்சாகத்துடன் வானதி
வந்தால் எவ்விடம் வருவார்? பழையாறைக்கா? தஞ்சாவூருக்கா?
குந்தவை சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள்....


யாவரை பற்றியடி
கேட்கிறாய்?
பொன்னியின்
செல்வனை பற்றியா?
அக்கா! அருள்மொழிவர்மரை
பலமுறை பொன்னியின்
செல்வன் என்று
கூறியிருக்கிறீர்கள். பலமுறை
உங்களை நான் கேட்டு
விட்டேன், இப்பொழுதாவது
அப்பெயர் வந்த காரணத்தை
தாங்கள் கூறுங்கள். இன்னும்
தஞ்சை கோட்டை வருவதற்கு
நேரம் இருக்கிறது அல்லவா!


நீயும் பலமுறை கேட்டுவிட்டாய் நான் சொல்லியே ஆக வேண்டும். இல்லையென்றால் நீ வேறு மயக்கம் போட்டு விழுந்து விடுவாய்.
அக்கா!


குந்தவை பிராட்டி பொன்னியின் செல்வர் கதையை கூற, வானதி கேட்டுக் கொண்டே செல்கிறாள். (நாம் பிறகு ஒரு சமயம் பொன்னியின் செல்வன் என்ற பெயர் வர காரணமான கதையை தெரிந்து கொள்வோம்.)


தஞ்சையில் வசிக்கும் ராணிகள் அனைவரும் சக்கரவர்த்திக்கு உடல்நலம் தேற வேண்டும் என்பதற்காக துர்கைக்கு பலி கொடுக்க, இரவு அர்த்த வேளை பூஜைக்கு கிளம்புகிறார்கள். ஆனால் இளவரசிகள் யாரையும் உடன் அழைத்துச் செல்லவில்லை. குந்தவை மட்டும் அவர்களுடன் செல்கிறாள்.
அக்கா! நானும் உங்களுடன் வருகிறேன்.


வேண்டாமடி கண்ணே! நீ சும்மாவே மயக்கம் போட்டு விழுவாய். நான் சொல்வதை கேள், பூஜை முடிந்ததும் அக்கா விரைவாக வந்துவிடுகிறேன்.


இளம் வயது பெண்கள் அதையெல்லாம் பார்த்தால் பயந்துவிடுவார்கள் என்று எண்ணி அவர்களை அழைத்துச் செல்வதில்லை. ஆனால், இளவரசி குந்தவையிடம் நீ வர வேண்டாம், பயப்படுவாய் என்று கூறுவதற்கு அங்கிருப்பவர்கள் யாருக்கும் துணிவில்லை. ஆகையால்தான் இளவரசி குந்தவை மட்டும் அந்த அர்த்த ராத்திரி பூஜையில் கலந்து கொள்ள வந்திருக்கிறாள்.


அங்கு துர்கைக்கு ஆட்டு கிடாவை பலி கொடுக்கிறார்கள்.
கிடா வெட்டும் சடங்கு நடக்கும் இடத்தை சுற்றி திரை போட்டிருக்கிறார்கள்.


அதே வேளையில்
குந்தவை அர்த்த வேளை பூஜைக்கு சென்றதும், வானதிக்கு உறக்கம் வரவில்லை. அப்போது அவள் தன் தந்தை சிறிய வேளாரை நினைக்கிறாள்.
அப்பா! என்னை இப்படி தனியா தவிக்க விட்டு விட்டு சென்று விட்டீர்களே?
சிறிய வேளார் மறைந்து, அதே இடத்தில் பொன்னியின் செல்வர் தோன்றுகிறார்.
ஆ! இளவரசர் பொன்னியின் செல்வா! தாங்கள் ஈழத்தில் என்னவெல்லாம் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களோ? என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லக் கூடாதா?
அதுவும் சரிதான்! எத்தனையோ ராஜகுமாரிகள் தங்களுக்காக காத்திருக்க, தாய் தந்தை இல்லாத இந்த அநாதை பெண்ணை நினைக்கத்தான் தங்களுக்கு நேரம் இருக்குமா?


இப்படியெல்லாம் நினைத்து தூக்கம் வராமல் வானதியின் மனம் பேதளித்துக் கொண்டிருக்கிறது.
தூக்கம் என்னமோ இப்போதைக்கு வரப் போவதில்லை. இரவில் சோழநாட்டின் அழகையாவது கண்டு ரசிக்கலாம்..!
என்று எண்ணி அரண்மனையின் மேல்மாடத்திற்கு ஒரு இருட்டு வழியில் செல்கிறாள் வானதி.
யாரவது வந்து என்னை காப்பாற்றுங்கள்..!
இந்த குரல் எங்கிருந்து வருகிறது?
யாருமே இல்லையா ?
என்னை யாராவது இவளிடமிருந்து காப்பாற்றுங்கள்...


யாராவது வந்து என்னை காப்பாற்றுங்கள்...!
சக்கரவர்த்தியின் அறையிலிருந்துதான் குரல் வருவது போல் தெரிகிறது. எதற்கும் சாரளம் வழியாக பார்ப்போம்.
ஆ! இது என்ன? நான் காண்பது கனவா? இல்லை நிஜம்தானா?
மூவுலகம் ஆளும் சக்கரவர்த்தியா பயப்படுவது!?


அடி பேயே! இருபத்தி நான்கு ஆண்டுகளாய் வந்து என்னை ஏன் பாடாய் படுத்துகிறாய்?
நான் வேண்டுமென்றே செய்யவில்லை.
என்னை என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள், என் மக்களை ஒன்றும் செய்து விடாதே.
நிழலில் தெரியும் உருவம் யாருடையது?


ஆ..! பழுவூர் இளையராணிதானே இவள்? இந்நேரத்தில் சக்கரவர்த்தி முன் நிழல் உருவமாக ஏன் தோன்ற வேண்டும்? நயன பாஷையில் ஏதோ கூறுகிறாளே! அது என்ன?
ஆஹா! இவரும் இதற்கு துணையா? சோழப் பேரரசில் என்னதான் நடைபெறுகிறது.


இதையெல்லாம் கண்டு, அதை பற்றி சிந்தித்து சிந்தித்து அங்கேயே மயக்கம் போட்டு விழுந்து விடுகிறாள் வானதி.
நந்தினிக்கு, தன் பிறப்பை குறித்து சந்தேகம்! ஒரு வேளை தான் சக்கரவர்த்தியின் மகளாக இருக்க கூடுமோ என்று. முன்னொரு சமயம் சக்கரவர்த்தி தன்னை பார்த்து நினைவிழந்ததை அவள் அறிவாள். இப்படி ஒரு நாடகம் நடத்தினால் ஏதாவது உண்மை கண்டறியலாம் என்று நினைத்திருக்கலாம். அதற்கு பகடைகாயாக பழுவேட்டரையரை பயன்படுத்திக் கொண்டாள். சக்கரவர்த்திக்கு ஸ்ரீஹத்தி தோஷம் இருப்பதாகவும், அதைதான் நிருபிப்பதாகவும் கூறி அவரையும் தன்னுடைய ஆட்டத்தில் சேர்த்துக் கொள்கிறாள்.


நேற்றிரவு நந்தினி நடத்திய நாடகத்தால் சுந்தர சோழர் மனம் மேலும் பாதிப்பு அடைந்தது. அதை அறிந்த இளைய பிராட்டி குந்தவை தந்தைக்கு ஆறுதல் கூற வந்திருக்கிறாள்.
இப்படிப்பட்ட வாஞ்சையுள்ள புதல்வியை பெற்றேனே, அதுவே என் பாக்கியம்!
நீ இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர, ஆள் அனுப்பியிருப்பதாக கேள்விபட்டேன்.
தேவலோகத்தில் இருந்து அமுதே வந்தாலும் சரி, எனக்கு உடம்பு இந்த ஜென்மத்தில் குணமாகப் போவதில்லை.
ஆமாம்! கொடும்பாளூர் பெண் நேற்றிரவு மூர்ச்சை அடைந்து விட்டாளாம். என்ன ஆயிற்று அவளுக்கு?
அப்பா! நேற்றிரவு அரண்மனையில் ஏதோ அழுகுரல் கேட்டு பயந்திருக்கிறாள். வேறொன்றும் இல்லை.
அம்மா! நான்தான் ஏற்கனவே கூறியிருக்கிறேனே, இந்த மாளிகையில் பேய் உலாவுகிறது என்று. நீங்கள் இங்கிருக்க வேண்டாம், பழையாறைக்கே சென்றுவிடுங்கள்.


அப்படியென்றால் தாங்களும் எங்களுடன் பழையாறைக்கே வந்துவிடுங்கள். இங்கே எதற்காக தாங்கள் இருக்க வேண்டும்?
நான் இவ்விடம் விட்டு புறப்பட்டால், அடுத்த கணம் என்ன ஆகும் என்று உனக்கு தெரியாதா?
நான் இங்கே இருப்பதனால்தான், இந்த பழம்பெரும் சோழ சாம்ராஜ்யம் சின்னாபின்னமாகாமல் காப்பாற்றி வருகிறேன்.
நான் தஞ்சாவூரை விட்டு கிளம்பிய அடுத்த நொடியே, இந்த இரு தரப்பினருக்கிடையே சண்டை மூளும்.
கிருஷ்ண பரமாத்மாவின் சந்ததிகள், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு அழிந்தது போல், இந்த சாம்ராஜ்யமும் அழிந்து போகும்.
அப்பா! தாங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. பழுவேட்டரையர்களும் சரி, கொடும்பாளூர் வேளிரும் சரி,
தாங்கள் காலால் இட்ட பணியை, அவர்கள் தலையால் செய்ய கடமைபட்டவர்கள்.


அவர்கள் அத்துமீறி நடந்தால், அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக் கொள்கிறார்கள். தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்!
அப்படிச் சொல்லாதே மகளே!
சென்ற நூறு வருஷமாக, அவர்கள் இந்த சோழ சாம்ராஜ்யத்திற்கு இணையில்லா ஊழியம் செய்திருக்கிறார்கள்.
அவர்கள் அழிந்தால், அது ராஜ்யத்திற்கு பலவீனம்தானே!
அப்பா! இந்த இரு கட்சியில், ஒரு கட்சிக்காரர்கள் தங்களுக்கு விரோதமாக சதி செய்யும் துரோகிகள் என்று தெரிந்தால்...?
ஆ ஆ...


என்ன மகளே சொல்கிறாய்? எனக்கு விரோதமாக சதியா!?
யார் செய்கிறார்கள்..?
அப்பா தாங்களிடம் உண்மையான ஊழியர்களாக நடித்து,
அதே சமயத்தில் தாங்களுக்கு எதிராகவும், தாங்கள் புதல்வர்களுக்கு எதிராகவும் சதி செய்கிறார்கள்.
யாருக்கு? யாருக்கு மகளே? உன் சகோதரர்களுக்கு பட்டம் இல்லை என்று செய்து, வேறு யாருக்கு பட்டம் கட்டப் பார்க்கிறார்கள்?


சித்தப்பா
மதுராந்தகனுக்கு!
ஹா..ஹா..ஹா..
அதை கேட்ட சுந்தர சோழர் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் அடைந்து,
படுத்திருந்த சுந்தர சோழர் சட்டென்று எழுந்து உட்கார்ந்தபடி...


ஆகா! அவர்களுடைய முயற்சி மட்டும் பலித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.
அப்பா! இது என்ன, தங்கள் புதல்வர்களுக்கு தாங்களே சத்துரு ஆனீர்களா?
இல்லை, என் புதல்வர்களுக்கு நான் சத்துரு இல்லை. அவர்களுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன்.
கேள் மகளே! இந்த சாபக்கேடு உள்ள ராஜ்யம் அவர்களுக்கு வேண்டியதில்லை.
மதுராந்தகன் மட்டும் இதற்கு சம்மதித்து விட்டால்....!
சித்தப்பா சம்மதிப்பதற்கு என்ன? திவ்யமாக சம்மதிப்பார். நாளைக்கே பட்டம் கட்டிக்கொள்ள சித்தமாகவும் இருக்கிறார்.


அப்படியென்றால் ஆதித்த கரிகாலனை கேட்க வேண்டியதுதான். அவனை கேட்டால் மட்டும் போதாது, அதற்கு உன் பெரிய பாட்டி சம்மதிக்க வேண்டும்.
பிள்ளைக்கு பட்டம் கட்டினால் தாயார் வேண்டாம் என்று சொல்வாளா?
ஏன் சொல்லமாட்டாள்? உன் பெரிய பாட்டியுடன் இவ்வளவு நாள் பழகியும் அவரை பற்றி நீ அறிந்து கொள்ளவில்லையா?
செம்பியன் மாதேவியின் வற்புறுத்தலினாலேயே நான் அன்று சிம்மாசனம் ஏறினேன். ஆதித்தனுக்கும் இளவரசு பட்டம் கட்டினேன்.
குந்தவை, உன் பெரிய பாட்டிக்கு உன் பேரில் மிக்க அன்பு உண்டு. நீ அவரிடம் நயமாக பேசி மதுராந்தகனுக்கு பட்டம் கட்டுவதற்கு சம்மதம் வாங்கிவிடு.
குந்தவை சக்கரவர்த்தி கூறியதைக் கேட்டு திகைத்து நிற்கிறாள்.
பிறகு காஞ்சிக்கு போ. அங்கே உன் அண்ணன் ஆதித்த கரிகாலனிடம் சொல்லி இந்த சாபக்கேடு வாய்ந்த இராஜ்யம் அவனுக்கு வேண்டாம் என்று சொல்லும்படி செய்துவிடு.
அப்பா! அடிக்கடி சாபம் என்கிறீர்களே, என்ன சாபம்?


குழந்தாய்! இன்று நான் மூவுலகையும் ஆளும் சக்கரவர்த்தி. என்று, நீங்கள் எல்லாம் கூறி வருகிறீர்கள். ஆனால், நான் ராஜ்யம் ஆளும் உரிமையற்றவன். ராஜ்யம் ஆளும் ஆசையும் எனக்கில்லை. ராஜகுலத்தில் பிறந்ததினால் அப்போது இலங்கையில் நடந்த யுத்தத்துக்கு நானும் உடன் சென்றேன்.




அதில் சிறிய படையின் தலைமை பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது.


நானும் உயிரைவிட எண்ணி, துணிந்து போரிட்டேன். அப்போரில் நமது சோழர் படை தோற்றது. பலர் அப்போரில் மாண்டார்கள்.
ஆனாலும், அப்போரில் நான் இறக்க வில்லை. அது என் துரதிர்ஷ்டம்.


தப்பிப் பிழைத்தவர்கள் தாய் நாடு திரும்ப ஆயத்தமானார்கள். ஆனால், எனக்கு என் கீழிருந்தவர்களை பறிகொடுத்துவிட்டு தாய் நாடு திரும்ப மனம் இல்லை.
நான் வீரப் பரம்பரையில் பிறந்தவன் என்பதால் அந்த தோல்வி என் மனதை வேதனை அடையச் செய்தது. ஆகையால் யாருக்கும் தெரியாமல் அத்தீவிலேயே இருந்துவிட்டேன். ஒரு மரத்தில் ஏறி சோழர் படை புறப்படுவதை மறைந்து பார்த்து விட்டு , அப்படியே...


அந்த மரத்தின் அடியிலேயே
அமர்ந்துவிட்டேன். அப்போது என்
அருகில் வரும் அபாயத்தை
நான் உணரவில்லை.
அப்போது ஒரு பெண் அலறிக்
கொண்டு ஓடினாள்...
அவளை ஒரு கரடி
துரத்தியது.
அவளை அது தாக்குவதற்கு
முன், நான் வேல் எறிந்து கொன்றேன்.


அப்பெண் அங்கிருந்து ஓடிவிட்டாள். நான் அவளை காத்ததை நினைத்து பெருமைபட்டேன். உண்மையில் அவள்தான் என்னை காத்தவள். மறுநாள் அவள் தந்தையுடன் வந்தாள். அவள் வாய் பேச முடியாதவள் என்பதை அறிந்தேன். எங்கள் இருவருக்கும் காதல் மலர்ந்தது. அத்தீவிலே சில காலம் தங்கிவிட்டேன்.
என்னை காப்பாற்றுவதற்காக அவள் கரடியின் கவனத்தை ஈர்த்திருக்கிறாள்.


ஒரு நாள் கடற்கரையில், கடலை பார்த்து இருவரும் ரசித்துக் கொண்டிருந்தோம்.
அப்போது தூரத்தில் ஒரு கப்பல் வருவதை கண்டோம். அருகில் வந்ததும் பார்த்தால் அது சோழ நாட்டு கப்பல்!
என் பாட்டன் பராந்தகன், என்னை தேடி அழைத்து வரும்படி கூறியதாக கூறி சோழர் படை என்னை அழைத்து சென்றது. பிரியமனமின்றி பிரிந்து சென்றேன்.


பராந்தக சக்கரவர்த்தியின் அரண்மனை.
எனது பாட்டன் பராந்தக சக்கரவர்த்தி எனது வருகைக்காக தனது உயிரை பிடித்து வைத்து கொண்டு எனக்காக காத்திருந்தார். என்னை கண்டதும் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.
சுந்தரா! எனக்கு பிறகு உன் பெரியப்பா கண்டராதித்தர் சிம்மாசனம் ஏறுவான், அவனுக்கு பிறகு இந்த சிம்மாசனம் உன்னை வந்தடையும்.இன்று முதல் சோழ நாட்டின் மேன்மையை நிலைநாட்டுவதே உன் வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டும். புரிந்ததா?


தாத்தா, தாங்கள் ஒன்றும் கவலைபட தேவையில்லை. தாங்கள் ஸ்தாபித்த சாம்ராஜ்யத்துக்கு...
ஒரு குறையும் வராமல் பெரியப்பாவுடன் சேர்ந்து, நான் பார்த்துக் கொள்கிறேன்.
குழந்தாய் உன்னுடைய காலத்தில் இந்த சோழர் குலம் மேன்மையடைய போவது கண் முன்னால் தெரிகிறது.
அப்பா! தாங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் எண்ணம் போல் எல்லாம் நல்லபடி நடக்கும்.


எம்பெருமான் ஈசனை வணங்க,
ஆலயத்திற்கு கண்டராதித்தர், அவரின்
மனைவி செம்பியன் மாதேவி, உடன்
சுந்தர சோழர் வந்திருக்கிறார்கள்.


சுந்தரா! ஈசன் எப்பெருமானை
வேண்டிக் கொள், எல்லாம்
நல்ல படியாக நடைபெறும்.


கண்டராதித்தருக்குத்தான் என்ன பாசம்! தம்பியின் பிள்ளையின் மேல்.
இருக்காதா பின்னே! சோழ குலத்துக்கு இருக்கும் ஒரே ஒரு வாரிசு நம்ம சுந்தர சோழர்தான்.
அது சரிதான். கண்டராதித்தர் இப்ப புதுசா திருமணம் செஞ்சிருக்காருல்ல, அவங்களுக்கு குழந்தை பிறக்காதுனு என்ன நிச்சயம்? பொறக்குறது ஆண் குழந்தையா பிறந்திருச்சினா, அது மேலும் சிக்கல்தானே?
நம்ம கையில என்ன இருக்கு? எல்லாம் கடவுளின் செயல்!
மக்கள் பலவாறு பேசினாலும், என் பெரிய தந்தை என்னை சோழ சிம்மாசனத்தில் அமர வைப்பதில் உறுதியாக இருந்தார்.


மந்திர சபை கூட்டி தன் நிலைப்பாட்டை எடுத்து கூறுகிறார் கண்டராதித்தர்.
என் மனம் என்றுமே அந்த ஈசனையே நினைத்துக் கொண்டிருக்கிறது. என்னை பற்றி உங்கள் அனைவருக்குமே நன்றாகவே தெரியும் எனது தந்தை பராந்தகரின் வாக்கின் படியே இப்பதவியை ஏற்க நான் ஒப்புக் கொண்டது. அதே போல் நீங்கள் அனைவரும் எனது வேண்டுகோளுக்கு இணங்க வேண்டும்.


இளவரசர் வேண்டுதல் என்னவென்று கூறினால் அல்லவோ எங்களால் உதவ முடியும்.
எனக்கு முடிசூட்டு விழா நடைபெறும் அதே தினத்தில், சுந்தர சோழனுக்கும் யுவராஜ்ய பட்டாபிஷேகம் நடைபெற வேண்டும்.
அது வருங்காலத்தில் பெரும் சிக்கலை அல்லவா ஏற்படுத்திவிடும்.


என்ன சிக்கல்? ஒரு வேளை எனக்கு ஆண் வாரிசு பிறந்தால் என்று யோசிக்கிறீர்களா?
அதுவும் சரிதானே!
கடவுள் அருளால் எங்களுக்கு ஆண் குழந்தையே பிறந்தாலும் சரி அல்லது பிறக்காமல் போனாலும் சரி, சுந்தர சோழன்தான், சோழ சிம்மாசனத்துக்கு உரியவன். அவனுக்கு பின் அவன் வாரிசுகளே வர வேண்டும்.


அதற்கு தங்கள் ராணிகள் சம்மதிக்க வேண்டுமே?


எனது இரு மனைவிகளின் விருப்பமும் அதுவே!
எனது பெரியப்பா கண்டராதித்தர் இவ்வாறு தெளிவாக கூறிவிட்டார்.


எப்படியும் திரும்ப வந்து அழைத்துச் செல்வதாக அல்லவா கூறிவிட்டு வந்தோம்.
அந்த சூழ்நிலையில் என் பாட்டனுக்கும் வாக்குறுதி கொடுத்துவிட்டேன். ஆனால், என் மனம் அவளையே நினைத்துக் கொண்டிருந்தது.


என்னை கரடியிடமிருந்து, எந்த பிரதிபலனும் எண்ணாமல் காப்பாற்றியவளாச்சே!


ஊர் பேர் தெரியாத ஊமைப்பெண் ராணியாக்கினால், நாட்டார், நகரத்தார் எண்ணி நகைக்க மாட்டார்களா?
அரண்மனை வாழ்வுதான் அவளுக்கு சரிப்பட்டு வருமா?
என்று இவ்வாறெல்லாம் எண்ணி தவித்துக் கொண்டிருந்தேன்.


அவளை பிரிந்து என் மனம் வாடியது.. அவளும் என்னை பிரிந்து வாடியிருக்க வேண்டும்!
அவள் என்னை பின் தொடர்ந்து வந்திருக்கிறாள்.
அங்கே எனக்கு பட்டாபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. அதே நேரத்தில் என் மனம் அவள் அங்கிருப்பதை உணர்ந்திருந்தது.
ஆனால் அவள் உணர்ச்சியின் மிகுதியால் அங்கிருந்து ஓடி கோடிக்கரை கலங்கரை விளக்கத்திலிருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டாள் என்று அறிந்தேன்.


காலங்கள் ஓடியது... என் மன வேதனை குறைந்திருந்தது. ஒரு நாள் நான், நீ, உன் தாய், கரிகாலன், அருள்மொழி அனைவரும் மகிழ்ச்சியாக பொன்னி நதியில் உலாவ சென்றோம்.
அப்போது அருள்மொழி சிறிய குழந்தை. படகின் முன் பகுதியில் நீங்கள் விளையாடிக் கொண்டிருந்தீர்கள். திடீரென்று அருள்மொழியை காணவில்லை. அனைவரும் பதை பதைத்துப் போனோம்.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| ஜீவித்திருத்தல் | - | உயிர் வாழ்ந்திருத்தல் |
| மனோரதம் | - | மனதில் தோன்றும் ஆசைகள் |
| திருப்பணி | - | கடவுளுக்கு செய்யும் சேவை |
| முக்காலமும் | - | மூன்று காலம்<br>1. சென்ற காலம்<br>2. நிகழ்காலம்<br>3. வருங்காலம் |
| சத்துரு | - | எதிரி |
| ஹிமோத்கிரி | - | இமய மலை |
| ஆபத்துதவிகள் | - | பாண்டிய மன்னர்களின் மெய்க்காவலர்கள் |
| அம்பாரி | - | யானை மீது சவாரி செய்ய அமரும் பெட்டி |
| தேவாரம் | - | சிவனைப் போற்றிய பாடல் |
| மாரீசன் | - | இராமயணத்தில் வரும் கதாபாத்திரம் (மாயமான்) |
| கட்டாந் தரை | - | புல் மற்றும் செடிகள் முளைக்காத தரை |
| அபயக்குரல் | - | அபாயம் ஏற்படும் பொழுது மற்றவர்களை துணைக்கு உதவி கேட்டு அழைக்கும் குரல் |
| போஜனம் | - | உணவு |

# அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| வௌவால்கள் | - Bat |
| பித்து பிடித்திருக்கிறது | - பைத்தியம் பிடித்திருக்கிறது |
| கந்தகம் | - அமிலம் (Sulphur Acid) |
| பிரம்மை | - கற்பனை (Illusion) |
| பழைய சாதம் | - முன் நாள் வடித்த சோற்றில் நீருற்றி அடுத்த நாள் உண்ணும் உணவு |
| மௌடீகன் | - புரிந்துக் கொள்ள முடியாதவன் |
| மந்தி | - குரங்கு |
| அசடு | - ஏமாளி |
| பழந்தமிழர் மரபுபடி களவு திருமணம் | - பழந்தமிழர் வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் பெற்றோர் தலையீடு இல்லாமல் காதல் புரிந்து இல்லற வாழ்க்கை நடத்தினர். தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் பிரியேன் என்று உறுதிமொழி கூறி உடன்பட்டனர். இவ்வுறுதி மொழிக்கு அவ்விருவர் மனச்சான்று தவிர வேறு சாட்சி கிடையாது. |
| பாய்மரம் | - படகு அல்லது கப்பலை காற்றை பயன்படுத்தி பயணம் செய்ய உதவும் பொருள். (Yacht) |
| நடுநிசி | - நடு இரவு |
| ஐப்பசி, கார்த்திகை | - தமிழ் மாதங்கள் (மழைக் காலம்) |

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| வாடைக் காற்று | - | குளிர் காற்று |
| பாவி | - | பாவம் செய்தவன் |
| சுரக்குடுவை | - | சுரக்காயை குடைந்து பதப்படுத்தி செய்த பாத்திரம் |
| சப்தரிஷி | - | வானத்தில் முக்கிய நட்சத்திரங்களின் கூட்டமைப்பு (Star alignment in the sky) |
| நாகத் தீவு | - | இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏழு தீவுகளில் ஒன்று |
| உபகாரம் | - | உதவி |
| சோழ சைன்யம் | - | சோழர் படை |
| பூதத்தீவு | - | இலங்கையில் அமைந்திருக்கும் ஒரு தீவு |
| நயன பாஷை | - | தான் சொல்ல நினைப்பதை வார்த்தைகள் இல்லாமல், அசைவுகளின் மூலம் எதிரில் இருப்பவர்களுக்கு புரிய வைப்பது |
| மாதோட்டம் | - | இலங்கை தீவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிறப்புடன் விளங்கிய துறைமுகப் பட்டினம். |

# அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| தெரிஞ்ச கைக்கோளர் படை | - | நெசவு செய்யும் சமூகத்தினர். இவர்கள் சோழர் படையில் முக்கிய பங்காற்றியுள்ளனர். |
| இலிங்கத்திட்ட | - | சைவர்கள் |
| சாக்கிய மதம் | - | புத்த மதம் |
| அனுராதபுரம் | - | இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள புகழ் பெற்ற நகரம் |
| வஞ்சனை | - | நெறி தவறி ஒரு பக்கத்திலே பற்று வைத்தல் |
| துராசை | - | கெட்ட ஆசை |
| ஸ்ரீஹத்தி தோஷம் | - | பெண்களுக்கு கெடுதல் செய்தால் ஏற்படும் தோஷம் |
| வாஞ்சையுள்ள | - | அன்புள்ள |